www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

டிச.03–09,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 130




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஆரம்பிக்கவேண்டிய போர்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
பொல்னியாவும் ருவாண்டாவும்
நம் கண் எதிரே
தோன்றும் என்று
எவர்தான் நினைத்திருப்பர்....?

ஒட்டிய வயிறும்
துருத்திய எலும்புமாய்
வீதிகளில் தங்கள்
வாழ்க்கையைத் தேடும்
நிர்க்கதி நிலை
நேரில் விரியும் என்று
யார்தான் நினைத்தார்கள்?!

ஆனால்-நினைத்திருக்க வேண்டும்
பாழும் யுத்தம்
அனைத்தையும் வீழ்த்தும்
என்று எதிர்பார்த்திருக்க வேண்டும்!

யுத்தத்தில் ஈடுபடுவோர்
தங்கள் வெற்றிகளைக்
கொண்டாடலாம் கொடி நட்டலாம்!

எந்தக் கொடி-
ஏற்றப்பட்டாலென்ன......
யுத்தம் பிடுங்கிப் போட்ட
மக்கள் குடியின்
எதிர்காலம் என்ன?

கொடிக்கம்பங்களை
எப்போது வேண்டுமானாலும்
நட்டுக் கொள்ளலாம்.
கெட்டழிந்து போயுள்ள
குடி மக்கள் வாழ்க்கையை
நிமிர்த்தி நிறுத்துவதுதான்
இப்போது முக்கியம்!

யாழ் நகரைக் கைப்பற்றுவதோடு
யுத்தம் முடிந்துவிட்டதாக நினைப்பது தவறு.
எதிர்கால நிகழ்வுகள்
அதனை உணர்த்தும்.

புற்றுநோய்க்குத் தேவை
அறுவைச் சிகிச்சை.
யுத்த வெற்றிகள்
புண்ணுக்கு புனுகு பூசும்
நடவடிக்கைகள் மட்டுமே!

அரசியல் தீர்வுதான்
அறுவைச் சிகிச்சையாகும்.
சிக்கலாகும், நெருக்கடியாகும்
என்று நினைத்து
காலத்தைக் கடத்துவது
நாட்டுக்கு நலலதல்ல!

எப்பாடுபட்டாவது
யாழ் நகரைப் பிடித்தாகவேண்டும்
என்று இராணுவரீதியில்
அரச காட்டிய உறுதியை
அரசியல் ரீதியிலும்
காட்டினால் என்ன?

எவர் தடுத்தாலும்
நியாயமான அரசியல் தீர்வு
கண்டே தீருவது என்று
காரியம் செய்தால் என்ன?

அதனைச் செய்தால்
இந்த நாட்டின் சரித்திரத்தில்
இன்றைய ஆட்சியாளரின்
சாதனை சாகாவரம் பெறும்.

யுத்த வெற்றி தோல்விகள்
நிரந்தரமல்ல;
விழும் போது வசையும்
எழும் போது இசையும்
பொழியலாம்-மறையலாம்!
இரண்டுமே நிரந்தரமல்ல.

யுத்தத்துக்கு முடிவு
யாழ் நகரில் ஏற்படாது;
இனப்பிரச்சனையின் தீர்வில்
தங்கியிருக்கும் விடயம் அது.

யாழ் குடாநாடு
படையினரின் முழுமையான
கட்டுப்பாட்டில் இருந்தபோதுதான்
ஆயுதப் போராட்டம் வளர்ந்தது.

அது வளரக் காரணமான
காரணிகள் மறையவில்லை.
எனவே- படையினர்
யாழ் நகரைக் கைப்பற்றியது
எரியும் தீயை
அணைத்துவிடும் என்று
கருதுவது தவறு.

அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டியது
அரசியல் போரை!
இனவாதிகளோடு நடத்தும்
போராக அது இருக்க வேண்டும்.

அரசியல் போரில் உறுதிகாட்டி
அரசியல் தீர்வை
மக்களின் இதயங்களில்
பொறிக்கட்டும்-
அதுதான் வெற்றி!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை. என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## அந்தரங்கமான தர்மம்

தானதர்மம் செய்வதற்கு பலரும் முன் வருவார்கள். காரணம்: விளம்பரம் கிடைப்பதற்காக; வாக்குகள் பெறுவதற்காக; புகழ் அடைவதற்காக.

ஆனால்..... பரிசுத்த வேதாகமத்தில் உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தர்மம் செய்ய வேண்டிய விதத்தை பின்வருமாறு கூறினார்:

"நீயோ தர்மம் செய்யும் போது உன்
தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு உன்
வலது கை செய்வதை இடது கை
அறியாமலிருக்கக் கடவது."

(மத்:6:3)

"அப்போது அந்தரங்கத்தில் பார்க்கிற
பிதா வெளியரங்கமாய் பலனளிப்பார்"

(மத்:6:4)

எனவே, தர்மம் செய்ய நாடும் அன்பான உள்ளங்களே...! உங்கள் உண்மையான தர்மத்தை ஊர் ஊராய் பறைசாற்றாமல், மேடைக்கு மேடை உரைக்காமல் இயேசுவின் வழிகாட்டற்படி, அந்தரங்கமாகச் செய்து, எல்லாம் வல்ல இறைவன் தரும் பலனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ரூபராஜ் -தேவதாசன்-கெங்கல்ல.

## ஆன்மீகம்



### நல்வழி காட்டும் நபிமொழிகள்

★ மனிதனுடைய பெருந்தன்மை அவனுடைய நற்குணங்கள்தான்.

★ எல்லாவற்றிலும் நல்ல குணங்கள் உள்ளவரே மனிதர்களில் சிறந்தவராவார்.

★ கெட்ட குணங்கள் இருப்பது கெட்ட முடிவையே தரும்.

★ நிச்சயமாக நன்மை செய்யத் தூண்டுபவர் நன்மை செய்தவர் போலாவார்.

★ பேசுவதற்கு முன்பு ஸலாம் கூறுங்கள்.

★ ஸலாம் சொல்வதில் யார் முந்திக்கொள்கின்றாரோ நிச்சயமாக அவரே உங்களில் நல்லவர்.

★ பெரியவர்களிடத்தில் கண்ணியம் செலுத்தாதவர் நம்மைச் சேர்ந்தவரல்ல.

★ உண்மையான அடக்கமே எல்லாக் குணங்களுக்கும் பிறப்பிடமாக இருக்கிறது.

★ தன் நாவை அடக்குவோனுடைய பலவீனத்தை இறைவன் மறைப்பான்.

ஏ.எச்.ஏ.ஹுஸைன்-ஏறாவூர்.

## கவிதைப்போட்டி இல-127

### பரிசுக்குரிய கவிதை

### என்ன பெயர்?

அரியாலை அகதியா....?
அம்பாறை அனாதையா....?
பெயரென்ன-செல்வியா....?
பேபி நோனாவா....?
போர் முடியட்டும்
புதுப் பெயர் வைத்திடுவோம்!

சதா கணபதி, உடபுஸ்ஸலாவை

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



**அனுமதி**

கண்மணி
நில்லு....!
காரணம்
சொல்லு!
பொம்மையைச்
சோதிக்க
அனுமதி
கொடு!

ரோஜா ஆனந்தராஜா,
ராகலை.

**நிழலும் நிஜமும்.**

"நிஜங்களைத் தொலைத்துவிட்டு
நிழல் மட்டும் எனக்கெதற்கு?
இரவுகளைத் தொடரவிடு!
இனியும் ஒரு விடிவு எதற்கு?"

ரி.ஜுட்-காரைதீவு-05.

**குருதி கண்டோ**

பொம்மை தந்த அம்மாவென்று
விம்மி விம்மி அழுவதென்ன
சும்மா நின்ற அம்மா மீது
கடுங் குருதி வடிதல் கண்டோ.

ரி.ரமணி-வாழைச்சேனை.

**தொலைதல்**

வளரும் பயிர்
வசந்தத்தின்
முகவரியை
தொலைத்து
விட்டது!

ஏ.சி.எம்.நிஸார்,
பொகவந்தலாவ.

**யுத்த அறுவடை**

தெருவில் அன்னை சிதைவோடு,
தெரியா மழலை தவிப்போடு,
கையில் பொம்மை துணையோடு,
கண்கள் கங்கை நதியோடு,
தேம்பும் சின்ன மனதோடு,
தெருவில் தனியாய் திகைப்போடு!

எஸ்தா அகல்யா ஆத்மராஜா, கோட்டைக்கல்லாறு-01.

**துணை**

நாட்டை விட்டு ஓடும்போது
நான் எடுத்த சொத்து!
நான்கு இனமும் பாருங்கோ...
நடுரோட்டில் முத்து.

ரி.திலீபன்-தம்பிலுவில்-02.

## கவிதைப் போட்டி இல-130



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 09.12.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 130
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.

**ஏக்கத்தின் தவிப்பு**

பெற்றோர் மடிந்துவிட
பிஞ்சுமனம் விம்மியழ
ஏக்கத்தின் பரிதவிப்பில்
எஞ்சியது ஒரு பொம்மை!

தெ.லோஜனா-கொழும்பு-14.

**அம்மா வேண்டும்**

அப்பா எனக்கு
பொம்மை வேண்டாம்....
வெளிநாடு போன
அம்மா வேண்டும்....!

இ.வே.வனிதா-கிரான்.

**கண் கசக்கவைக்கிறதே**

வேதாளம் முருங்கையிலே!
விரைந்திங்கு ஏறியதால்
குதங்களிலே புகை ஓங்கி
காரிருளை அழைக்கிறதே!
களங்க மற்ற எந்தனுக்கும்
கண் கசக்க வைக்கிறதே

தர்சிக்கா கனகசிங்கம், மட்டக்களப்பு.

## வாசகர் சாலை




வாரந்தோறும் பல்சுவை விருந்தளிக்கும் தினமுரசுக்கு இனியவாழ்த்துக்கள். முரசு தாங்கி வரும் போட்டிகளுக்கு முகவரி, மற்றும் கூப்பன் என்பனவற்றை வெட்டி ஒட்டுமாறு கேட்கப் படுகிறது. இவ்வாறு வெட்டுவதால் முரசை சேகரிக்கும் என்போன்ற வாசகர்கள் வெட்டப் படும் பகுதியின் பின்பக்கமுள்ள பயனுள்ள விடயங்களை இழக்க வேண்டியுள்ளது. ஆசிரியர் அவர்களே கவனிப்பீர்களா?

கு.சண்முகம்-களுவன்கேணி, செங்கலடி.

இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ராபின் பற்றிய இராஜதந்திரியின் அலசல் ஒரு ப்ளஸ் பாயின்ட். அதிலும் அவரது வார்த்தைகளை தாரகமந்திரமாக்கியது வரவேற்கத்தக்கது.

கேதீஸ்வரன்-கண்டி.

அன்பின் முரசே!

நீ தரும் "சுயசோதனை" ஒரு மனிதன் தன்னை திருத்திக்கொள்ள நல்ல வாய்ப்பாக உள்ளது. மற்றும், 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' அற்புதனின் 'அரசியல் தொடர்' வெகுஜோர். இராஜதந்திரியும் அதிரடி அய்யாத்துரையும் முரசுக்கு மேலும் மெருகூட்டுகின்றார்கள்.

நீ.சி.பாபு-இராகலை-அல்கரனோயா.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ள வரை பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:

பா. செந்தூரன், அக்கரைப்பற்று-08.
சரவணேஸ் டெவிசி, கலவான.
ஏ.ஆர்.எம். இக்பால், கிண்ணியா-02.
ஆர். முரளிதரன், இறக்குவானை.
ஏ. கனிசியஸ் ஜோன், கொழும்பு-15.
ஜெ. பத்மசிறி, திருக்கோணமலை.
திருமதி ஜெ. ஜெகதீஸ்வரி, லிங்கநகர்-திருமலை.
கே.வி. அருணாசலம், விண்டுல்ல.
எம்.எஸ். சசிகுமார், இங்கிரிய.
கருப்பையா இரவீந்திரன், வருவபிட்டியூர்.
ரஜி. இர்ஷாட், குருநாகல்.
ஏ. நிஸாம், அநுராதபுரம்.
எம். சிவகுமார், காலி.
டோனிதேவா, மதுகம.
மர்ஜீனா ஜெமால்தீன், தெல்தோட்டை.
முகமட் பாசில், தலவாக்கல.
நவ்பியா-ரினோஸா, மீதெனிய-வரக்காமுரை.
எம். சர்லா, கிண்ணியா.
தி. திலக்ஷன், பண்டாரவளை.

அரசியல் அலசல், எக்ஸ்ரே ரிப்போர்ட் இரண்டும் நிகழ்கால நடப்பை தரும் விதம் அலாதி. ராஜதந்திக்கும், நாரதருக்கும் பாராட்டுக்கள். வை.ஜெகநாதன், கொழும்பு-07.

கார்லோஸ் தொடரில் வரும் சம்பவங்கள் நம் நாட்டிலும் நடந்துவிடுகின்றனவே! ரசிகன் ஜாக்கிரதை! அடையாள அட்டை இருக்கிறதா? எம். சாமிலா, கண்டி.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் சம்பவங்களை யார் சொல்லிக் கேட்டாலும், முரசு வந்து சொன்னபின்தான் நம் வீட்டில் நம்புகிறார்கள். செ. ரகுராம், பதுளை.

'விலை உயர்ந்த குற்ற'த்தில் பட்டுக்கோட்டையார் சஸ்பென்சையும் ஒரு நயமாகத் தருகிறார். கதையைக் கொண்டு செல்லும் வேகமும் அருமை. எல். கலா, குருநாகல்.

என் மனதை சொக்க வைத்த இனிய முரசே! நீ தரும் அனைத்து தகவல்களும் சூப்பர். உனக்கு என் மனமார்ந்த இனிய நன்றி.

எம். ரவிந்திரராஜ்-இராகலை.

'சிந்தியா பதில்கள்' சிந்திக்க வைக்கின்றன- சபாஷ். பட்டுக்கோட்டை பிரபாகர் வாசகர் மனங்களை பறக்கவைக்கிறார்-கற்பனையின் உச்சத்திற்கு.

ஆரிகா ஆதும்பாவா-கல்முனை-06.

'சினிமாவும் காதலும்' எனும் தலைப்பிலான கட்டுரை சூப்பர். வழங்கிய லேடிஸ் ஸ்பெஷலுக்கும் என் அன்பிற்குரிய முரசிற்கும் சபாஷ்.

பாவுல் பங்கிராஸ்-பதுல்பிரிங்வெளி.

அறுசுவை இருப்பது உண்மைதான். ஆனால் நம் தினமுரசு தருவதோ பலவகைப்பட்ட சுவை. பக்கத்துக்குப் பக்கம் தெவிட்டாத இன்சுவை. இருபது பக்கங்கள் தானப்பா- வெகு சுப்பர்யா!

சிவாஜினி சதாசிவம்-மாத்தளை.

வானதி எழுதிய 'நித்யா-சராசரிக் காதலி' என்ற கதை தற்கால காதலர்களின் நிலையினை எடுத்துக் காட்டியது. பெண்களின் மனவுறுதியை எடுத்துக் காட்டியது. அருமையிலும் அருமை. தினமுரசின் ஒவ்வொரு அம்சமும் தெவிட்டாத அமுதாகவே உள்ளது.

எஸ்.சுகந்தி-உப்புவெளி, திருகோணமலை.

ரசிகனின் இலக்கிய நயமோ அருமை. அருமையிலும் ஒரு புதுமை. புதுமையிலும் ஓர் இனிமை. அதை தந்துகொண்டிருக்கும் தினமுரசுக்கு வாழ்த்துக்கள்.

அஜித்காந்த்-முந்தல்.



படிப்பகம்

www.padippakam.com

# யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தாக்கும் திட்டம்

# மாங்குளம் பகுதியை முக்கிய நகராக்கும் யோசனை

# வெளியுலகில் அரசுக்கு சாதக நிலை

**யாழ் நகரைப் படையினர் கைப்பற்றினாலும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தொடர்ந்து கெரில்லாத் தாக்குதலை நடத்தும் வகையில் புலிகளின் தாக்குதல் பிரிவுகள் அங்கு மறைந்திருக்கலாம் என்று தெரியவருகிறது. படையினரின் முற்றுகைக்குட்பட்ட பகுதிகளுக்குள் தங்கியிருந்து தாக்குதலைத் தொடர்வது மூலம், படையினரது நடவடிக்கைகளை யாழ் குடாநாடு முழுவதற்கும் விஸ்தரிக்கப்படாமல் தடுப்பதே புலிகளின் நோக்கம் என்று கூறப்படுகிறது.**

யாழ்ப்பாணத்தின் மத்திய பகுதியில் இருந்து வெளியேறும் தரைப்பாதைகள் படையினரின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன. அதனால் கடல் வழிப் பாதைகளை மட்டுமே முற்றுகையில் இருந்து தப்பிச் செல்லும் பாதைகளாக புலிகள் அமைப்பினர் பயன்படுத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் படையினரின் முற்றுகைக்குள்ளான பகுதிகளில் இருந்து குருநகர் கடல் வழியாக தற்போது புலிகள் அமைப்பினரால் வெளியேறிச் செல்ல முடியும்.

குருநகரில் இருந்து கிளிநொச்சிக்கு கடல் பாதையால் செல்ல முடியும். குருநகர் பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் வருமானால் அந்தப் பாதையும் தடைப்பட்டுவிடும்.

அவ்வாறான நிலையில் முற்றுகைக்கு உள்ளான பகுதிகளில் நீண்டகாலம் தங்கியிருக்கக்கூடிய வசதிகளோடு புலிகளின் அணிகள் அங்கு மறைந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அவ்வாறு மறைந்திருக்கும் அணிகளோடு கரும்புலிகளும் இருக்கலாம் என்றும் சில தகவல்கள் கூறுகின்றன.

### வெடிவிபத்து

அதேவேளையில் பாரிய வெடி குண்டுத் தாக்குதலுக்கான தயாரிப்புக்களை புலிகள் மேற்கொண்டிருந்த போது வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில்தான் வெடிவிபத்து ஏற்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

'புலிகளின் குரல்' வானொலியும் வெடி விபத்து நடைபெற்ற செய்தியை கடந்தவாரம் உறுதிப்படுத்தியிருந்தது.

கடந்தவாரம் முதல் புலிகளின் குரல் வானொலி மீண்டும் தனது ஒலிபரப்புக்களை ஆரம்பித்திருந்தது. அடிக்கடி சோக இசையும் ஒலிபரப்பப்பட்டது.

புலிகள் அமைப்பின் புதிய தளப் பிரதேசமாக வன்னிப் பகுதி மாறியுள்ளதை அடுத்து, மாங்குளம் பகுதியை முக்கிய நகரமாக்க புலிகள் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை புலிகள் அமைப்பினரின் வெளிநாட்டுக் கிளைகள் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன.

போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசைக் கோருமாறு வெளியுலக இராஜதந்திர வட்டாரங்களிடம் அவை கோரிவருகின்றன.

### பிரபாவின் செய்தி

"உலகெங்கும் உள்ள தமிழர்கள் தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டும் என்றும், சர்வதேச அரங்கில் அனுதாபத்தை உருவாக்க வேண்டும் என்றும் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தினச் செய்தியில் தெரிவித்திருந்தார்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு பிரபாகரன் விடுத்த செய்தியை வெளிநாடுகளில் உள்ள புலிகள் அமைப்பின் கிளைகள் பிரசாரப்படுத்தி வருகின்றன.

"படைபலத்தை அதிகரித்து போராடுவது மூலம் மட்டுமே விமோசனம் ஏற்படும். இதனை புலிகளுக்கு எதிரான போர் என்று அரசாங்கம் கூறினாலும் இது புலிகளுக்கு மட்டும் எதிரான போரல்ல" என்று கூறிய பிரபாகரன் தாம் தொடர்ந்து போராடுவோம் என்றும் கூறியிருந்தார்.

### வெளியுலகப் பிரசாரம்

இதேவேளையில் ஐரோப்பிய பாராளுமன்றம் போன்ற சர்வதேச அமைப்புக்கள், மற்றும் மேற்குலக நாடுகள் பல, இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவை என்றே கருத்துக் கொண்டுள்ளன. புலிகள் அமைப்பினரே முதலில் போர் நிறுத்தத்தை மீறினார்கள் என்ற அடிப்படையில்தான் அவ்வாறான கருத்து தோன்றியிருக்கிறது.

"போர் நிறுத்தத்தை ஏன் அவசரப்பட்டு முறித்தீர்கள்" என்ற கேள்விதான் புலிகளது வெளிநாட்டு கிளைகள் எதிர்நோக்கும் பிரதான கேள்வியாக இருக்கிறது. அதே சமயம் போர் நிறுத்தத்தை புலிகள்தான் முதலில் மீறினார்கள் என்பது சர்வதேச அரங்கில் அரசுக்கு பலத்த சாதகமாக இருக்கிறது.

கடந்த கால அரசாங்கங்களைவிட தற்போதைய அரசாங்கம் வெளியுலகப் பிரசாரத்தில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது. கூடிய அனுகூலங்களையும் பெற்றுள்ளது என்று மேற்குலக இராஜதந்திரிகள் பலர் கருத்து வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## வெளிநாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் மீது புலிகள் பாய்ச்சல்!

# விழிப்பாயிருக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தல்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் "விழிப்புணர்வு" என்ற தலைப்பில் உளவு நிறுவனங்களின் ஊடுருவல் குறித்து துண்டுப் பிரசுரமொன்றை புலிகள் மக்களுக்கு விநியோகித்துள்ளனர். ஒழிந்திருந்து ஒற்றுக்கேட்கும் விதத்தை விளக்கும் சித்திரமும் அதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

"நவீன தொடர்பு சாதனங்களின் அறிமுகமும், தொடர்புத் துறையில் ஏற்பட்டுவரும் பிரமாண்டமான வளர்ச்சியும் உலகத்தை ஒரு கிராமமாகக் குறுக்கி வருகின்றன என்பது உண்மைதான். இந்த உண்மைக்குப் பின்னாலேயே இரகசிய உளவு நிறுவனங்களின் ஒற்றாடலும் புதைந்து கிடக்கிறது என்பதை கவனத்திற் கொள்ளவேண்டும். பெரிய புலனாய்வு நிறுவனங்களான அமெரிக்க உளவு நிறுவனம் CIA, சோவியத் ரஷ்யாவின் KGP, மற்றும் இந்தியாவின் RAW,போன்றவற்றின் செயற்பாடுகள் எமது மக்களை எவ்வளவிற்கு அலைக்கழித்து இருக்கின்றன என்பது கண்முன் கண்ட வரலாறாகும். கண்ணுக்குப் புலனாகாமலும், சிந்தைக்கு எட்டாமலும் செயற்படும் இப் புலனாய்வு நிறுவனங்களின் பணிகள் குறித்து நம்மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. இதனாலேயே முன்யோசனையின்றி வெளியிடப்படும் தகவல்கள் எதிரிகளை எட்டிவிடுகின்றன. ஊடுருவி வரும் எதிரிகளின் உளவாளர்கள் பற்றி நம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளின் நடமாட்டங்கள், அவர்களின் செயற்பாடுகள், திட்டங்கள், சிந்தனைகள் போன்றவை தொடர்பான தகவல்களை வெளியிடாமல் இருப்பது மக்களின் கடமையாகும். அதேவேளை எதிரிகள் அனுப்பும் ஊடுருவற்காரர்கள் குறித்து புலிகளுக்குத் தகவல் வழங்கும் முக்கிய ஊற்றுமூலமாகத் திகழ வேண்டியது மக்களின் பொறுப்பாகும். இத்தருணத்தில் மக்களின் தாயக நேசமும், தாயகப் பற்றும் துல்லியமாகப் புலப்படுத்தப்படும்போது வெற்றிக் கனியை எட்டிப் பிடிப்பது இலகுவானது" என்று அத்துண்டுப் பிரசுரம் குறிப்பிடுகின்றது.

இது ஒருபுறமிருக்க; மக்கள் தொண்டர் படையைச் (CVF) சேர்ந்த ஒருவர் தனது கடமை நேரம் தவிர்ந்த வேளைகளில் ஏறாவூர் தளவாயில் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார் என்பதனால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

## தினம் தோறும் இடம்பெயர்வு

அண்மைய நாட்களில் கிளாலிக் கடல் ஏரிவழியாகப் பெருந்தொகையான குடாநாட்டு மக்கள் கிளிநொச்சி நோக்கி இடம் பெயர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு இடம் பெயரும் மக்கள் தம்முடன் அத்தியாவசியப் பொருட்கள் தவிர்ந்த வீட்டுக் கூரைகள், தடிகள், கைமரங்கள், தகரங்கள் போன்ற பொருட்களையும் படகுகளில் கட்டியிழுத்துக் கொண்டு செல்வதைக் காணமுடிகின்றது.

யாழ் வாசி ஒருவர் தமது கார் ஒன்றினை ரு 20.000/- போக்குவரத்துக் கூலியாகக் கொடுத்து கிளிநொச்சிக்கு கொணர்ந்துள்ளார்.

இரவு பகலாகக் கிளாலிப் படகுச் சேவை நடைபெறுகின்றது. கடந்தவாரத்தில் நாளொன்றுக்கு 5 ஆயிரம் பேர்வரை யாழ் குடா நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்து கிளிநொச்சி வரும் மக்களுக்கு உணவு தவிர்ந்த ஏனைய பொருட்களை அகதிகளுக்கான சர்வதேச அமைப்பான யு.என்.எச்.சி.ஆர். வழங்கி வருகின்றது. மருந்துப் பொருட்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் அதன் இலங்கைக் கிளையும் கொடுத்து வருகின்றனர். அரச சார்பற்ற நிவாரண நிறுவனங்கள் தற்போது நேரடியாகப் பொருட்களைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# புதிய உபவேந்தர் நியமனம்

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது புதிய உபவேந்தராக மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர் அருள்தந்தை கைடி பொன்கலன் இராஜேந்திரம் நியமிக்கப் பட்டுள்ளார்.

வண இராஜேந்திரம் மதுரை திரு இருதயக் கல்லூரியில் மெய்யியல் கலைமானி பட்டம் பெற்றவர் .அமெரிக்க சென் லூசியஸ் பல்கலைக்கழகத்தில் முதுமானி (வேதாந்த சாஸ்திரம்) நியூயோர்க் போட்ஹாம் பல்கலைக் கழகத்தில் முதுமானி-விஞ்ஞானம் (உயிரியல்), கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பூச்சியியல் ஆய்வில் (Entomology) கலாநிதிப் பட்டம் பெற்றவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறை இணைப்பேராசிரியராகப் பணியாற்றிய வண இராஜேந்திரம், வேல்ஸ் பல்கலைக்கழகப் பகுதிநேர பேராசிரியருமாவார்.

புதிய உபவேந்தர் விரைவில் பதவியேற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. தற்போது மூடப்பட்டிருக்கும் கிழக்கு பல்கலைக் கழகம் டிசம்பர் நடுப்பகுதியில் திறக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை கடந்த (நவம்பர்) 7ம் திகதி புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட முன்னாள் உப-வேந்தர் பேராசிரியர் சந்தானம் இச் செய்தி எழுதும்வரை விடுவிக்கப்படவில்லை.

# இரு தரப்பு மோதலில் மனித உரிமைகள் பாதிப்பு

## அமெரிக்க ராஜாங்க அதிகாரி தெரிவிப்பு

இலங்கையில் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நடைபெறும் மோதலில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மக்களின் சுதந்திரமான நடவடிக்கைகளுக்கு இடம் தரப்படுவதில்லை. தாமாகவே நீதி விசாரணை செய்து புலிகள் தண்டனை விதிக்கின்றனர். இவ்வாறு அமெரிக்க ராஜாங்க இலாகாவின் உயர் அதிகாரியான ஈஜிப்சன் லான்ஃபெர் கூறியுள்ளார். அமெரிக்காவின் ஆசிய பசுபிக் தொடர்பான சர்வதேச உறவுகளுக்கான உபகுழுவின் முன்னிலையில் அவர் உரையாற்றினார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது: "விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை முறியடிக்கும் முகமாகவே இலங்கை அரசு கடினமான தாக்குதல்களை ஆரம்பித்தது. தங்களுடைய கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வெளியேறிச் செல்ல வேண்டும் என்று புலிகள்தான் கேட்டுக் கொண்டனர்.

இலங்கை அரசு தற்போது முன்வைத்துள்ள சமாதானத் தீர்வு யோசனைகள் அந்நாட்டில் நிலவும் நெருக்கடிகளைத் தீர்த்து வைக்க இதுவரை முன்வைக்கப்பட்ட திட்டங்களைவிட சிறப்பானதாகும். இது ஒரு துணிகரமான முறை என்றே நாம் கருதுகிறோம்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக புலிகளை ஏற்க முடியாது. தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில், பேச்சுவார்த்தை மூலம் அதிகாரப் பரவலாக்கலை விரும்பும் கட்சிகள் பல இருக்கின்றன.

நீண்டகாலமாக இலங்கையில் நிலவும் நெருக்கடிகளை தீர்க்க பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவெடுப்பதே ஒரே வழியாகும். ஒன்றுபட்ட இலங்கையில் சகலரும் உரிமை பெற்று வாழ்வதே சிறந்த மார்க்கமாகும். இந்த அடிப்படையிலேயே அரசாங்கம் புலிகளுடன் பேசவேண்டும் என்ற கொள்கையை அமெரிக்க அரசாங்கம் ஆதரித்து வந்துள்ளது." என்றும் திரு. ஈஜிப்சன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை முறித்துக் கொண்டமை வருத்தத்தை அளித்தது என்றும் அவர் கூறினார்.

# உதவி நிறுவனங்களை அழைத்து உதவுமாறு வேண்டுகோள்!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற உதவி நிறுவனங்களையும், சமூக நல ஸ்தாபனங்களையும் 'தமிழீழப் பொருளாதார அபிவிருத்தி'க் கலந்துரையாடலுக்கு வருமாறு புலிகள் அழைத்திருந்தனர்.

கொக்கட்டிச் சோலையிலுள்ள புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல் பிரிவுக் காரியாலயத்திலேயே சந்திப்பு நடத்தப்பட்டது. புலிகளின் அரசியல் துணைப் பொறுப்பாளர் கரிகாலனின் ஏற்பாட்டிலேயே கூட்டம் கூட்டப்பட்டது. சென்றமாதம் 15ம் திகதி இக் கூட்டத்தை புலிகள் நடத்தியிருந்தனர்.

இருப்பினும், சில அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூட்டத்திற்குச் செல்லவில்லை என்று தெரியவருகிறது.

# தயாராக இருக்கும்படி அறிவித்தல்

யாழ் குடாநாட்டில் வடமராட்சிப் பகுதியில் உள்ள மக்களை இடம்பெயரத் தயாராக இருக்கும்படி புலிகள் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் வடமராட்சியிலும் தங்கியுள்ளனர். யாழ்நகரை படையினர் கைப்பற்றிவிட்டு, வடமராட்சியை நோக்கியும் நடவடிக்கைகளைத் தொடரலாம் என்று எதிர்பார்த்தே புலிகள் அவ்வாறு அறிவித்துள்ளனர்.

# நகைகளை வாங்கத்தடை

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ள மக்கள் தமது பணத் தேவைக்காக நகைகளை விற்று வருகின்றனர்.

அவ்வாறு விற்கப்படும் நகைகளை தனியாரிடம் விற்பனை செய்ய வேண்டாம் என்றும், தமது நிறுவனங்களில் கொடுத்துவிட்டு பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் புலிகள் கூறிவருகின்றனர். பொதுமக்களது நகைகளை தனியார் கொள்வனவு செய்வதையும் புலிகள் அமைப்பினர் தடை செய்துள்ளனர்.

இதனையடுத்து பொதுமக்கள் நகைகளை புலிகளிடம் கொடுத்துவிட்டுப் பணம் பெறுகின்றனர். ஒரு பவுண் நகைக்கு நாலாயிரத்து ஐநூறுவரை புலிகளினால் வழங்கப்படுகிறது.

தென்மராட்சியிலும், கிளிநொச்சிப் பகுதியிலும் நகைகளை கொள்வனவு செய்யும் புலிகளது கடைகள் இருக்கின்றன.

# ஊக்குவிப்புப் பணம் வழங்க உத்தரவு

(காத்தான்குடி நிருபர்)

ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேச அலவன்ஸ் இடை நிறுத்தப்பட்டிருந்த காலமுதல் தொடர்ந்து வழங்குமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சகல மாகாண, மாவட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேற்படி கஷ்டப்பிரதேச ஊக்குவிப்பு அலவன்ஸ் வடக்கு-கிழக்கு, வடமேல், வடமத்தி, ஊவா மாகாணங்களைச் சேர்ந்த கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்குத்தான் வழங்கப்படவேண்டும்.

மேற்படி அலவன்ஸ் இலங்கை ஆசிரிய சேவை சம்பளத்திட்டத்தின்கீழ் வழங்கப் படாமல், பழைய சம்பளத்திட்டத்தின் கீழ்தான் மறு அறிவித்தல் வரை வழங்கப்பட வேண்டுமென சுற்றறிக்கை மேலும் கூறுகிறது.

தற்போது கஷ்டப் பிரேதசங்கள் மீளாய்வு செய்படுவதாகவும், அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இடைநிறுத்தப் பட்ட வகுப்புக்கள்

(கண்டி நிருபர்)

கண்டி நகரில் இயங்கி வந்த சுமார் பத்துக்கும் மேற்பட்ட தனியார் டியூஷன் வகுப்புக்கள் இடை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

ஜீ.சீ.ஈ. சாதாரண-உயர்தர பரீட்சைகளுக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு இது பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக உயர்வகுப்பு மாணவர்கள் தினமுரசுக்குத் தெரிவித்தனர்.

என்றாலும் கண்டி கல்வித் திணைக்களம் ஜீ.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி வீட்டிலிருந்தே பயிற்சிகளைச் செய்வதற்கு வினாப்பத்திரங்களை வழங்கியுள்ளது.

# புலிகளும் தேடுகின்றனர்

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்கள் பல தமது உறவினர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியாமல் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேவேளை புலிகளும் தமது நிர்வாகப் பிரிவுகளில் பணியாற்றியவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியாமல் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் புலிகளின் தினசரியான 'ஈழநாதம்' பத்திரிகையில் புலிகள் அமைப்பினரால் ஒரு விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது.

புலனாய்வுப் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு போன்றவற்றில் பணியாற்றியவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளுமாறு கோரி, தொடர்புகொள்ள வேண்டிய அலுவலக முகவரிகளும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

# பஸ்களிலிருந்து பற்றரிகள் அபகரிப்பு!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பஸ் டிப்போவிற்குச் சொந்தமான 4 பஸ்களிலிருந்து பற்றரிகளைப் புலிகள் சந்தி வெளியில் வைத்து எடுத்துச் சென்றுள்ளனர். பற்றரிகளை எடுத்தால் தங்களுக்குப் பிரச்சனை வரும் எனப் பயந்து கூறிய பஸ்சாரதிகளிடம், "பற்றரி எடுப்பதால் உங்களுக்கு நஷ்டமில்லை இதைப் போய் பொலிசில் முறைப்பாடு போடுங்கள்" என்று புலிகள் கூறி பஸ்ஸை கோடரியால் கொத்தி எடுத்துச் சென்றனராம்.

# பாணுக்கு நீண்ட கியூ

யாழ்குடாநாட்டில் தென்மராட்சி பகுதியில் பாணுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது.

அதிகாலையில் எழுந்து சென்று மக்கள் நீண்ட கியூவில் காத்திருந்து டோக்கன் பெற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் மாலையில் அந்த டோக்கனைக் கொடுத்து பாண் பெற்றுக் கொள்ளவும் நீண்ட கியூவரிசையில் காத்திருக்க வேண்டும்.

எனினும் தற்போது நிவாரணப் பொருட்கள் கிடைத்து வருகின்றன. அதனால் பட்டினி அபாயம் நீங்கியுள்ளது.

## மக்கள் கிலி கொண்டு கதறி ஓட்டம்!

# தகவல் வெளியானதும் தாக்குதல் கைவிடப்பட்டது!

கடந்த 25.11.95 அன்று காலை மட்டக்களப்பு தன்னாமுனையில் வீதிப் பாதுகாப்புக்கு வரும் படையினரைத் தாக்கப் புலிகள் மட்டக்களப்பு வாவியின் மறுகரையிலிருந்து வந்திருப்பதை அறிந்த தன்னாமுனை மக்கள் அனைவரும் கிலி கொண்டு கதறி ஓடினர். இதன் பின்னர் படையினருக்குத் தகவல் தெரிய வரவே புலிகள் தமது தாக்குதல் திட்டத்தைக் கைவிட்டு வாவியைக் கடந்தனர்.



படிப்பகம்

# மாநகரசபை உறுப்பினரின் சுருட்டல்

## அபகரித்த காணியைக் கொடுக்க மறுப்பு

மட்டக்களப்பு மாநகரசபையில் உறுப்பினராக இருக்கும் பிரபாகரன் என்பவர் தொடர்பாக பல புகார்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

மாநகரசபைத் தேர்தலில் ஈரோஸ் (மட்டக்களப்பு ஈரோஸ்) சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர் பிரபாகரன்.

மாநகரசபையை தமிழ்வீரம் உள்ளவர்கள் கைப்பற்றவேண்டும் என்று பிரசாரம் செய்தவர், தேர்தலில் வெற்றி பெற்றவுடன் அனைத்தையும் மறந்து விட்டார்.

முனை வீதியில் உள்ள தனியார் பஸ் நிலையம் முன்பாகவுள்ள காணியை சுருட்டி வைத்துக்கொண்டிருக்கிறார். இக் காணி மாநகரசபைக்கு சொந்தமானதாகும். இக் காணியில் கராஜ் ஒன்று அமைத்துள்ளதோடு, மூன்று கடைகளைக் கட்டி வாடகைக்கும் விட்டிருக்கிறார்.

அபகரித்த காணியை அவர் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாநகர சபையில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

அந்த தீர்மானத்தையும் மாநகரசபை உறுப்பினரான பிரபாகரன் பொருட்படுத்திய தாகத் தெரியவில்லை.

"வாய்வீச்செல்லாம் தேர்தலோடு சரி. இப்போது சொத்துச் சேர்ப்பு நடக்கிறது." என்கிறார் ஒரு ஏமாந்த வாக்காளர்.


# வசூல் நடந்தது! வெளிச்சம் எப்போது?

பசறை நமுனுகொல கணவரல்ல தோட்ட பொது மக்களுக்கு மின்சார வசதியும், கூட்டுறவு சங்கக்கடை ஒன்றும் ஆரம்பித்து தருவதாகவும் கூறி 3 வருடங்களுக்கு முன் ஊவா மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சு கிராமிய அபிவிருத்தி வங்கியில் 100/- ரூபாயை செலுத்தி வங்கி கணக்கை கொள்ளை ஆரம்பிக்குமாறும், மற்றுமொரு 100/- ரூபாயை செலுத்தி கூட்டுறவு சங்கக் கடை அங்கத்தவராகுமாறும், அதன் பின்பே கிராமிய வங்கியினூடாக மின்சாரத்தை பெற்று கொள்வதற்கான கடன் வசதியும் மின்சார உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கு கூட்டுறவு சங்கக்கடையினூடாக ஒழுங்கு செய்து தருவதாக கணவரல்ல தோட்ட பொதுமக்களிடமிருந்து 51000/-ரூபா பணம் வசூலிக்கப்பட்டது.

ஆனால், 3 வருடங்களாகியும் மின்சாரமும் வரவில்லை, சங்கக்கடையும் வரவில்லை. அமைச்சு அதிகாரிகளும் வருகை தரவில்லை. தொழிலாளர்களுடைய பொதுப் பணத்துக்கும் என்ன நடந்தது என தெரியவில்லையென மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

பாரதி,கணவரல்ல, நமுனுகொல.

# காட்டூண் மூலை




# நிர்வாண பூஜை நடத்தினாராம்!

## போலிச் சாமியார் கைது!

தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் போலிச்சாமியார் ஒருவர் பொலிஸ் வலையில் சிக்கியிருக்கிறார்.

வியாபார அபிவிருத்தி மற்றும் சுப காரியங்களுக்கு விசேஷ பூஜைகள், நோய்களைக் குணப்படுத்த பூஜைகள் என்று சித்து விளையாட்டு காட்டிக் கொண்டிருந்தவர் முருகேசப்பிள்ளை சாமியார். வயது 47.

"பணக்காரர்களாக மாறவேண்டும் ஒரு வழி சொல்லுங்கள் சாமி"என்று வரும் கேட்டுச் செல்வார்கள் பலர்.

"பணக்காரனாக மாற வேண்டுமானால் கன்னி பூஜை நடத்த வேண்டும்" என்று சாமியார் சொல்லுவார். அதனை நம்பியவர்கள் கன்னிப் பெண்களை அழைத்துச் செல்வார்கள். கன்னி பூஜை என்ற பெயரில் இளம் பெண்களை நிர்வாணமாக்கி, தனது வக்கிரத்தை தீர்த்துக் கொள்ளுவார் சாமியார்.

சாமியாரின் சரசலீலைகளுக்கு உடன்பட மறுத்து தப்பிய ஒரு இளம்பெண் தனது வீட்டில் விஷயத்தை சொல்லிவிட, விவகாரம் பொலிசுக்குப் போனது. சாமியார் மாட்டிக் கொண்டார். பொலிசாரின் 'விசேஷ' கவனிப்பில் தனது திருவிளையாடல்களை ஒப்பு வித்துவிட்டார் போலிச்சாமியார்.

சாமியாருக்கு திருமணமாகி மூன்று பிள்ளைகளும் இருக்கின்றார்கள். வேறு தொழில் இல்லாமல் போனதால் சாமியார் இத்தொழிலில் ஈடுபட்டாராம்.

# மந்தமான தபாலகம்

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் தபாலகத்தில் சேவைகள் மந்தம், ஊழியர் பற்றாக்குறை, இடநெருக்கடி, தளவாடப் பற்றாக்குறை என்பன நெடுநாட்களாக இருந்து வருகிறது. முதலாந்தர தபாலகமாக இது உள்ள போதிலும் அதன் சேவைகள் மந்தமாகவே நடைபெறுகின்றன. 17 கிராம சேவையாளர்களைக் கொண்டு 103/4 சதுரமைல் பரப்பைக் கொண்ட ஏறாவூர் தபாலகப் பிரதேசத்தில் 33149 பேர் சனத்தொகை உள்ளது. எனினும் மூன்று தபால்காரர்கள் மாத்திரமே இங்கு சேவையாற்றுகிறார்கள். இவர்களால் நாளாந்தம் வரும் கடிதங்களை விநியோகிக்க முடியாதுள்ளது. காலை 7 மணிமுதல் மாலை 6 மணிவரை அவர்கள் சேவை புரிய வேண்டியுள்ளது. சகல பதவிகளுக்குமாக குறைந்தது 13 பேரையாவது கொண்டு இயங்கவேண்டிய இத்தபாலகத்தில் தபால்காரர்கள் உட்பட மொத்தம் 6 பேர் உள்ளார்கள். இத்தபாலகம் தனியார் ஒருவரின் மிகச்சிறிய கட்டிடத்தில் போதிய தளவாட மற்றும் மலசல கூட வசதிகளின்றி இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. நாளாந்தம் சுமார் 500ற்கும் 1000திற்கும் இடைப்பட்ட கடிதங்களை விநியோகிக்க வேண்டியிருப்பதாகவும், குறைந்தது 500 பேர்களாக நாளாந்தம் அலுவல்களுக்காக தபாலகத்திற்கு வருவதாகத் தெரிவித்த தபாலதிபர் பல சிரமங்களுக்கு மத்தியில் தாம் பணியாற்றுவதாகவும் கூறினார். நாளாந்தம் இங்குசேரும் தபால் பொதிகளை மட்டக்களப்பு பிரதம தபாலகத்தில் சேர்ப்பிப்பதற்காக பஸ்ஸில் ஒப்படைக்கக் காத்து நிற்கும் போது குறித்த தபாலெடுக்கும் பஸ் பல தடவைகளில் ஏறாவூரில் நிறுத்தாமல் செல்கிறது. இதனால் பல நாட்கணக்கில் தபால் பொதிகள் அனுப்பமுடியாமல் தேங்கி விடுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்டிடப் பொருட்கள் வீதிகளில்!

(வாழைச்சேனை நிருபர்)

கல்குடாத் தொகுதியிலுள்ள முஸ்லிம் கிராமங்களான வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை மற்றும் அதனோடொத்த ஏனைய சிறு கிராமங்களினதும் வீதி ஓரங்களிலும், சிறு ஒழுங்கைகளிலும் தினமும் குவிக்கப்பட்டு வரும் மணல், கற்குவியல்களால் இவ்வீதிகளில் பிரயாணம் செய்யும் பொதுமக்களும், பைசிக்கிள், கார் உட்பட ஏனைய வாகனங்களில் பிரயாணம் செய்வோரும் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

புதித்ாக வீடுகளை அமைப்போரும், திருத்தம் செய்வோரும், கடைகளை அமைப்போரும் தாம் விரும்பியமாதிரி, விரும்பிய இடங்களில்-அது மக்களால் பாவிக்கப்படும் வீதி என்று கூட மனதில் கொள்ளாது-தமது கட்டிடப் பொருட்களான கல், மணல்-ஏன் மரங்களைக்கூடக் குவித்து விடுகின்றனர். கட்டிட வேலைகள் முடிவடையும் வரை இப் பொருட்கள் வீதியோரத்திலேயே குவிந்து கிடக்கின்றன. அது மாத்திரமன்றி கட்டிடத்தை இடிப்போர் தாம் வசிக்கும் வீதியிலேயே உடைக்கும் கற்களையும், சீமெந்து, சுண்ணாம்புத் துகள்களையும் பரவி விடுகின்றனர். இதனால் அவ்வீதி வழியே இரவிலும், பகலிலும் பிரயாணம் செய்வோர் விழுந்தெழும்பி வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இத்தகைய நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவோர் தமது கட்டிடப் பொருட்களை தமது வீட்டுக் காணியினுள் குவித்து வைத்து நிர்மாண வேலைகளில் ஈடுபடுவார்களேயானால் பொதுமக்கள் தங்குதடையின்றி தமது அலுவல்களை முடிப்பதற்காகச் செல்ல முடியும். அத்துடன் பாதசாரிகளின் அசௌகரியங்களைக் குறைப்பதுடன் இவர்கள் நிம்மதிப் பிரயாணங்களை மேற்கொள்ளலாம்.

# கட்சிகள் கலந்துகொள்ள மறுப்பு

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தமிழக அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் ஒன்று பட்டு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றி ஆராய தமிழ் நாட்டில் ஒரு கூட்டம் நடைபெற்றது. திராவிடர் கழக பொதுச் செயலாளர் கி.வீரமணி அக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். தமிழகத்தின் பிரதான கட்சிகளில் வை. கோபால்சாமி தலைமையிலான மறுமலர்ச்சி தி.மு.க. மட்டுமே கூட்டத்தில் கலந்துகொண்டது. தி.மு.க. காங்கிரஸ், அ.தி.மு.க. போன்ற கட்சிகள் கி.வீரமணியின் அழைப்பை நிராகரித்து விட்டன.

# ஜேர்மன் உதவி

(ஏறாவூர் நிருபர்)

மட்டு. மாவட்டத்தில் 1990ம் ஆண்டு கலவரத்தினால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள தமிழ், முஸ்லிம் அகதி மக்களுக்கு ஜேர்மன் தூதுவராலயம் மட்டு. இ.செ.சி. சங்கக் கிளையினூடாக 95 மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளது. இதன்படி தமிழ் கிராமங்களான திருப்பெருந்துறை, மைலம்பாவெளி மக்களுக்கு 65உம், முஸ்லிம் கிராமங்களான மீராக்கேணி, காத்தான்குடி மக்களுக்கு 30உம் கிடைத்துள்ளன. இத்திட்டத்தை கொந்தராத்துக்காரர்களிடமின்றி தாமே நேரடியாக அமுல் செய்வதால் உறுதியானதும், அநாவசியச் செலவில்லாமலும் செய்யமுடிந்திருப்பதாக மட்டு. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு.ரி.வசந்தராஜா தெரிவித்தார்.


## தேவை

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு நன்கு அனுபவம் வாய்ந்த கணக்கியல் எழுது வினைஞர்கள் தேவை.

பொது அறிவு, தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் அனுபவம் உள்ளோர் விரும்பப்படுவர். தகுந்த ஆவணங்களுடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மே/பா தினமுரசு வாரமலர், த.பெ.இல:1772, கொழும்பு.

கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள் நூல்கள் என்பவற்றை மொழிபெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல: T95, மே/பா தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772 கொழும்பு.





## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திீக ஆவி உச்சாடனங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் நடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)

P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD

162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13

T.P. 342463, 342464

FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி

(J.D.G.A.N.)

P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD

இல 31,32,33

தினச்சந்தை கட்டிடம்

நு வெரலியா.

T.P. 052 2508 3093,

FAX 0094523093 EXT 28


# மலையகத்தில் ஒரு வறிய வைத்தியசாலை

சுமார் ஐம்பதினாயிரம் தோட்டமக்களின் வைத்திய சேவையை பூர்த்தி செய்வதாக பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலை உதவுகின்றது. இவ்வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் சிகிச்சைப் பெறும் விதத்தில் நவீன வைத்திய உபகரணங்கள் இல்லை. இதனால் ஆபத்தான நிலையில் வரும் நோயாளிகளை நுவரெலியா, நாவலப்பிட்டிய, பேராதனை, கண்டி போன்ற இடங்களில் இருக்கும் வைத்திய சாலைகளுக்கே எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறு அம்புலன்ஸ் வண்டியில் எடுத்துச் செல்லும் சில நோயாளிகள் வழியிலேயே இறந்து விடுகின்றனர்.

மேலும் இவ்வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. தாதிமார்களும் சிற்றூழியர்களும் பெரும்பாலாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் நோயாளிகளை இனத்துவேஷ நோக்குடன் நடத்துகின்றனர். மற்றும் சிற்றூழியர்களில் சிலர் நோயாளர் பிரிவிற்குச் சென்று சேஷ்டைகள் செய்வதாகவும் அறிய முடிகின்றது. எனவே இது சம்பந்தமாக சுகாதார அமைச்சு துரித நடவடிக்கை எடுக்குமா? என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

சோ.ஸ்ரீதரன், பொகவந்தலாவை.


**சுவிஸ்/ டென்மார்க்/ இத்தாலி/ ஜேர்மன்/ ஃபிரான்ஸ்/ அவுஸ்திரேலியா/நோர்வே நாடுகளுக்கான**

**தினமுரசு வாரமலர் சந்தா விபரம்**

ஒரு வருடத்திற்கு–தபாற் செலவு உட்பட ரூபா 2250/= (52 வாரங்கள்)

ஆறு மாதங்களுக்கு–தபாற் செலவு உட்பட ரூபா 1145/= (26 வாரங்கள்)

மூன்று மாதங்களுக்கு–தபாற் செலவு உட்பட ரூபா 590/=

| மத்திய கிழக்கு நாடுகள் | | அமெரிக்கா/கனடா | |
|---|---|---|---|
| ஒரு வருடத்திற்கு (52 வாரங்கள்) | ரூபா 1865/= US S 38 | ஒரு வ்ருடத்திற்கு (52 வாரங்கள்) | ரூபா 2790/= US S 57 |
| ஆறு மாதங்களுக்கு (26 வாரங்கள்) | ரூபா 975/= US S 20 | ஆறு மாதங்களுக்கு (26 வாரங்கள்) | ரூபா 1420/= US S 29 |
| மூன்று மாதங்களுக்கு (13 வாரங்கள்) | ரூபா 485/= US S 11 | மூன்று மாதங்களுக்கு (13 வாரங்கள்) | ரூபா 730/= US S 16 |

பெயர் கவமுகவரி ஆதிய விபரங்களை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

THINAMURASU VAARAMALAR
P.O. BOX. 1772, COLOMBO.

விண்ணப்பப் படிவங்கள் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.


# தரமுயர்த்தப்பட்ட நான்கு பாடசாலைகள்

(காத்தான்குடி நிருபர்)

கடந்த பதினைந்து வருடங்களின் பின்னர், முதன்முறையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரே தடவையில் 4 வைத்திய சாலைகள் மாவட்ட வைத்தியசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

சுற்றியற்கூறு தரத்திலிருந்த புதிய காத்தான்குடி, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, பெரியகல்லாறு ஆகிய வைத்திய சாலைகளே சுகாதார, நெடுஞ்சாலைகள், சமூக சேவைகள் அமைச்சினால் மாவட்ட வைத்தியசாலைகளாகத் தரமுயர்த்தப் பட்டவைகளாகும்.

இதற்குமுதல் மட்டு. மாவட்டத்தில் வாழைச்சேனை மாத்திரமே மாவட்ட வைத்தியசாலையாவிருந்தது. இது இவ்வாறிருக்க ஆரையம்பதி வைத்திய சாலையை மாவட்டவைத்திய சாலையாக்குமாறும், செங்கலடி, மீராவோடை வைத்தியசாலைகளை கிராமிய வைத்தியசாலை தரத்திலிருந்து சுற்றியற்கூறு தரத்திற்கு உயர்த்துமாறும் பொதுமக்கள் கோருகின்றனர்.

மட்டக்களப்பில் பாலமீன்மடு, வந்தாறுமூலை ஆகிய இடங்களில் இரு கிராமிய மருந்தகங்களும், பாலமுனையில் ஒரு பிரசவ வைத்தியசாலையும் அமைக்கப்பட்டு வருகின்றன.




# மட்டு மாவட்ட மின்மாற்றிகள் மீது தொடர்ந்து தாக்குதல்

## மின் மாற்றிகளை வளைத்து படையினர் மண்மூட்டைகள்!

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மின் மாற்றிகள் தொடர்ச்சியாக இரவுநேரங்களில் தாக்குதலுக்குள்ளாகி வருவதால் தினமும் மாவட்டத்திலுள்ள பல பிரதேச செயலகப் பிரிவுகள் இருளில் மூழ்கடிக்கப்படுகின்றன.

இந்நடவடிக்கையினால் அரசும், பொதுமக்களும் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். தற்போது மாவட்டத்திலுள்ள மின் மாற்றிகளை சுற்றிவர நூற்றுக்கணக்கில் மண்மூட்டைகளை படையினர் அடுக்கி வைத்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் 19ம் திகதி மீண்டும் போர் மூண்டதிலிருந்து, இதுவரை சுமார் 15க்கும் மேற்பட்ட மின்மாற்றிகள் சேதமாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட் — நாரதர்



**26.11.95** அன்று இந்தியாவுக்கும் நியூசிலாந்து கிரிக்கெட் அணிக்கும் இடையில் சர்வதேச ஒரு நாள் போட்டி நடைபெற்றது.

முதலில் 348 ரன்களை குவித்து தனது வெற்றியை உறுதி செய்திருந்தது நியூசிலாந்து அணி.

அடுத்து களத்தில் இறங்கிய இந்திய அணியிடம் வெற்றிபெறும் நம்பிக்கை ஆரம்ப கட்டப் பதிலடிகளில் பிரதிபலித்தது.

எனினும், தமது நல்ல விக்கெட்டுக்களை பறிகொடுக்க ஆரம்பித்த நிலையில், இனியும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை இந்திய அணி இழந்து போனது.

அதன் பின்னர் தமது தோல்வியைக் கௌரவமான தோல்வியாக்கத்தான் இந்திய அணி விளையாடியது.

வெல்லப்போவதில்லை என்ற மனோநிலை ஏற்பட்ட பின்னர் தாக்குப் பிடிக்கும் வலிமையையும் இழந்து தோல்வியைத் தழுவியது இந்திய அணி. மேலும் பத்து ஓவர்கள் இருந்தும் கூட நின்றுபிடிக்க முடியாமல் விக்கெட்டுக்களை பறிகொடுத்தார்கள்.

வெல்ல முடியும் என்று முயற்சித்திருந்தால் கடைசி ஓவர் வரையாவது நின்று பிடித்திருப்பார்கள்.

என்றாலும், 249 ரன்களையாவது இந்திய அணி பெற்றுக் கொண்டமை ஓரளவு மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டதாகிவிட்டது.

150 ரன்களுக்குள் இந்திய அணி சுருண்டிருந்தால், உலக அரங்கில் அதற்கிருந்த மதிப்பு சரிந்து தரைமட்டமாயிருக்கும்.

எதிர்வரும் போட்டிகளில் இந்திய அணியை சுலபமாக வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் ஏனைய கிரிக்கெட் அணிகளுக்கும் ஏற்பட்டுவிடும்.

எனவே, தோல்விதான், ஆனாலும் ஓரளவு கௌரவமான தோல்விதான் என்ற கணக்கில் இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான 5 வது ஒரு நாள் போட்டி முடிவடைந்தது.

எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் எதற்கு கிரிக்கெட் விமர்சனம் என்று நினைத்திருப்பீர்கள்.

வடபுலப்போரின் நிலவரத்தோடு இந்திய-நியூசிலாந்து கிரிக்கெட் அணிகளின் 5வது ஒரு நாள் போட்டி நன்றாகப் பொருந்தியிருக்கிறது.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் படையினரின் முன்னேற்றத்தை தடுக்கலாம் என்ற நம்பிக்கை புலிகளின் தரப்புக்கு இருந்தது உண்மை.

'இடி மின்னல்' நடவடிக்கைக்கு பதிலடி கொடுப்பதில் இறங்கிய புலிகளின் தரப்புக்கு பாரிய இழப்பு ஏற்பட்டபோது அந்த நம்பிக்கை சரியத் தொடங்கியது.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை தொடங்கியபோது, புலிகளின் தரப்பின் நோக்கமெல்லாம் தமது தோல்வியைக் கௌரவமான தோல்வியாக்கிக் கொள்வதில்தான் குறியாக இருந்தன.

எப்படியாவது படையினரின் முன்னேற்றத்தை தடுத்தாக வேண்டும் என்ற மனோநிலையில், தடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் சமரில் ஈடுபடும்போது உக்கிரம் அதிகமாக இருக்கும்.

இருதரப்புமே ஒருவரை ஒருவர் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையில் போரிடும்போது இரு தரப்பின் மத்தியிலும் இழப்புக்களும் பாரியளவில் ஏற்படும்.

பாரிய இழப்பு ஆட்பலத்தில் குறைந்த தரப்பை பலவீனமாக்கவும் செய்யும்.

ஆனால், புலிகளின் தரப்பைப் பொறுத்தவரை தமது இராணுவ பலத்தை விட, படைத்தரப்பின் பலம் மிக உயர்வாக இருப்பதை கவனித்து, அதற்கேற்ப தமது முடிவை மேற்கொண்டனர்.

கனரக ஆயுதங்கள், டாங்கிப் படையணிகள் சகிதம் பெரும் ஆட்பலத்துடன் படைத்தரப்பு யாழ்நகரை குறிவைத்து முன்னேறியபோது, வடபுலத்தில் நிலவிய சமபல நிலை வீழ்ச்சியடைந்தது.

படைத்தரப்பின் பலமே மேலோங்கியது. அவ்வாறான நிலையில் புலிகளின் முன் இரண்டு முடிவுகள் இருந்தன.

ஒன்று, வெற்றி அல்லது வீரமரணம் என்று ஒரு இறுதிப் போரில் ஈடுபடுவது.

இரண்டாவது; மறுதரப்புக்கு சகல வகையிலும் சாதகமான போர்க்கள நிலவரத்தில் இருந்து பின்வாங்கிச் செல்வது.

இரண்டாவது முடிவையே புலிகளின் தலைமை மேற்கொண்டது.

எனவே, பின்வாங்குவது என்ற முடிவெடுத்தபின்னர் நடைபெறும் பதிலடி நடவடிக்கைகளில் உக்கிரம் இருக்க முடியாது.

எதிர்த்தரப்பு பலமானது என்ற நம்பிக்கையில்தான் பின்வாங்கும் முடிவு செய்யப்படுகிறது. எனவே, மனோநிலையிலும் ஒரு நம்பிக்கையீனம் தவிர்க்கமுடியாமல் ஏற்பட்டே தீரும்.

புலிகளது பதிலடி நடவடிக்கைகள் சுலபமாக பல முனைகளில் முறியடிக்கப்பட்டதற்கும் புலிகளது அணிகளின் மனோநிலையில் ஏற்பட்ட பாதிப்பும் ஒரு காரணம்.

வழக்கத்திற்கு மாறான ஒரு போர்த்தந்திரத்தை புலிகள் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதையும் கவனிக்க வேண்டும்.

பெரும்படை தனது பலத்தைத் திரட்டிக் கொண்டு முன்னேறும்போது, சிறிய படை தனது பலத்தைச் சேமிக்க பின்வாங்கிச் செல்லும்.

அவ்வாறு பின்வாங்கிச் செல்லும்போது அவசியம் ஏற்பட்டால் மட்டுமே மோதல்களைச் சந்திக்கும். முற்றுகையை உடைத்து வெளியேறும் நோக்கத்திற்காக அவ்வாறு மோதலில் ஈடுபடவேண்டியிருக்கும்.

ஆனால், வடபுலப் போரில் புலிகள் பின்வாங்கிச் செல்லும் முடிவை மேற்கொண்டபின்னரும் தமது பதிலடி நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர்.

முற்றுகைக்கு முன்னரே யாழ்ப்பாண மத்திய பகுதியிலிருந்து எவ்வித இழப்பும், மோதலும் இன்றியே புலிகள் பின்வாங்கிச் சென்றிருக்க முடியும்.

எனினும், முற்றுகைக்குள் சிக்கிக் கொண்டாலும் கூட, யாழ்ப்பாண மத்திய பகுதியில் தங்கியிருந்து புலிகளின் சில அணிகள் பதிலடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டேயிருந்தன.

தமது பதிலடி நடவடிக்கைகளால் படைத்தரப்பின் முன்னேற்றம் தடைப்படப் போவதில்லை என்று நன்கு தெரிந்த நிலையிலும் புலிகள் தாக்குதலைத் தொடர்ந்தனர்.

ஆக, புலிகளது பதிலடி நடவடிக்கையின் ஒரே நோக்கம் யாழ் நகரை படையினர் கைப்பற்றுவதை எந்தளவுக்கு தாமதப்படுத்த முடியுமோ அந்தளவுக்கு தாமதப்படுத்துவதுதான்.

பிரபாகரனின் பிறந்தநாளை படையினர் இம்முறை யாழ் நகரில் கொண்டாடுவார்கள் என்று இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க கூறியிருந்தார்.

நவம்பர் 26ம் திகதி பிரபாவின் பிறந்த நாள். நவம்பர் 27ம் திகதி மாவீரர் தின முடிவு நாள்.

மாவீரர்தின முடிவு நாளைவிட, பிரபாகரனின் பிறந்தநாளன்று யாழ் நகரைக் கைப்பற்றி விட்டால் தமது வெற்றிக்கு ஒரு கனம் ஏற்படும் என்று படைத்தரப்பு நினைத்திருக்கலாம்.

அதே வேளையில், தமது தலைவரது பிறந்தநாளுக்கு இம்முறை கொடுக்கக்கூடிய ஆகக் கூடிய பரிசு பிறந்தநாள் வரையாவது யாழ் நகரை தக்கவைப்பதுதான் என்று புலிகளது படைத்துறைத் துணைத்தளபதி பால்ராஜ் தீர்மானித்திருந்தார்.

உண்மையில் புலிகளுக்கு அது ஒரு கௌரவப் பிரச்சனைதான். நவம்பர் 26ம் திகதி படைத்தரப்பால் யாழ் நகரை கைப்பற்ற முடியாமல் போய்விட்டது.

பின்னடைவுக்கு மத்தியிலும் புலிகளுக்கு ஒரு கௌரவமான விஷயம் அதுதான்.

பெரும் படைப்பலத்தைப் பிரயோகித்தும் குறிப்பிட்ட நாளில் யாழ் நகரை படைத்தரப்பு கைப்பற்றமுடியாமல் போனமையானது, புலிகளது தாக்கும் திறன் குறித்து படையினர் குறைத்து மதிப்பிடவில்லை என்பதையும் கோடிட்டுக் காட்டியிருக்கிறது.

# போர் முனை அலசல்

# கௌரவம் காக்கும் பதிலடித் தாக்குதல்



படைப்பல நிலையில் தாழ்வாக இருந்தாலும், இராணுவரீதியில் புத்திசாலித்தனமான மரியாதைக்குரிய ஒரு எதிரியைத்தான் தாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை படைத்தரப்பினர் புரிந்து கொண்டுள்ளார்கள்.

அதேவேளை, படைத்தரப்பின் பலத்தையும், மரபுப் போரில் அதற்கிருக்கும் திறனையும் முன்புபோல குறைத்து மதிப்பிட முடியாது என்பதையும் புலிகள் முதற்தடவையாக புரிந்து கொண்டுள்ளார்கள்.

எனவே-இரு தரப்பும் தமது பலம், பலவீனம் குறித்து மதிப்பிட்டுக்கொள்ள இன்றைய வடபுலப் போர் வழியமைத்துக் கொடுத்திருக்கிறது.

படைப்பலத்தைப் பெருக்க வேண்டும் என்று பிரபாகரன் தனது புதிய செய்தியில் தெரிவித்துள்ளார்.

வழக்கமாக நவம்பர் 26ம் திகதி இரவு 12 மணிக்குப் பின்னர்தான் புலிகளின் குரல் வானொலியில் பிரபாகரன் உரையாற்றுவதுண்டு.

இம்முறை தனது பிறந்தநாளான 26ம் திகதியே பிரபா உரையாற்றியிருந்தார். எனவே அது மாவீரர் தினச் செய்தியா, அல்லது பிரபா தனது பிறந்தநாளுக்காக விடுத்த செய்தியா என்பது தெரியவில்லை. இரண்டுக்கும் பொதுவாக எடுத்துக் கொள்ளலாம்.

படைப்பலத்தைப் பெருக்க வேண்டும் என்று பிரபாகரன் கூறியிருப்பது, தமது பலவீனத்தை பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருப்பது போலத்தான்.

வெளிப்படையாகத் தெரிந்துள்ள பலவீனத்தை ஒப்புக் கொள்வது தவிர புலிகளுக்கு வேறு வழியில்லை.

தற்போதுள்ள தமது அணிகளை மட்டுமே வைத்து படைத்தரப்பை வெற்றி கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை பிரபாகரன் வெளியிடவில்லை என்பதை கவனிக்க முடிகிறது.

'எங்களால் முடியாது' என்று வெளிப்படையாகவே புலிகள் சொல்லத் தொடங்கி விட்டார்கள்.

"புலிகளால் முடியும். சார்க் நாட்டு படைகளா. சந்தோசம் அவையும் வரட்டும்" என்று மூன்றாம் கட்ட ஈழப் போருக்கு முன்னர் எழுதிய கவிதையில் தெரிந்த நம்பிக்கை சற்றுத் தளர்ந்து போயிருக்கிறது.

"தம்பி நீயும் வா. தங்கச்சியும் வா" என்று ஆட்பலத்தை திரட்டும் அவசியம் நேர்ந்துள்ளது.

"எங்களால் மட்டும் முடியாது. நீங்களும் வந்தால்தான் சாதிக்கலாம்" என்று புலிகள் கூறத் தொடங்கியிருக்கிறார்கள்.

உண்மையும் அதுதான். புலிகளின் தற்போதைய பலம் கெரில்லாப் போரைத் தொடர உதவுமே தவிர, மீண்டும் ஒரு தளப்பிரதேசத்தை யாழ் குடாநாட்டில் நிறுவ உதவப் போவதில்லை.

யாழ் குடாநாட்டில் காலூன்றி நின்று கொண்டு கிழக்கை நோக்கி போரை விஸ்தரிப்பதுதான் 'மூன்றாம் கட்ட ஈழப் போரின்' மூல உபாயமாக இருந்தது.

இப்போது யாழ் குடாநாட்டுக்குள் நீண்ட பல சமர்களை நடத்தியாகவேண்டிய நிலையில் புலிகள் இருக்கிறார்கள்.

நிச்சயமாக புலிகளுக்கு இது பெரும் பின்னடைவுதான். யாழ் குடாநாட்டுக்கு வெளியே பயன்படுத்தவிருந்த தமது தாக்குதல் திறனை இப்போது யாழ் குடாநாட்டில் பயன்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

யாழ் குடாநாடு புலிகளது பூரண கட்டுப்பாட்டில் இருந்தபோது, புலிகளது தாக்குதல் பிரிவுகளுக்கு அங்கு வேலையில்லை.

சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவு திருமலைக்கு அனுப்பப்பட்டதும் அப்படித்தான். தற்போது சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவுக்கு யாழ்ப்பாணத்திலும் வேலை இருக்கிறது.

ஆக, தாக்குதல் பிரிவுகளை பல திசைகளில் அனுப்பிவைத்தால்தான் படையினரது கவனத்தையும் திசை திருப்ப முடியும். தமது இராணுவ பலத்தையும் வெளிப்படுத்த முடியும்.

அதே நேரம், அப்படி பிரித்து அனுப்பினால் எதாவது ஒரு பகுதியில் முழுப் பலத்தையும் காட்டமுடியாமலும் போகும் என்பதுதான் புலிகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சனை.

ஆட்பலத்தில் புலிகள் தமது நிலையை உயர்த்தும்வரை இந்தப் பிரச்சனை தொடரும்.

இந்தப் பிரச்சனை உள்ளவரை யாழ் குடாநாட்டை மீண்டும் தமது பூரண கட்டுப்பாட்டில் புலிகள் கொண்டுவர முடியாமல் இருக்கும்.

அதுதவிர, எவ்வாறான போர்த் தந்திரம் மூலமாக புலிகளை வெற்றி கொள்ள முடியும் என்பதை படைத்தரப்பு ருசி கண்டு அறிந்துவிட்டது.

எனவே-மீண்டும் யாழ்ப்பாணத்தை தமது தளப்பிரதேசமாக புலிகள் நீண்ட காலத்திற்கு தக்கவைத்துக்கொள்வதும் சாத்தியமல்ல.

படைத்தரப்பு பின்வாங்க நேர்ந்தாலும் கூட மீண்டும் முன்னேறும் முயற்சியில் ஈடுபடும்.

காடும், காடுசார்ந்த பிரதேசமுமான வன்னிப்பகுதிதான் தற்போது புலிகளுக்குள்ள பலத்தை வைத்து பாதுகாக்கக் கூடிய தளப் பிரதேசமாக இருக்கிறது.

வடக்கு-கிழக்கில் ஒப்பீட்டளவில் பாதுகாப்புக் கூடிய தளப்பிரதேசமாக இருக்கக் கூடியதும் வன்னிதான்.

ஆனால், யாழ் குடாநாட்டில் பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களை வன்னிப் பிரதேசத்தில் தொடர்ந்து வைத்திருப்பது சுலபமான வேலையல்ல.

மக்களை வெளியேறுமாறு புலிகளும் வற்புறுத்தினார்கள். எனவே, மருந்தில்லாவிட்டாலும் மக்கள் புலிகளையே பழி சொல்லுவார்கள்.

"எங்களை வரச் சொன்னீர்கள் வந்தோம். கவனிக்கிறீர்கள் இல்லையே" என்று மக்கள் பேசத்தொடங்கிவிடுவார்கள். தாமாகவே வெளியேறிய மக்கள் கூட, தாமும் புலிகள் சொன்னதால்தான் வெளியேறினோம் என்று தமது கஷ்ட, நஷ்டங்களுக்கு புலிகளை ஒரு பிடி பிடிக்கத் தொடங்கிவிடுவார்கள்.

இவையெல்லாம் இயல்பான விஷயங்கள். மக்களுக்கு மீண்டும் நம்பிக்கையூட்டுவதும் லேசுப்பட்ட வேலையல்ல.

வை.8 விமானம் வீழ்த்தப்பட்தும், புலிகளது நிகழ்கால, எதிர்கால கெரில்லா தாக்குதல்களும் யாழ்-குடாநாட்டுக்கு வெளியே பிரமிப்புக்களை ஏற்படுத்தலாம்.

ஆனால், யாழ் குடாநாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு நம்பிக்கையூட்டப் போதுமானவையல்ல. "பெரும் பங்கர்கள், நிலத்திற்கீழே நீண்ட தூரப்பாதைகள் எல்லாம் வைத்திருந்தும்கூட கடைசியாக என்னாகிவிட்டது. படை வந்தால் தாக்குப் பிடிக்க முடியாது" என்று இடம் பெயர்ந்த மக்கள் பேசிக்கொள்ளத் தொடங்கி விட்டார்கள்.

அந்த நம்பிக்கையீனம் புலிகளுக்கு அரசியல் ரீதியிலும் பாதகம்தான்.

மீண்டும் தமது பகுதிகளுக்கு திரும்பிச் செல்ல முடியும் என்று அந்த மக்களுக்கு புலிகள் நம்பிக்கையூட்டத் தவறினால், புலிகளது தடையையும் மீறி தமது பகுதிகளுக்கு அவர்கள் செல்லும் கட்டம் வந்துவிடலாம்.

அந்த நம்பிக்கையை ஏற்படுத்த யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள படையினர் மீது பாரிய கெரில்லா தாக்குதல்களை புலிகள் மேற்கொண்டேயாக வேண்டும்.

அத்தாக்குதல்கள் வெற்றியாக முடிந்தாலும், தோல்வியாக முடிந்தாலும், படைத்தரப்பு பதிலடியாக பலத்த ஷெல் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்களை இடம்பெயர்ந்த மக்கள் வாழும் பகுதிகளை நோக்கித் திருப்பினால் அதுவும் புலிகளுக்கு சாதகம்தான். மக்கள் திரும்பிச் செல்ல அஞ்சுவார்கள்.

ஒரு பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரைத் தாக்குவது; தாக்கப்பட்ட படையினர் மக்கள் மீது தமது கோபத்தை வெளிப்படுத்துவார்கள். அதனால் பாதிக்கப்படும் மக்கள் கெரில்லாக்களை சுற்றித் திரளுவார்கள்.

இவ்வாறான தந்திரத்தையும் உலகில் சில கெரில்லா அமைப்புக்கள் பயன்படுத்தியுள்ளன. அதனை 'குவிவுமையத் தத்துவம்' என்று அழைப்பார்கள்.

எனவே-வடபுலப் போர் முனையின் எதிர்காலம் புலிகளது கெரில்லாத் தாக்குதல்களை பொறுத்தும், படைத்தரப்பின் பதில் நடவடிக்கைகளின் தன்மையைப் பொறுத்தும் தனது தோற்றத்தைக் காட்டப் போகிறது.

---

# அதிரடி அய்யாத்துரை



**யா**ழ் குடாநாட்டிலிருந்து வவுனியாவுக்கு வந்த சனத்திற்கு இருமுனைத் தொல்லை. ரெண்டு எழுத்தாரும் சோதனைபோட்டு பெறுமதியான சில உபகரணங்களை எடுத்துப் போட்டினம். கொடுத்துப்போட்டுவர, சீருடைக்காரர் அடையாள அட்டையைப் பிடுங்கிப்போட்டினம். அரச அதிகாரி செய்த முயற்சியாலைதான் திரும்பக் கிடைச்சதாம். அதிகாரியை பாராட்டத்தான் வேணும். கனேஷ் கையைக் கொடும்.

**ரெ**ண்டு எழுத்தார் தயாரித்த வெடிகுண்டுப் பவுசர் ஒண்டு 1987இல் வெடிச்சது. அது வெடிச்ச இடம் கைதடி. 50றகு மேற்பட்ட சனமும் செத்தது. இந்த முறையும் ஒரு விபத்து. நாலு திருவாளர் பொதுசனமும், நாலு ரெண்டு எழுத்தாரும் பலியாம். 60 பொதுஜனம காயம். 6 வீடுகள் சேதம். இனி ரெண்டு எழுத்தாரின் வாகனங்களைக் கண்டால் சனம் நல்லாத் தள்ளி நிக்கப் போகுதுகள். ஒரம்போ. ஒரம்போ.

**ச**ண்டையிலை வெற்றி தோல்வி வரும்தான். வெற்றிக்கு காரணம் என்ன எண்டு பார்த்து பாராட்டலாம். அதைவிட்டுப்போட்டு சாதகம் சரியில்லை. கிரகநிலை நல்லாயில்லை எண்டு சொன்னா என்ன அர்த்தம். அதைப் போய் அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்களுமல்லோ முக்கியத்துவம் கொடுத்தவை. அப்ப பாருங்கோ, தெரியாமல் கேட்கிறேன் அவருக்கு சாதகம் சரியில்லை எண்டு நம்பினா பிறகு ஏன் படை அனுப்பிச் சண்டை நடத்தவேணும். கிரகங்களே தங்கடை வேலையைக் காட்ட விட்டிருக்கலாம் அல்லோ! இனிமேல் வி.ஐ.பிக்களுக்கு பாதுகாப்புப் போட முதல் ஜோசியரை ஒரு வார்த்தை கேட்கலாம். ராசி நல்லா இருந்தா பாதுகாப்புச் செலவு மிச்சம்.

**ந**வம்பர் 25ம் திகதியே தலைநகரில் கொடிகள் கட்டி ஒரே ஆரவாரம். கடைகளில் வெடிக்குத் தட்டுப்பாடு. ரெண்டு எழுத்து தலைவரின் பிறந்தநாளுக்கு யாழ் பிடிபடும் எண்டு கணக்குப் போட்டு வெடிகளோடை தயாராயிருந்தவையாம். கணக்குப் பிழைச்சதிலை அவைக்கு கொஞ்சம் ஏமாற்றம்தான். இதென்ன கிரிக்கெட் டெஸ்ட் போட்டியோ, குறித்தநாளில் முடித்துவைக்க?!

**வெ**ளிநாடுகளில் உள்ள நம்நாட்டு பொதுநல மன்றங்கள், "தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபட்டு சண்டையை நிறுத்த வேணும்" எண்டு சொல்லுகினமாம். அவர்களின் நோக்கம் நல்லதுதான். ஆனால், தமிழ் அமைப்புக்கள் தங்களுக்கை ஆள் ஆளைத்தேடி சுடுபட்டுத் திரியேக்கையே அவை ஒற்றுமையை வலியுறுத்தியிருக்க வேணும். இன்னும் நல்லாயிருந்திருக்கும்.

**வ**டக்கு-கிழக்கு மாகாண முன்னாள் அதிகாரக் கட்சிக்குள் கணக்கு வழக்குத் தகராறு உச்சமாம். செயலாளரும், அவரது நண்பரும் இயக்க நிதியை சொந்த வியாபாரங்களுக்காக பயன்படுத்துவது பிடிக்காமல் பேச்சாளரும், மூத்த உறுப்பினருமான 'தீஸ்வரன்' விலகியிருக்கிறாராம். வெளிநாடுகளுக்கும் போகும் எண்ணத்தில் விலகியிருக்கிறார் எண்டு செயலாளர் இந்தியாவுக்கு போன இடத்திலை கதை அளந்துள்ளாராம்.

**ம**லைப்பகுதி சம்பந்தப்பட்ட விடயத்திலை சபையில் எதிர்த்து வாக்களிக்க நினைத்தாராம் தனித்துவமான தொண்டுத் தலைவர். அதுக்கு வடக்கு-கிழக்கு தமிழ் கட்சிகளது ஒத்துழைப்பையும் கேட்டவராம். அவசர சட்ட விஷயத்திலை ஒருநாளும் எதிர்த்து வாக்குப் போடேல்லை. இதுக்கு மட்டும் எங்களைக் கேட்டால் எப்படி? எண்டு தமிழ் கட்சி பிரதிநிதிகள் நழுவிப்போட்டினமாம். எதிர்ப்பு தெரிவிக்கும் போது தனித்து எதிர்த்தா 'முன்னணிச் சந்திரன்' அதிகார தரப்புக்கு நெருக்கமாகிப்போடுவார் எண்டு யோசிச்கிறாராம் தொண்டுத்தலைவர்.

**யா**ழ்ப்பாண நகரில் இருந்து மிஞ்சிப் போனா ஒரு மணித்தியாலத்திலை நாவற்குழிக்கு நடந்து போகலாம். யாழ்ப்பாணமே ஒரேயடியா வெளிக்கிட்ட நேரத்திலை சனம் நடந்து போய் முடிய குறைஞ்சது பத்து மணித்தியாலம் பிடிச்சதாம். அந்தளவுக்கு சன நெருக்கம்.

**ப**ழமொழிகள் எல்லாம் சரியான மொழிகள்தானோ? பழமொழி ஒன்றைச் சாடும் புதுக்கவிதை ஒண்டு பாருங்கோ.

### முரண்பாடு

""கத்தியெடுத்தவனுக்கு
கத்தியால் சாவு-
காந்தி என்ன
துப்பாக்கியா
ஏந்தினார்?!""

(தி.சுகுமாரன்)



படிப்பகம்

www.padippakam.com

55

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் ~ எழுதுவது

# முதலாவது 'சக்கை' லொறித் தாக்குதல்

## லொறியில் வெடிமருந்து

செப்டம்பர் மாதம் 23ம் திகதி 1985, நள்ளிரவு 12 மணியளவில் கிளிநொச்சி பொலிஸ்-இராணுவ கூட்டு முகாம் முன்பாக ஒரு லொறி வந்து நின்றது.

லொறியைச் செலுத்திவந்தவர் இறங்கி ஓடிவிட்டார்.

லொறியில் வெடிமருந்து நிரப்பப்பட்டிருந்தது.

சாரதி இறங்கிச் சென்றதும் லொறி வெடிக்க வைக்கப்பட்டது. பாரிய சத்தத்தோடு லொறி வெடித்தபோது பொலிஸ் நிலைய கட்டிடங்கள் சேதமாகின.

பொலிஸ் நிலையத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தீப்பிடித்துக் கொண்டது.

லொறியில் பெற்றோல், டீசல் நிரப்பிய பீப்பாய்களும் வைக்கப்பட்டிருந்தமையால் குண்டு வெடிப்போடு அவையும் பற்றியெரியத் தொடங்கிவிட்டன.

அதே வேளையில் பொலிஸ் நிலையம் மீது மோட்டார் குண்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பெற்றோல் நிரப்பப்பட்ட பவுசர் ஒன்று வந்து பொலிஸ் நிலையம் முன்பாக நின்றது. அதிலிருந்தும் சாரதி இறங்கி ஓடிவிட்டார்.

பவுசரை வெடிக்க வைக்க முயன்றார்கள். பவுசர் வெடிக்கவில்லை.

பொலிஸ்-இராணுவ கூட்டுப்படை நிலையத்திற்கு அருகேதான் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் எரிபொருள் குதம் இருந்தது.

பவுசர் வெடித்திருந்தால் அந்தப் பெற்றோல் குதமும் பற்றியெரிந்திருக்கும். நகரெங்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கும்.

பவுசரை வெடிக்கவைத்து பெற்றோல் குதத்தையும் நாசம் செய்வதே தாக்குதல் நடவடிக்கையின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.

ஆனால் பவுசர் வெடிக்கவில்லை. அதனையடுத்து மீண்டும் மோட்டார் ஷெல் தாக்குதல் தொடர்ந்தது.

பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிசார் தப்பிச் சென்றதால் பலத்த உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

தாக்குதல் நடைபெற்றபோது கிளிநொச்சி பொலிஸ், இராணு கூட்டு முகாமில் 57 இராணுவ வீரர்களும், 39 பொலிசாரும், ஒரு உயரதிகாரியும் இருந்தனர்.

தாக்குதலில் ஒன்பது பேர் காயமடைந்தனர். அதில் நான்கு பேர் இராணுவ வீரர்கள். நான்கு பேர் பொலிஸ்காரர்கள். ஒருவர் அதிகாரி.

தாக்குதல் நடவடிக்கைக்கு தமிழீழ இராணுவம் (TEA) உரிமை கோரியது.

தம்பாப்பிள்ளை மகேஸ்வரன்தான் லொறியில் வெடிமருந்து நிரப்பியும், எரிபொருள்களை வைத்தும் வெடிக்கவைக்கும் தொழில்நுட்ப வேலைகளை நேரடியாகக் கவனித்தார்.

இலண்டனில் கற்றுக்கொண்ட தொழில்நுட்ப அறிவை பயன்படுத்திப் பார்த்தார் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் (பனாகொடை மகேஸ்வரன்).

முதன் முதலில் வெடிமருந்து நிரப்பிய லொறியைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட தாக்குதலும் அதுதான்.

## தயாரிப்புக்கு பாராட்டு

கிளிநொச்சித் தாக்குதல் படைத்தரப்பு மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தினார்.

"மோட்டார் தாக்குதலில் ஏவப்பட்ட ஷெல்கள் உள்ளூர் தயாரிப்புக்கள். ஆனால் தரமான உற்பத்திகள். இதுபோன்ற உள்ளூர் உற்பத்தியை எனது இராணுவ வாழ்க்கையில் கண்டதில்லை" என்று சொன்னார் ஜெனரல் சிறில் ரணதுங்கா.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடர்பாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

"கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தாக்குதலில் தீவிரவாதிகள் 'நேபாம்' குண்டுகளைப் பாவித்துள்ளார்கள். இது ஜெனிவா சமாதான உடன்பாட்டுக்கு மாறானது" என்று குற்றம் சாட்டினார் அமைச்சர்.

தீப்பற்றும் இரசாயனக் குண்டுதான் 'நேபாம்' குண்டு என்று அழைக்கப்படும்.

அவ்வாறான குண்டுகளை பாவித்தாகக் குற்றம் சாட்டியது மூலம் தீவிரவாத இயக்கங்களுக்கு வெளியுலகில் கண்டனம் ஏற்படும் என்று அமைச்சர் அத்துலத் முதலி நினைத்தார்.

## 'இந்து' மீது பாய்ச்சல்

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசுக்கு எரிச்சலைக் கொடுத்த இன்னொரு விஷயம் வெளிநாட்டுப் பத்திரிகைகள்.

சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தை அரசுக்கு இல்லாமல் செய்யுமளவுக்கு வெளிநாட்டுப் பத்திரிகைகளில் இலங்கை நிலவரச் செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன.

இந்தியாவில் இருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலத் தினசரி 'இந்து'.

இலங்கையில் இருந்த தமிழ் இயக்கங்களுக்கிடையேயான புலிகள் அமைப்பை பலமாக ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்திருந்தது 'இந்து'.

'இந்து' பத்திரிகையின் ஆசிரியரான ராம் போராளிகள் அமைப்புக்களில் புலிகள் மட்டுமே சிறந்த கெரில்லா அமைப்பாகும் என்னும் கருத்தைக் கொண்டிருந்தார்.

புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மீதும் மதிப்புக் கொண்டிருந்தார். நேரடியாகவும் பல தடவை பிரபாகரனைச் சந்தித்து நெருக்கமான உறவையும் வைத்திருந்தார்.

'இந்து' பத்திரிகையின் நிலைப்பாட்டால் எரிச்சலடைந்த ஜே.ஆர். தனது அதிருப்தியை வெளிப்படையாகவே கொட்டித் தீர்த்தார்.

ஜப்பான், இலங்கை நட்புறவுச் சங்கத்தின் மூன்று மாடி விளைக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு ஜே.ஆர். உரையாற்றினார்.

அக் கூட்டத்தில் ஜே.ஆர். சொன்னது இது: "இலங்கைப் பிரச்சனை பற்றி அறிய வேண்டுமானால் என்னைக் கேளுங்கள். 'இந்து'வை நம்பவேண்டாம். அதில் வரும் செய்திகள் அனைத்தும் பொய்யானவை".

ஜே.ஆரின் கடும் எரிச்சலை அப்போது சந்தித்த 'இந்து' தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறது? புலிகள் அமைப்பை கடுமையாகச் சாடிக் கொண்டிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலை விவகாரத்தின் பின்னர் 'இந்து' தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது.

'இந்து' ராம் தற்போது 'புரன்லைன்' ஆங்கில சஞ்சிகையின் ஆசிரியராக இருக்கிறார். தவிர புலி எதிர்ப்பாளர்.

ராஜீவ் கொலை விவகாரத்தில் ஒற்றைக் கண் சிவராசன் என்னும் பாக்கியச்சந்திரன் பற்றிய விபரங்களை முதலில் வெளியிட்டதும் புரன்லைன் சஞ்சிகைதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வங்கிகள் நிலை

யாழ்-குடாநாட்டில் நிலவிய சூழலைக் காரணம் காட்டி அங்கு வங்கிகளின் நடவடிக்கைகளை இடைநிறுத்தியது பாதுகாப்பு அமைச்சு.

நகைகளை அடகுவைத்தோருக்கு நகைகளை மீளப்பெற முடியவில்லை. பாதுகாப்புக் கருதி நகைகள் வேறிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டன.

அதனையடுத்து நகைகளை அடகு வைத்த பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"அடகுவைத்த நகைகளை திருப்பித் தா" என்று கோரிக்கை விடுத்தனர்.

கோரிக்கையையும், போராட்டத்தையும் கவனித்த பாதுகாப்பு அமைச்சருக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது.

நகை அடகுவைத்தோர் என்ற போர்வையில் இயக்கங்கள்தான் போராட்டங்களை தூண்டி விடுகின்றன. வங்கிகள் திறக்கப்பட்டால் கைவரிசையைக் காட்டலாம் என்று நினைக்கிறார்கள் என்று சந்தேகப்பட்டது பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சால் ஒரு அறிக்கை விடுக்கப்பட்டது. அந்த அறிக்கையில் பின் வருமாறு கூறப்பட்டது.

"நகைகளை அடகு வைக்காதோரும் அவற்றைத் திரும்பப் பெறக் கோரும் போராட்டத்தின் பின்னால் இருந்திருக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளும் அதே வேளையில், நகைகளை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் சென்று விநியோகிக்கத் தேவையான பாதுகாப்பை வங்கிகளுக்கு அரசாங்கம் வழங்கும்!" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நகைகளை திரும்ப வழங்கும் நடவடிக்கையில் இறுக்கமான பாதுகாப்பு விதிகள் கடைப்பிடிக்கப்பட்டன.

அதனால் வங்கிகளில் தமது நகைகளை அடகுவைக்க யாழ் குடாநாட்டு மக்கள் தயங்கினார்கள்.

தனியார் நகை அடகு கடைக்காரர்களுக்கு அதனால் நல்ல சந்தோசம்.

## இடம்பெயர்ந்தவர்கள்

போர நிறுத்தம் முடிவடைந்ததை அடுத்து 1012பேர் அகதிகளாக வந்து சேர்ந்தனர் என்று தமிழக அரசு அறிவித்தது.

1983ம் ஆண்டு ஜுலை இனக்கலவரத்தை தொடர்ந்து இந்தியாவுக்கு செல்லும் அகதிகள் தொகை அதிகரித்தது.

அகதிகளைக் கொண்டு சென்று தமிழகக் கடலோரப் பகுதிகளில் இறக்கிவிடுவதற்காகவே படகுச் சேவைகள் நடத்தப்பட்டன.

மீன்பிடிப் படகுகளிலும் அகதிகள் ஏற்றிச் செல்லப்பட்டனர். அது மட்டுமல்லாமல், இங்கிருந்து நம்மூர் மீன்பிடிப்படகில் சென்று, இந்திய கடல் எல்லையின் பின்னர் இந்திய மீன்பிடிப் படகுகளில் ஏற்றிச் செல்வதும் உண்டு.

இந்திய மீனவர்களில் பலர் அனுதாப உணர்வோடு அகதிகளை ஏற்றிச் சென்றனர். அவர்களுக்கு துணிவகைகள், சவர்க்காரம் போன்ற பொருட்களை அகதிகள் கொடுப்பார்கள்.

ஒரு சில மீனவர்கள் அநாகரிகமாக நடந்துகொள்வதும் உண்டு. அகதிகள் தமது செலவுக்காக விற்பனை செய்யக் கொண்டு செல்லும் பொருட்களை கொள்ளையடித்த சம்பவங்களும் நடைபெற்றன.

தமிழக மக்களைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் மிகவும் வாஞ்சையுடன் நடந்து கொண்டார்கள்.

போராளி அமைப்புக்களது உறுப்பினர்களை மரியாதையோடு நோக்கினார்கள்.

1983 ஜுலை முதல் 1985 செப்டம்பர் மாதம் வரை சுமார் 85 ஆயிரம் அகதிகள் தமிழகம் வந்து சேர்ந்தனர் என்று புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

கணக்கெடுப்புக்கு உள்ளாக்கப்படாமலும் மேலும் பல ஆயிரம் பேர் தமிழ்நாட்டுக்குள் பிரவேசித்திருந்தனர்.

# தீவிரவாதிகளின் கடும்போக்கும்

# இந்தியாவின் மனப் போக்கும்

## ராஜீவ் சொன்னது

இலங்கை இனப்பிரச்சனை என்பது இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சனை போன்றே அங்கு முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருந்தது.

தமிழக அரசியல் கட்சிகளின் நிலைப்பாடும், தமிழகத்தில் குவிந்த இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கையும், திம்பு பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இந்திய அரசு வெளிப்படையான மத்தியஸ்த பாத்திரம் வகிக்கத் தொடங்கியமையும் இலங்கைப் பிரச்சனை இந்தியப் பிரச்சனை களில் ஒன்று போல மாறிவிடக் காரணமாகியது.

1985 செப்டம்பர் 27ம் திகதி இந்திய ஜனாதிபதி மாளிகையில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி உரையாற்றினார். இலங்கையின் இனப்பிரச்சனை பற்றியும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

ராஜீவ் காந்தி அங்கு சொன்னது இது: "பஞ்சாப் உடன்படிக்கையை முன்னுதாரணமாகக் கொண்டு, இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் இலங்கை அரசு அக்கறையுடன் செயற்படவேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு குறுகிய காலத் தீர்வொன்று பயன்தராது. நீண்டகால அடிப்படையில் இறுதியான இணக்கத்தீர்வு காணப்பட வேண்டும்.

இது முற்றிலும் ஒரு அரசியல் பிரச்சனை இராணுவ மார்க்கங்கள் நாடப்பட்டால் நிலைமை சிக்கலடையும்" என்றார் ராஜீவ் காந்தி.

## படப்பிடிப்பு


'இந்து' பத்திரிகை பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா. 'இந்து' பத்திரிகையின் பிரபல விமர்சகர் ஜி.கே.ரெட்டி.

இந்திய அரசியல் தலைவர்களோடு நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்த விமர்சகர்.

இலங்கை இனப்பிரச்சனையின் போக்கைப் படம்பிடித்து காட்டுவது போல ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

அதிலிருந்து சில முக்கியமான பகுதிகள் இவை (தற்காலத்திற்கும் பொருத்தம்):

"அரசியல், சமூக இலக்குகளை எய்துவதற்கு ஆயுதம்தாங்கிய போராட்டத்தில் நம்பிக்கை கொண்டுள்ள தீவிரவாத இயக்கம் ஒன்று, முரணான சூழ்நிலைகளில் பலவந்தப்படுத்தப்பட்டாலன்றி, தனது அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக் கொடுக்கும் வகையிலான பேச்சுவார்த்தைகளில் நாட்டமோ



விருப்பமோ கொள்வதில்லை.

தமது இலட்சிய நோக்கத்தை அடைவதற்காக, பரந்த அடிப்படையில் தீர்க்கமாக மேற்கொள்ளப்படும் கிளர்ச்சியை இடைநடுவில் கைவிடுவது அத் தீவிரவாத இயக்கத்தின் கருத்துப்படி புரட்சிகரப் பாதையை முற்றிலும் சரணாகதியாக்குவதாகவே கொள்ளப்படும்.

அத்தகைய ஜீவ மரணப் போராட்டத்தின் நடுவில் தளர்வது போன்று காணப்படும் தோற்றப்பாடு எதுவும் இயக்கத்தில் உள்ளவர்களின் உறுதிப்பாட்டையும், உற்சாகத்தையும் மிகவும் பயங்கரமான விளைவுகளுடன் இல்லாதொழிக்கவே வகைசெய்வதாக அமைந்துவிடும்.

இத்தகைய இக்கட்டான நிலையில்தான் ஈழம் குழுக்கள் இன்று இருக்கின்றன.

சமனான சலுகை அடிப்படையிலான இணக்கத் தீர்வை காண்பது என்ற இந்திய அரசின் அழைப்புக்கு செவி மடுப்பதா? அல்லது பிரிவினைக்கான போராட்டத்தை மேலும் உறுதியுடன் முன்னெடுத்துச் செல்வதா என்பதே இக் குழுக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறது.

## மிதவாதத் தலைவர்கள்

இந்திய மண்ணில் இருந்து இக்குழுக்களின் தலைவர்கள் இயங்குவதால் இந்தியாவின் கருத்துமிக்க ஆலோசனைகளை தமிழ்த் தீவிரவாதிகள் தட்டிக் கழித்து அசட்டை செய்துவிட முடியாது.

இலங்கை அரசாங்கம் நம்பகத்தன்மையான யோசனை எதனையும் தெரிவிக்காத நிலையில் தமது இயக்கத்திற்குள் இருக்கும் தீவிரவாதிகளால் 'கடதாசிப் புலிகள்' என்று நாமகரணம் சூட்டப்படும் அபாயத்திலிருந்தும் தீவிரவாதத் தலைவர்கள் தப்பமுடியாது.

தீவிரவாதிகளிலும் பார்க்க தேசப் பக்தியில் குறைந்தவர்களல்லாத தமிழ் மிதவாத தலைவர்கள் (கூட்டணித் தலைவர்கள்) இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை தொடங்குவதால் எந்த ஆபத்தும் நிகழ்ந்துவிடாது என்று கருதுகின்றனர்.

ஐக்கியப்பட்ட இலங்கை அரசியலமைப்புக்குப் போதுமான அதிகாரப் பரவலாக்கலையும், பாதுகாப்பையும் வழங்கக்கூடிய தீர் வொன்றை, தமிழ் பிரதேசங்களுக்கு வழங்கப்படும் நியாயமான சுயாட்சி மூலம் பெறமுடியுமாயின் தமிழ்மக்களுக்கு அநாவசிய இழப்புக்களை ஏற்படுத்தக் கூடிய ஆயுதப் போராட்டத்தை தொடர வேண்டிய அவசியமில்லை என்பது தமிழ்த் தலைவர்களின் எண்ணமாக உள்ளது.

## இந்திய நிலைப்பாடு

பிரிவினைக்கு சமனான வகையில் அமையக்கூடிய முற்று முழுதான சுயாட்சிக்கு குறைந்த எதற்கும் இணங்குவதில்லை என்ற தீவிரவாதிகளின் அடம்பிடிப்பின் இலாப-நட்டங்களை தீவிரவாதிகளிடமே விட்டுவிட புதுடில்லியில் உள்ள சில வட்டாரங்கள் தயாராகவே உள்ளன.

அடம்பிடித்த நிலையில், அரை மனதுடன் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இணங்கிக் கொண்ட வரையறுக்கப்பட்ட சுயாட்சித் தீர்வுக்கு அப்பால் அவர் வழங்குவதற்கு தயாராக இல்லாதவரை, தீவிரவாதிகளின் விடாப்பிடியான நிலை தொடர்வதை அனுமதிப்பதில் எதுவித ஆபத்தும், சங் கடங்களும் ஏற்படப் போவதில்லை என்று அந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

தனது ஆயுதப்படையை பலப்படுத்தி சீரமைக்கவும், இந்தியாவைக் சாந்தப்படுத்தவுமே ஜே.ஆர். மேற்படி சுயாட்சியை வழங்க உடன்பட்டார்.

தமிழர்களின் கிளர்ச்சியைக் கண்டிப்பதோ, அல்லது ஈழத்திற்கான ஆயுதப் போராட்டத்தை அடக்குமளவுக்கு நடவடிக்கை எடுப்பதோ இந்தியாவின் தற்போதைய கொள்கையல்ல.

தமிழர்களின் சட்டபூர்வ உரிமைகளைப் பூரணப்படுத்தக் கூடிய வகையில் இலங்கை அரசாங்கம் நடந்துகொள்ளாவிட்டால், ஆயுதப் போராட்டத்தை மீள ஆரம்பிக்கும் உரிமையைக் கைவிடத் தேவையில்லை என்ற அடிப்படையில், இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கு சாத்தியமான முயற்சிகளை இந்தியா செய்கின்றது.

## வீரபுருசர்கள்

தமது இயலாமையை மறைப்பதற்காக வீரபுருசர்கள் போன்ற தோற்றப்பாட்டைக் காட்டும் தீவிரவாதிகள் தொடர்பாக புதுடில்லி வட்டாரங்களில் பொறுமையின்மையும், கவலையும் காணப்படுகிறது.

இலங்கை நெருக்கடிக்கு விரைவான திடீர் தீர்வொன்று சாத்தியமில்லை என்பது இந்திய அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் உணரப்பட்டுவருகிறது."

ஜி.கே.ரெட்டி தனது கட்டுரையில் கூறிய மேற்படி கருத்துக்கள் இலங்கைப்பிரச்சனையில் இந்தியாவின் நிலைப்பாட்டை மிகத் துல்லியமாக விளக்கியிருந்தன.

இந்திய அரசின் தவறுகள் பற்றியும் ஜி.கே.ரெட்டி குறிப்பிட்டிருந்தார். தற்போதும் பொருந்தக்கூடியவை அவை.

(தொடர்ந்து வரும்)

# பயணிகள் கப்பலை வைத்து தாக்குதல்



ஐரிஸ் மோனா பயணிகள் கப்பலை கடத்திச் சென்று, அதனை வைத்து நாடகமாடி கடற்படைப் படகுகள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியது நினைவிருக்கலாம். ஆகஸ்ட், 29-1995 இல் அது நடைபெற்றது.

ஐரிஸ் மோனா கப்பல் கடலில் நிற்பதையும், தாக்கப்பட்ட டோரா படகைப் புலிகள் 'வாட்டர் ஜெட்' மூலம் இழுத்துச் செல்வதையும் படத்தில் காணலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# எல்.ரி.ரி.ஈ-அரசு பேச்சுக்கள் மூலமே நிரந்தர தீர்வு சாத்தியமாகும்!

அலசுவது – இராஜதந்திரி



இலங்கை விமானப்படை அதனிடமிருந்த ஐந்து பெறுமதிமிக்க போக்கு வரத்து விமானங்களை இழந்துள்ளது.

இந்த விமானங்களில் இரண்டு பிரிட்டிஸ் தயாரிப்பு 'அவ்ரோ' விமானங்களாகும். ஏனைய இரண்டும் ரஷ்யத்தயாரிப்பு 'அன்டநோவ்' விமானங்கள்; மற்றயது சீனத்தயாரிப்பு வை-8ரக விமானமாகும்.

இவைதவிர ஆர்ஜன்டீனாத்தயாரிப்பான 'புக்காரா' என்ற சிறிய குண்டு வீச்சு விமான மொன்றையும் விமானப்படை இருமாதங்களுக்கு முன்னர் இழந்திருந்தது.

"கோடிக்கணக்கான பெறுமதிமிக்க விமானங்களை மட்டும் இழக்கவில்லை. சிறந்த விமானிகளையும் விமானப்படை இழந்துள்ளது. 20 முன்னணி விமானப்படை விமானிகள் கடந்த சிலமாதங்களில் விமானங்கள் சுடப்பட்டதாலும், விபத்துக்குள்ளான தாலும் உயிரிழந்துள்ளனர்," என்று இலங்கையின் முன்னாள் விமானப்படைத் தளபதியான ஏயர்மார்ஷல் ஹரிகுணதிலக்க தெரிவித்துள்ளார்.

ஏயர்மார்ஷல் ஹரிகுணதிலக்க இலங்கையில் தற்போது ஒரு பிரபல இராணுவ-அரசியல் விமர்சகர் மட்டுமல்ல; வடக்கு – கிழக்கு யுத்தத்தில் தமது மகனைப் பறி கொடுத்த ஒரு தந்தையாராகவும் அவர் இருக்கிறார்.

ஏயர்மார்ஷல் ஹரிகுணதிலக்கவின் மகனான விங்கமாண்டர் ஷிரான் குணதிலக்கவும் ஐந்து மாதங்களுக்கு முன்னர் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானப்படையின் 'அவ்ரோ' விமான மொன்றை வடக்கே கொண்டு சென்ற ஒரு விமானி என்பது குறிப்பிடத்தக்கது.

ஹரிகுணதிலக்கவின் மகன் விங்கமாண்டர் ஷிரான் குணதிலக்க எல்.ரி.ரி.ஈயினரால் சுட்டு வீழ்த்தப்பட்ட 'அவ்ரோ' விமானத்தை செலுத்துவதற்காக வீட்டிலிருந்து விமான நிலையம் புறப்படுவதற்கு முன்னர் தமது தாயாரிடம் இப்படிக் கூறியிருந்தார்: "எல்.ரி.ரி.ஈயினரிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை இருக்குமானால் விமானப்படையினரால் எதிர்காலத்தில் வடக்கே தாக்குப் பிடிப்பது கடினமாகும்"

எனவே ஷிரான் குணதிலக்க கூறியது போலவே எல்.ரி.ரி.ஈயினரின் விமான எதிர்ப்பு நடவடிக்கைகளும் தீவிரமடைந்திருப்பதையே அவதானிக்க முடிகிறது.



இதேவேளை ஆயுதப்படையினர் வசமுள்ள விமானங்கள், மற்றும் ஆயுத தளபாடங்கள் குறித்தும் விரிவாக ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

இலங்கையின் முப்படைகளும் பிரிட்டிஷ் பாணியைத் தழுவியவையாகவும், பிரிட்டிஷ் முப்படைப் பாரம்பரியங்களைப் பெரும்பாலும் பின்பற்றுபவையாகவும் இருக்கின்றன.

படைவீரர் ஒருவர் கையில் வைத்திருக்கும் துப்பாக்கி முதற் கொண்டு, ஆகாயத்தில் பறக்கும் விமானப்படைவிமானம் வரைஅனைதது யுத்த தளபாடங்களும் கடந்த பன்னிரண்டு வருடகால யுத்தத்தில் வெளிநாடுகளிலிருந்து, பெறப்பட்டவையாகவே உள்ளன.

இருந்தபோதிலும் இந்த ஆயுதங்கள், மற்றும்கனரக வாகனங்கள், விமானங்கள் என்பன எவ்வளவு தூரம் தரமானவை? தாக்குப்பிடிக்கக் கூடியவை என்பதே கேள்விக்குரியதாக இருக்கின்றது.

அண்மைக்காலங்களில் சீனா, ரஷ்யா, மற்றும் செக், ஸ்லோவாக்கியா, ஆர்ஜன்டீனா ஆகிய நாடுகளிடமிருந்தே படையினர் பெருந்தொகையான ஆயுதங்கள், தளபாடங்கள், விமானங்களை வாங்கியுள்ளனர்.

இலங்கை ஆயுதப்படையினர் கொண்டுள்ள ஆயுத தளபாடங்கள் என்பன எவ்வகையிலும் அமெரிக்க, பிரிட்டிஷ், பிரான்ஸ், ஜெர்மன் ஆகிய முன்னணித் தொழில்நுட்ப நாடுகளின் உற்பத்திகளுக்கு நிகரானவையல்ல.

அத்துடன் மேற்குறிப்பிட்ட நாடுகளின் உயர்ரக இராணுவத்தளபாடங்களை வாங்கக் கூடிய பொருளாதார வல்லமையும் இலங்கையிடம் இல்லை.

இதன் காரணமாகவே மலிவு விலையில், உயர்ந்த தரத்திலல்லாத நடுத்தரத் திறன் கொண்ட ஆயுதத்தளபாடங்களைப் பெறுவதில் இலங்கையின் ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டிவருகின்றனர்.

இதுதவிர நவீன விமானங்கள், தளபாடங்களைப் பெற்றாலும் கூட அவற்றைத் தகுந்த வகையில் இயக்கக் கூடிய, அல்லது பராமரிக்கக் கூடிய பக்குவமும் இலங்கையிடம் இல்லை.

இத்தகைய நிலைக்கு இலங்கையரது தொழில் நுட்பதிறன் பெரிதும் விரிவடையாததே முக்கிய காரணமாகும்.

1971ம் ஆண்டு இலங்கையில் 'சேகுவரா' கிளர்ச்சி வெடித்திருந்தது. அப்போது அக்கிளர்ச்சியை அடக்குவதற்கு அனறு சோவியத்யூனியன் தனது 'மிக்'ரக விமானங்கள் நான்கினை இலங்கைக்கு அன்பளிப்புச் செய்திருந்தது.

'மிக்' விமானங்கள் அதிவேகம் கொண்ட தாக்குதல் விமானங்களாகும். ஆகாயத்தில் செங்குத்தாக மேலெழுவதுடன் பல்வேறு வகையிலும் பறந்து திரிந்த தாக்குதல்களை நடத்தக் கூடிய திறன் இந்த விமானங்களுக்கு உண்டு.

ஆனால் 'சேகுவரா' கிளர்ச்சி நீண்டகாலம் தொடரவில்லை. இதன் காரணமாக மிக் விமானங்களுக்கும் பெரியளவில் செயல்பட வேண்டிய அவசியமிருக்கவில்லை.

இது தவிர அந்த விமானங்களை உரிய வகையில் கையாளக்கூடிய விமானிகளும் இலங்கையிடம் இருக்கவில்லை.

இந்நிலையில் அந்த 'மிக்' ரக போர் விமானங்கள் விமானப்படையில் வெறுமனே காட்சிப் பொருட்களாகவே வைக்கப்பட்டிருந்ததுடன், காலப் போக்கில் அதன் முக்கிய 'எஞ்சின்' பகுதிகள் அப்புறப்படுத்தப்பட்ட நிலையில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டன.

ரஷ்யா அன்று இலங்கைக்கு வழங்கிய 'மிக்' அதிவேக விமானங்களில் ஒன்றே இன்று கொழும்பு விகார மகாதேவிப் பூங்காவில் அங்கு வருவோரின் பார்வைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

இலங்கையில் கடந்த இருமாதகாலத்தில் கடலுக்குள் வீழ்ந்து மூழ்கிய இரு அன்டநோவ் 32 ரக விமானங்களும் ரஷ்யத் தயாரிப்புகளேயாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எல்.ரி.ரி.ஈ.யினருக்கு எதிராக யுத்தம் புரிய ஆரம்பித்ததும் மூன்று 'அன்டநோவ் – 32' ரக விமானங்கள் பலகோடிரூபா செலவில் ரஷ்யாவிடமிருந்து வாங்கப்பட்டன. இந்த மூன்று விமானங்களில் இரண்டே கடலில் வீழ்ந்து மூழ்கியிருப்பதுடன் நூறுக்கும்

## விகார மகா தேவிப் பூங்காவில் காட்சிக்கு இருக்கும் 'மிக்' போர் விமானம்

அமதிகமான படையினரையும் நீரில் மூழ்கடித்துக் கொன்றுள்ளன.

அன்டநோவ் விமானங்கள் எத்தகைய காலநிலைக்கும் தாக்குப்பிடிக்கக் கூடியவை; ஏவுகணைகளையும் சமாளிக்கக்கூடியவை என்றே அவ்விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த விமானங்களுக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தங்களை நோக்கும் போது, அவை எவ்வாறாயினும் எதிர்பார்த்தவாறு இயங்காது கடலுக்குள் பொத்துப். பொத்தென்று வீழ்ந்து மூழ்கியுள்ளன.

விமானிகளின் தவறா? விமானத்தின் தவறா? காலநிலைச்சிக்கலா? அல்லது எல்.ரி.ரி.ஈ.யினர்தான் இந்த இரு அன்டநோவ் விமானங்களில் ஒன்றைச் சுட்டு வீழ்த்தினார்களா? என்பதைப்பற்றி எதனையும் உடனடியாக உறுதி செய்ய முடியாதவர்களாக விமானப்படையினர் காணப்படுகின்றனர்.

இருந்தபோதிலும் கடந்த சிலமாதங்களில் விமானப்படையினர் பறிகொடுத்த ஆறு விமானங்களில் நான்கு எல்.ரி.ரி.ஈயினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது?

இதேவேளை யாழ்குடாநாட்டில் 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் செக்கோஸ்லோவாக்கிய நாட்டுத் தயாரிப்பான கனரக டாங்கி வண்டிகளையே பாவித்து வருகின்றனர்.

இந்த செக்கோஸ்லோவாக்கிய டாங்கிகள் இன்று செக்கோஸ்லோவாக்கியாவில் பாவிப்பில் பெருமளவில் இல்லை. ஏனெனில் செக் என்றும் ஸ்லோவாக்கியா என்றும் இரு வேறு தேசங்களாக அன்றைய செக்கோஸ்லோவாக்கியா பிரிந்துள்ளது.

இந்நிலையில் இந்த யுத்த டாங்கிகளில்

## தீயணைக்கும் இயந்திரங்களாக உருமாறும் செக், ஸ்லோவாக்கியா யுத்த டாங்கிகள்

பலவற்றை செக்,ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகள் கழித்து வைத்துள்ளதுடன், உபயோகிக்கக் கூடியவற்றை தீயணைக்கும் இயந்திரங்களாகவும் உருமாற்றி வைத்துள்ளன.

எனவே செக்,ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளில் தீயணைக்கும் இயந்திரங்களாக உருமாற்றம் பெற்றுள்ள யுத்த டாங்கிகளே இன்று வடக்கில் தீயைக் கக்கும் யுத்தவாகனங்களாக இரைந்து செல்கின்றன.

வடக்கே யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதே 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையின் முதலாவது கட்டம் என்று சந்திரிகா அரசு தெரிவித்திருந்தது.

ஆனால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதன் மூலம் ஓர் அரசியல் தீர்வைக் கொண்டுவர முடியுமா? என்ற கேள்வியே தற்போது புடைத்தெழுந்திருக்கின்றது.

இத்தகைய நிலையிலேயே அரசியல் ரீதியிலான பேச்சுக்களை எவ்வாறு எப்போது, எத்தகைய கோணத்தில் ஆரம்பிப்பது என்ற கேள்வியும் எழுகின்றது.

இலங்கையில் காணப்படும் அரசியல் தன்மைகள், மற்றும் வடக்கு-கிழக்கில் நிலவுகின்ற சூழ்நிலைகளின் ஊடாக வெனினும் அரசியல் அணுகுமுறைகளை ஆரம்பிப்பதற்கான சாதக நிலைமைகளை கண்டறிவதென்பது மிகவும் கடினமாகவே இருக்கின்றது.

இக்கட்டத்திலேயே வடஅயர்லாந்து, பாலஸ்தீன அரசியல் நடவடிக்கைகள் எமக்கு நல்ல முன்னுதாரணங்களாக இருக்கின்றன.

வட அயர்லாந்தில் ஐரிஷ் குடியரசு இராணுவம் (I.R.A) தனது சுயாட்சிக்காக போராடிய போதிலும் வட அயர்லாந்தில் பிரிட்டிஷ் படையினர் நிலை கொண்டுள்ளனர். அங்கு பிரிட்டிஷ் ஆட்சியே இடம் பெறுகின்றது.

இத்தகைய நிலையிலும் ஐரிஷ் கெரில்லாக்களின் அரசியல் பிரிவான 'ஷின்பெயினின்' அரசியல் நடவடிக்கைகள் பிரிட்டிஷ் அரச ராஜதந்திர நடவடிக்கைகளுடன் திடமாக வாதிடுவதாகவே இருக்கின்றது. இதன் காரணமாக தற்போது வடஅயர்லாந்தில் போர்நிறுத்தம் ஏற்பட்டிருப்பதுடன், ஐரிஷ் பிரிவினைவாதிகளில் அரசியல் நடவடிக்கைகள் உலகின் கவனத்தைப் பெற்றிருப்பதாகவும் இருக்கின்றது.

பாலஸ்தீனத்திலும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு மூர்க்கத்தனமானதாகவே இருந்தது. பாலஸ்தீனக் கெரில்லாக்களும் இத்தகைய ஆக்கிரமிப்பை பல்வேறு வகையான தாக்குதல் வடிவங்களிலும் எதிர்த்திருந்தனர்.

ஆனால் தற்போது பாலஸ்தீனர்களின் சுயாட்சிக்கான அடித்தளமிடப்பட்டிருப்பதும், இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீனத்தில் கைப்பற்றப்பட்ட பகுதிகளிலிருந்து வாபஸ் பெறப்பட்டிருப்பதும் இருதரப்பினராலும் மேற் கொள்ளப்பட்ட அரசியல் நடவடிக்கைகள் காரணமாகவே சாத்தியமாகியுள்ளன.

இலங்கையிலும் வடக்கு கிழக்கில் ஓர் அரசியல் தீர்வைக் கொண்டுவர, அரசு வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தலாம், ஆனால் அப்பேச்சுக்கள் எவ்வகையிலும் ஒரு நிரந்தரத் தீர்வுக்கு வழியமைக்கப் போவதில்லை.

ஏனெனில் வடக்கு-கிழக்கில் எல்.ரி.ரி.ஈ.யினரது ஆயுதப் போராட்ட மென்பது எந்தவொரு வடிவிலும் தொடர்ந்து இருக்கவே செய்யும்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றினாலும் கூட, எல.ரி.ரி.ஈ.யினருடனான அரசியல் பேச்சுக்கள் மூலமாகவே வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத்தீர்வை ஏற்படுத்த முடியும் என்பதே நடைமுறைச்சாத்தியமான கணிப்பாக இருக்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

:.பிரான்ஸ் நாட்டில் ஓர்லி விமான நிலையத்தில் வைத்து இஸ்ரேலிய எல்.அல் பயணிகள் விமானத்தை பயணிகளோடு தகர்க்கும் திட்டத்தை வகுத்தது பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி. (பி.எ:.எல்.பி) முதல் தாக்குதல் தோல்வியில் முடிகிறது. மீண்டும் இரண்டாவது தாக்குதல். தாக்குதல் முயற்சி மீண்டும் தோல்வி. விமான நிலைய பாதுகாப்புப் பிரிவினருடன் பி.எ:.எல்.பி. போராளிகள் மூவரும் மோதவேண்டி ஏற்படுகிறது. **அதைத் தொடர்ந்து......**

# ஏர்வ்கே 12

# இறங்குவோம்..?

தருவது ரசிகன்





**து**ப்பாக்கிச் சமர் நடந்துகொண்டிருக்க, தாக்குதல் குழுவில் உள்ள ஏனைய இருவரும் துரிதமாகச் செயல்பட்டனர்.

வெடிச் சத்தங்களைக் கேட்டு ஓடிக் கொண்டிருந்த பார்வையாளர்களில் பத்துப் பேரை பணயமாகப் பிடித்து, தமக்கு முன்பாக மனிதக் கேடயங்களாக நிறுத்திவிட்டார்கள்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு இப்போது என்ன செய்வது என்று தெரியவில்லை.

அவர்கள் சுடுவதை நிறுத்திக் கொண்டார்கள். பணயக் கைதிகளை கேடயமாக அழைத்துக்கொண்டு மூவரும் பார்ப்போர் கூடத்தின் இரண்டாவது மாடிக்குச் சென்று, அங்குள்ள கழிப்பறையொன்றில் புகுந்து கொண்டார்கள்.

10 பணயக் கைதிகளில் ஒருவர் நிறைமாதக் கர்ப்பிணி. அவருடைய 5 வயதுப் பெண்குழந்தையும் பணயக் கைதியாகியது.

கழிப்பறையை நெருங்கினால் பணயக் கைதிகளுக்கு ஆபத்து ஏற்படும் என்பதால், பாதுகாப்புப் பிரிவினர் நெருங்கவில்லை.

ஒரு மணி நேரத்தின் பின்னர் ஒரே ஒரு உயரதிகாரி கதவருகே சென்று பேச்சுக் கொடுத்தார்.

“உங்கள் கோரிக்கை என்ன? யார் நீங்கள்?”

கழிப்பறைக் கதவின் கீழ்ப்புறமுள்ள இடைவெளியூடாக ஒரு துண்டுக் காகிதத்தில் பதில் வந்தது.

“நாங்கள் மூவரும் ‘ஒப்பரேஷன் பௌடியா’ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். சிறிய கைக்குண்டுகள், துப்பாக்கிகள், துப்பாக்கிகளின் வயிற்றை போதியளவு நிரப்பக்கூடிய ரவைகள் வைத்திருக்கிறோம். உங்களில் யாராவது புத்தி இருக்கிறது என்று காட்ட நினைத்தால், எங்கள் துப்பாக்கிகளுக்கு உள்ள சக்தியை காட்ட வேண்டியிருக்கும்.” அதுதான் பதில்.

ஓர்லி விமான நிலையம் மூடப்பட்டது. வெளியே தனது ‘சிம்கா’ காரில் காத்துக் கொண்டிருந்த கார்லோஸ் காரைக் கிளப்பிக் கொண்டு பறந்துவிட்டான்.

நேரம் இரவு 9.00 மணி. கழிப்பறைக்குள்ளிருந்து வேட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

❂❂

**வே**ட்டுச் சத்தங்களைக் கேட்டதும் வெளியே நின்ற அதிகாரிகளுக்கு பீதி ஏற்படத்தொடங்கியது.

பலர் கூக்குரல் போடும் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

“தாமதித்துக் கொண்டிருப்பது ஆபத்து. பணயக்கைதிகளுக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டால் ஃபிரான்ஸ் அரசு தனது மக்களுக்கு பதில் சொல்ல முடியாமல் போகும்.”

விமானநிலைய உயரதிகாரி போனில் எச்சரித்தார். அவர் எச்சரித்தது ஃபிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சகத்தை.

“அவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஏதாவது தெரிகிறதா?”

“‘ஒப்பரேஷன் பௌடியா’ இயக்கத்தை சேர்ந்தவர்கள் தாங்கள் என்று கூறுகிறார்கள்.”

“அது என்ன ஒப்பரேஷன் பௌடியா?”

“மன்னிக்கவேண்டும். அதைக் கண்டு பிடிப்பது உங்கள் வேலை.” விமான நிலைய அதிகாரி தொலை பேசியை வைத்துவிட்டார்.

ரிசீவரை வைத்த ஓசையில் இருந்தே அவர் கோபமாக இருக்கிறார் என்பது தெரிந்தது.

பாதுகாப்பு அமைச்சகம் சுறுசுறுப்பாகி கம்பியூட்டர் உதவியால் யார் பௌடியா என்று விபரம் கேட்க, பௌடியா என்பவன் பாலஸ்தீனப் போராளி. பி.எஃப்.எல்.பி யின் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கு பொறுப்பானவன் என்று கம்பியூட்டர் விலாவாரியாக விளக்கியது.

ஃபிரான்சிலுள்ள எகிப்திய தூதர் மத்தியஸ்தம் செய்ய முன்வந்தார்.

எகிப்திய தூதரின் மத்தியஸ்தத்தை ஃபிரான்ஸ் ஏற்க முன்வந்தது.

எகிப்திய தூதர் கழிப்பறைக் கதவின் மறுபக்கம் நின்று தன்னை உரத்த குரலில் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

“எப்படி நம்புவது?”

உள்ளேயிருந்து கேள்வி வந்தது. தூதர் தனது அடையாள அட்டையை கழிப்பறைக் கதவின் கீழ் இடைவெளியூடாக உள்ளே தள்ளினார்.

உள்ளே சில நிமிடங்கள் அமைதி. மூவரும் தமக்குள் பேசி ஒரு முடிவுக்கு வந்து, ஒரு துண்டுக் காகிதம் எடுத்து எழுதினார்கள்.

“எங்களுக்கு அதிகமாக ஒன்றும் வேண்டாம். எயார் ஃபிரான்ஸ் விமானம் ஒன்றும், மூன்று விமானமோட்டிகளும் தந்தால் போதும். 10 பேரையும் பத்திரமாகத் திருப்பித் தருவோம். வேட்டுச் சத்தங்கள் கேட்டதல்லவா? பயப்படக் கூடிய விடயம் ஒன்றுமில்லை. கூரையில் சுட்டு விளையாடியது மட்டும்தான்.”

பணிவதைத் தவிர ஃபிரான்ஸ் அரசுக்கு வேறு வழி தெரியவில்லை.

எகிப்திய தூதர் திரும்பி வந்தார். “உங்கள் கோரிக்கைக்கு ஓ.கே. விமானம் மூன்று ஓட்டிகளுடன் காத்திருக்கிறது.”

“புத்திசாலித்தனமான முடிவு. முதலில் ஒரு வேன் ரெடி பண்ணுங்கள். விமானம் வரை பணயக் கைதிகளோடு சென்று, விமானத்தில் பத்திரமாக ஏறிய பின்னர்தான் பணயக்கைதிகளை வேனில் திருப்பி அனுப்புவோம்.”

வேன் ஏற்பாடு செய்யப்பட்டது. மூவரும் விமானத்தில் ஏறிக் கொண்டதும், பணயக் கைதிகள் பத்துப் பேரும் திரும்பிவந்து சேர்ந்தனர். பத்துப் பேருக்கும் ஆனந்தக் கண்ணீர்.

▢▢

**வி**மானம் வானில் தாவியது. “எங்கே இறங்குவது?” விமான ஓட்டி கேட்டார். மூவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

“பெய்ரூட் விமான நிலையத்தில் இறக்குங்கள்.”

பெய்ரூட் விமான நிலையத்தில் விமானம் இறங்க அனுமதி மறுக்கப்பட்டது.

“சரி சிரியாவுக்குப் போ!”

போனது. சிரியாவும் “திரும்பிப் போ! இங்கே அனுமதியில்லை” என்று கையை விரித்தது.

“கழுத்தறுக்கிறார்கள். இறுதி முயற்சியாக ஈராக் விமான நிலையத்திற்கு விடு!”

அனுமதி கொடுத்தால் தனது சுயரூபம் தெரிந்துவிடும். இந்தத் திட்டங்களோடு தனக்குள்ள தொடர்பை உறுதி செய்தது போலாகிவிடும் என்பதால் ஈராக் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டது.

20 மணிநேரத்திற்கு மேல் வானில் பறந்தால் விமானத்தின் பெற்றோல் தீர்ந்து விடும். இப்போது பெற்றோல் தீர்ந்து கொண்டிருந்தது.

✿▲✿

**கா**ர்லோஸ் சந்தோசப்பட்டான். தாக்குதல் தோல்வியில் முடிந்தபோதும், மாட்டிக் கொள்ளாமல் தனது சகாக்கள் தப்பியது சந்தோசம்தான்.

தனது பொறுப்பாளர் மௌக்கார்பெல் மீதுதான் கார்லோஸுக்கு எரிச்சலாக இருந்தது.

‘இரண்டாவது தாக்குதலை வேறு இடத்தில் வைத்திருக்கலாம். ஒரே இடத்தில் நடத்தி இரண்டுமே தோல்வியாகி விட்டது.’ சலித்துக்கொண்ட கார்லோஸுக்கு மாற்றம் தேவைப்பட்டது.

மாஞ்செலா வீட்டுக்குப் போனான். மாஞ்செலா குளித்து முடித்து மெல்லிய துணியால் உடலை மூடிக்கொண்டுவந்து கதவைத் திறந்தாள். வாசனையாக இருந்தாள். சலித்துப்போன மனநிலைக்கு அந்த வாசனை இதமாயிருந்தது.

சோப் கட்டிமீது சுற்றியிருக்கும் உறையை அகற்றுவது மாதிரி, மாஞ்செலா தன்னைச் சுற்றியிருந்த துணியை கார்லோஸ் அகற்றினான். ஈரம் காயாமல் இருந்தாள்.

“இரண்டு நாட்களாக எங்கே போயிருந்தாய்?” என்றாள் அவளும் தனது பங்குக்கு கார்லோஸை கலைந்து கொண்டு.

❦❦❦

**வி**மானத்திற்கு பெற்றோல் நிரப்ப மட்டும் அனுமதி கிடைத்தது. “பெற்றோல் நிரப்பிக் கொண்டு உடனே கிளம்பிவிட வேண்டும். மேலதிகமாக ஒரு நிமிடம் கூடத் தாமதிக்கக் கூடாது.” கண்டிப்பான உத்தரவு.

ஈராக்கிலுள்ள ஃபிரான்ஸ் நாட்டுத் தூதர் ஈராக் அரசுடன் பேசினார்.

“விமானம் இறங்க அனுமதி கொடுத்தால் என்ன?” முதலில் மறுப்பது போல நடித்தது ஈராக். தூதர் தொடர்ந்து வலியுறுத்தினார்.

“உங்கள் கோரிக்கையை மறுக்க முடியவில்லை. அதனால்தான் அனுமதி கொடுக்கிறோம்” என்று பெரிய பொய் சொல்லி, பக்தாத் விமான நிலையத்தில் விமானம் இறங்க அனுமதித்தது ஈராக்.

விமானம் இறங்கியது. தாக்குதல் குழுவினர் மூவரும் ஈராக் பாதுபாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

அன்றிலிருந்து மூன்றாவது நாள் மூன்று பேரும் பி.எஃப்.எல்.பி.தளபதி வாடி ஹாட்டாட் முன்னிலையில் கொண்டுபோய் சேர்க்கப்பட்டனர்.

மூவரையும் கைகுலுக்கி வரவேற்றார் வாடி ஹாட்டாட்.

“ஈராக் நமது நண்பன். ஆனால் தற்போதைக்கு இரகசிய நண்பன். அதனால்தான் கண்டிப்பாக நடப்பது போல உங்களிடம் நடித்திருக்கிறது. அதனை மறந்துவிடுங்கள்” என்றார் வாடி ஹாட்டாட்.

பத்திரிகையாளர்கள் ஈராக்கிடம் கேட்டார்கள், “அந்த மூவரும் எங்கே?” ஈராக் அரசாங்கம் அக்கேள்விக்கு சொன்ன பதில்– “மூவரும் தீவிரமாக விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்” அதே நேரத்தில், அச் செய்தியை பத்திரிகைகள் தெரிவித்துக் கொண்டிருந்த நேரத்தில், ஈராக் உயர் அதிகாரி ஒருவர் பி.எஃப்.எல்.பி. தளபதி வாடி ஹாட்டாட்டுக்கு போனில் பாராட்டுத் தெரிவித்தார்.

“தாக்குதல்கள் தோல்விதான். ஆனால் நாங்கள் போட்ட திட்டம் வெற்றி.”

வாடி ஹாட்டாட் அதைக் கேட்டு புன்னகைத்துக் கொண்டார். ஒரு பெருந்தொகையான நிதியை பி.எஃப்.எல்.பி.க்கு கொடுத்தது ஈராக்.

“பாலஸ்தீன விடுதலை இயக்க (பி.எல்.ஓ) தலைவர் யாசீர் அரபாத் தீவிரவாதிகளை அடக்கிவைக்கும், ஆற்றலை தொலைத்துவிட்டார்.” இஸ்ரேல் குற்றம் சாட்டியது.

ஈராக்கும், பி.எஃப்.எல்.பி. யும் மகிழ்ந்தன.

**ஃபி**ரான்சிலுள்ள கார்லோஸுக்கும், மௌகார்பெல்லுக்கும் இடையே பிரச்சனைகள் வளர ஆரம்பித்தன.

தளபதி வாடி ஹாட்டாட்டுக்கு அந்தப் பிரச்சனை தெரியாது. அவர் ஒரு முக்கிய வேலையை இருவரிடமும் ஒப்படைக்கத் தீர்மானித்தார். **(தொடர்ந்து வரும்)**

# ஆஸ்துமா தீருமா?

## ஹலோ டாக்டர்



“**வ**ணக்கம் டாக்டர்! இன்று நீங்கள் விரிவாகப் பதில் தரவேண்டியிருக்கும். கேள்வி அப்படி.... கேட்கட்டுமா?”

“கேளுங்கள். பீடிகை வேண்டாம்.”

“ஆஸ்துமா என்றால் என்ன?”

“நாம் ஆரோக்கியமாக இருக்கும் போது சுவாசிக்கும் காற்று மூச்சுக்குழல் வழியாக நுரையீரலுக்கு எந்தவித சிரமமும் இல்லாமல் உள்ளே போய் வெளியே வரும். அப்படி அல்லாமல் மூச்சுக் குழலில் சுருக்கம் உண்டாகி, காற்று உள்ளேபோய் வெளியே வர வாய்ப்பு இல்லாமல் அடைப்பு ஏற்படும். அதனால் காற்றை உள்ளே இழுக்கவோ, வெளியே விடவோ முடியாத நிலை உண்டாகும். அதுவே ஆஸ்துமா எனப்படுகிறது.”

“நல்ல விளக்கம். ஆஸ்துமாவில் பலவகை உண்டு என்கிறார்களே டாக்டர்?”

“ஆம், பல வகைகள் இருக்கின்றன. தற்காலிக ஆஸ்துமா என்பது ஒரு வகை. இது அவ்வப்போது வந்து நீங்கும். அடுத்தது நீண்டகாலம் தொடரும் ஆஸ்துமா. இது ஒரு முறை ஏற்பட்டால் வாழ்நாள் முழுவதும் தொடரும். கார்டியாக் ஆஸ்துமா என்பது இதயக் கோளாறால் ஏற்படுவது.”

“ஆஸ்துமா நோய் வரக் காரணம் என்ன டாக்டர்?”

“சுவாசக் குழாய் உட்புறமாகச் சுருங்கி, மூச்சுவரும் வழியை அடைத்து விடுவதால் மூச்சுவிட முடியாதபடி சிரமம் ஏற்பட்டு ஆஸ்துமா வருகிறது. பரம்பரையாகவும், இதயம் சரிவர இயங்காவிட்டாலும், அலர்ஜி காரணமாகவும், இரத்தத்தில் ஈசினோபீலியா அதிகம் இருந்தாலும் ஆஸ்துமா வரும்.”

“ஆஸ்துமா நோயின் அறிகுறிகள் என்ன டாக்டர்?”

“அடிக்கடி தும்மல் வருதல், சளி வருதல், தொண்டை கரகரப்பு, இருமலுடன் கூடிய சளி, பூனைக்கு இருப்பது போன்ற இழுப்புச் சத்தம் வருதல் ஆகியன ஆஸ்துமா நோய்க்கான அறிகுறிகள்.”

“மழைக்கால்த்தில் சளி பிடிக்கிறதே, அதுவும் ஆஸ்துமாதானா?”

“மழைக்காலத்தில் சளி பிடித்தல், தொண்டை கட்டுதல், மார்சளி பிடித்தல் போன்றவை ஆஸ்துமா அல்ல. மூக்கு அடைப்பு வேறு; மூச்சு அடைப்பு வேறு. இதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். மூக்கடைப்பு இருக்கும்போது மூச்சுக் குழலில் இருந்து காற்று வரும். ஆஸ்துமா இருக்கும் போது மூச்சுவிடவே சிரமமாக இருக்கும்.”

“ஆஸ்துமா நோயாளி இளைத்துப் போவாரா?”

“தவறான கருத்து அது. சிலர் பிறந்ததில் இருந்தே ஒல்லியாக இருப்பார்கள். டி.பி. போன்ற வேறு நோய்கள் இருந்து அவற்றைக் கவனிக்காமல் விட்டாலும் உடம்பு இளைக்கலாம். இந்த நோய்கள் உள்ளபோது பசி எடுக்காது. ஆனால் ஆஸ்துமா நோயாளிகள் குண்டாகவும் இருக்கிறார்கள்.”

“ஆஸ்துமா நோயை முற்றிலும் குணப்படுத்த இயலுமா டாக்டர்?”

“முற்றிலும் குணப்படுத்துவது கஷ்டம். உலக சுகாதார நிறுவனம் கூட ஆஸ்துமாவுக்கு நிரந்தர மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை என்றே கூறியுள்ளது.”

“அப்படியானால் ஆஸ்துமா நோயாளிகளுக்கு நீங்கள் கூறும் யோசனை என்ன டாக்டர்?”

“வீணான வழிகளில் முயன்று நோயை அதிகப்படுத்த வேண்டாம். அலர்ஜி சோதனை செய்து, எது, எது உங்களுக்கு ஒத்துவரும், எது, எது ஒத்துவராது என்பதை மருத்துவரிடம் கேட்டு ஒரு பட்டியல் பெற்றுக் கொண்டு, அதைப் பின்பற்றுங்கள். நுரையீரலுக்கு அலர்ஜியை ஏற்படுத்தும் பொருட்களைத் தவிர்க்கும்போது, அந்தப் பொருட்களால் ஏற்படும் ஆஸ்துமா வராது. நீண்டகால ஆஸ்துமாவுக்கு மருத்துவரின் ஆலோசனைப்படி தொடர்ந்து மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டு வர வேண்டும்.”

“இன்று இது போதும்; மீண்டும் மறுவாரம் சந்திப்போம் டாக்டர்.”

# வியப்பூட்டும் விளம்பர உலகம்

## பணம்–புகழ்–நட்சத்திர மதிப்பு



புரியும்தானே!

**இ**ன்று முரசின் முகப்பில் ஒரு ஜோடி உல்லாசமாக பட்டும் படாமல் அணைத்துக் கொண்டிருக்கும் காட்சி உங்கள் பார்வையில் பட்டிருக்கும். இக்காட்சி எந்தப் படத்தில் வருகிறது என்று கேட்கவும் தோன்றியிருக்கும்.

அது திரைப்படக் காட்சியல்ல; விளம்பரத்திற்காக சுடப்பட்ட காட்சி. இருவரும் ‘சூப்பர் மொடல்’கள்.

திரைப்படங்களை எடுப்பதைவிட கூடிய கவனத்தோடு தற்போது விளம்பரப்படங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. செலவும் எக்கச்சக்கம்.

இன்று முகப்பில் இருக்கும் அந்த ஜோடியின் அணைப்பை இயல்பாக தத்ரூபமாக கொண்டுவர கிட்டத்தட்ட 50 பிலிம்ரோல்கள் தீர்க்கப்பட்டதாம். ஒரு புகைப்படத்திற்கே இந்தப்பாடு என்றால், தொலைக்காட்சிகளில் வரும் விளம்பரப் படங்களுக்கு எந்தளவு செலவும், சிரமமும் ஏற்படும் என்பது சொல்லாமலேயே

இன்று பணம் பொழியும் தொழில் விளம்பரப் படங்கள் எடுப்பதும், அதில் நடிப்பதும் என்றாகிவிட்டது.

திரைப்பட நட்சத்திரங்களுக்கு உள்ள மரியாதையும் அந்தஸ்தும் விளம்பரப் பட நடிக, நடிகைகளுக்கும் கிடைக்கிறது.

குறிப்பாக மதுசாப்ரே, விசாரே, கிளாடியா போன்ற விளம்பர நடிகைகளுக்கு எல்லைகளைக் கடந்த புகழும், பிரபலமும் இருக்கிறது. ஆண்களைவிட பெண்களே விளம்பரப் பட உலகில் அதிகம் பிரபலமாகிறார்கள்.

முன்னணி விளம்பர நடிகை ஒருவருக்கு குறைந்தது 50 ஆயிரம் ரூபா இந்தியாவில் ஊதியமாகக் கிடைக்கிறது.

மது சாப்ரேதான் இன்றைய தேதியில் இந்தியாவின் ‘சூப்பர் மொடல்.’

மொடல் நடிகைகளில் சிலர் வித்தியாசமானவர்கள். தமிழ்நாட்டில் தருணா என்றொரு மொடல் இருக்கிறார். ஆண்களோடு சேர்ந்து போஸ் கொடுக்கமாட்டேன் என்பதுதான் அவரது முதலாவது நிபந்தனை. சினிமாவில் நடிக்கவும் அழைப்பு வந்தது. யோசிக்கவேயில்லை–நிராகரித்து விட்டார்.

இதற்கு முற்றிலும் மாறானவர் மது சாப்ரே. “உடலில் வளம் இருக்கிறது. அதை வெளிப்படுத்துவதில் என்ன தவறு இருக்க முடியும்?” என்று கேட்கிறார். தாராளமாகக் கண்களுக்கு விருந்து படைக்கிறார்.

இந்தி நடிகை மம்தா குல்கர்னி தன் மார்புகளை கைகளால் மறைத்தும், மறையாமலும் ஒரு பத்திரிகைக்கு போஸ் கொடுத்தார். அது பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. மம்தா கவலையே படவில்லை. இந்தி நடிகை பூஜாபட் தனது உடலில் வர்ணங்களை மட்டுமே பூசிக் கொண்டு ஒரு விளம்பரப் படத்தில் நடித்தார். பூஜாபேடி என்னும் நடிகை கருத்தடை விளம்பரம் ஒன்றில் அதிரடியான போஸ் கொடுத்தார்.


நடிகை ஹேமமாலினியின் கையில் பீடிக் கட்டு ஒன்றைக் கொடுத்து பீடி விளம்பரம் செய்தார்கள். பொருத்தமே இல்லாத விளம்பரம் என்று பலர் முகம் சுளித்தார்கள்.

வியப்பூட்டும் விளம்பர உலகில் ஒரு பொருளை அறிமுகப்படுத்த பொருத்தமான வாசகங்களை தேடுவதைவிட, பெண்களின் படங்களைப் போட்டு விழிகளைச் சுண்டியிழுப்பதில் தான் கூடுதல் அக்கறை காட்டப்படுகிறது. விதிகள் அனுமதிக்குமானால் நிர்வாணம் வரை செல்லவும் சில விளம்பரப் பட நிறுவனங்கள் தயார்தான்.



படிப்பகம்

www.padippakam.com



# முடியா இது முடியா?

படத்தில் இருப்பது ஒரங்குட்டான் ரகக் குரங்கார். மொசு மொசுவென்று முடி வளர்ந்திருக்கிறதே, அதுவும் ஒரு தினுசாக இருக்கிறதே என்று நினைப்பீர்கள். அதொன்றுமில்லை மிஸ்டர் ஒரங்குட்டார் நன்றாகக் குளிக்கவைக்கப்பட்டார். குளித்து முடிந்ததும் ஒரு சிலிர்ப்பொன்று சிலிர்த்தார் பாருங்கள், கண்கொள்ளாக் காட்சிதான். அன்று முழுக்க இதே கோலத்தோடுதான் காட்சியளித்தார். கண்டவர்களுக்கு அமோகமான வியப்பு. இலண்டனில் உள்ள செசிங்டன் மிருகக்காட்சிச்சாலையில்தான் இந்த ஒரங்குட்டார் சீவியம் நடத்துகிறார்.

ஒரங்குட்டாரின் குளிப்பால் பார்வையாளர்களுக்கு களிப்பு. (அடுக்குமொழி ஒ.கேயா?)

## தகவல் பெட்டி



# நாக அதிசயம்

சரித்திர காலங்களில் ஐந்து தலை நாகங்கள் இருந்ததாக கேள்விப்பட்டிருப்பீர்கள். அது அப்போது. பிரான்சு நாட்டிலுள்ள காடொன்றில் பிடிக்கப்பட்ட இராஜநாகத்திற்கு இரண்டு தலைகள் உடைய குட்டி ஒன்று பிறந்துள்ளது. இந்தப் பாம்புக் குட்டிக்கு உடல் ஒன்று தலை மட்டும் இரண்டு. இதனால் வேறு பாதைகளில் பார்த்துக் கொண்டு உடலை வெவ்வேறு பாதைகளில் இழுத்துச் செல்லும். இரு தலைகளும் வேறு வேறு திசைகளில் செல்வதால் உடலை அசைப்பது சிரமமாயிருக்கிறது. இக்குட்டி நாகத்தை அந்த நாட்டில் உள்ள மிருகக் காட்சி சாலையில் பொது மக்கள் பார்வைக்கு வைத்துள்ளனர். நடுங்கவைக்கும் நாகம் வியக்கவும் வைக்கும்.

# அழிப்பதில் பல ரகம்



← **மிக்-29:** இரு இருக்கைகள் கொண்ட சண்டை விமானம். இதன் வேகம் 700 மைல் வரை செல்லும். அதி நவீன கருவிகள் கொண்டது. இது முன்னாள் சோவியத் யூனியனின் தயாரிப்பு.

← **மிராஜ் எஃப்-1:** சிறந்த ஆகாய-ஆகாயத் தாக்குச் சண்டை விமானம். பிரான்சு நாட்டின் தயாரிப்பான இது எல்லாக் காலச் சூழலுக்கும் ஏற்ற சண்டை விமானமாம்.

← **எஸ் யூ-24:** வானத்திலிருந்து தரை நோக்கி ஏவக் கூடிய மற்றும் வெவ்வேறு இரக ஏவுகணைகள், குண்டுகளை காவிச் செல்லத்தக்க பொம்பர் விமானம்.

← **II-76:** முன்கூட்டியே எதிரி விமானங்கள் பற்றி தகவல் தரக்கூடிய ராடர் ஜெட் போர் விமானம். இது முன்னாள் சோவியத் யூனியனின் தயாரிப்புக்களில் ஒன்று. அமெரிக்க 'எவாக்ஸ்' இனை ஒத்தது.

# தலைகீழாக வானில் ஒரு வலம்


விமானப்படை வீரர்களின் விமான சாகசங்கள் பலவற்றைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் பறந்து கொண்டிருக்கும் விமானத்தின் மேல் மனிதனால் சாகசம் செய்ய முடியுமா? முடியும் என்று நிரூபித்துள்ளார் அமெரிக்காவைச் சேர்ந்த தெரசா என்னும் பெண்.

விமான இறக்கைகளில் அமர்ந்து சென்று சாதனை படைத்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தெரசா விமானத்தின் இறக்கையில் தலைகீழாக நின்று கொண்டிருக்க உயரமான கட்டிடங்களின் மேலாக விமானம் படு வேகத்தில் பறந்து கொண்டிருந்தது. இது ஒரு உலக சாதனை. பெருந்திரளான மக்கள் இந்த சாகசத்தை நேரில் கண்டு திகைத்து நின்றனர்.



# 'வேகப் பாய்ச்சல்' ஆயுத வண்டி!

பாலைவன மண்ணிலோ, மற்றும் தரைகளிலோ சகதியிலோ எங்கென்றாலும் பாய்ந்து செல்லக் கூடிய இலகுரகக் கவச வண்டி இது. சுமார் 50,000 அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது (நம்மூர் மதிப்பில் கிட்டத்தட்ட 25 இலட்சம்) இந்த வாகனத்தில் வகை வகையான இயந்திரத் துப்பாக்கிகள், கிரனைட் லோஞ்சர்கள் போன்ற தாக்குதல் ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ளன. நம் நாட்டில் இது வரை பாவனைக்கு வரவில்லை. வளைகுடா யுத்தத்தில் அமெரிக்காவால் பாவிக்கப்பட்டது.




# கின்னஸ் வெங்காயம்

வெங்காயம் கறியில் இருக்கும், சாம்பாரில் இருக்கும். இப்போது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்திலும் வெங்காயம் இடம்பிடித்துவிட்டது. காரணம் அதன் எடை ஏழரைக் கிலோ! வெங்காயத்தின் உரிமையாளர் பெயர் மெல் எட்னி. வெங்காயத்தை உரித்தால் கண்ணில் நீர்வரும். மெல் எட்னிக்கும் கண்ணீர் வந்தது. அது ஆனந்தக் கண்ணீர்.




படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசிட்

## எப்படியான கணவர் வேண்டும்

பம்பாய் சஞ்சிகை ஒன்றுக்கு ஸ்ரீதேவி கொடுத்துள்ள பேட்டியில் இருந்து.

கேள்வி- உங்கள் கணவர் எப்படி இருக்க வேண்டும்?

பதில்- என்னைவிட உயரமானவராக, என் சம்பாத்தியத்தை எதிர்பார்க்காதவராக, உண்மையானவராக இருக்க வேண்டும்.

கேள்வி- அப்படி ஒருவரை கண்டு பிடித்து விட்டீர்களா?

பதில்- கண்டுபிடித்திருந்தால் கல்யாணத்தை அம்மா நடத்தி முடித்திருப்பாரே.

கேள்வி- காதல் திருமணம் செய்து கொள்வீர்களா?

பதில்- நோ. அம்மா காட்டும் ஆள்தான் எனது மணமகன்.

கேள்வி- மாதுரி டிக்ஷித் உங்கள் இடத்தைப் பிடித்து விட்டாரே?

பதில்- வெற்றிக்கு அவர் தகுதியானவர், திறமையானவர்.

கேள்வி- தொழில் துறையில் முதலீடு செய்திருக்கிறீர்களாமே?

பதில்- தவறான தகவல். அப்படி வேறு துறையில் ஈடுபட நேரமும் இல்லை.

## தொட்டாச்சிணுங்கி

கார்த்திக் ஒரு பாடகர். ரேவதியோடு நட்பாகப் பழகுகிறார். ரகுவரனைப் பிடித்து ரேவதிக்கு திருமணம் செய்து வைக்கிறார். ரேவதி-கார்த்திக் நட்பு தொடர்கிறது. ரகுவரன் சந்தேகப்படுகிறார். அது புரிந்து கார்த்திக் ரேவதியோடு நட்பை முறித்துக் கொள்ளுகிறார். தொட்டாச்சிணுங்கியின் பாதிக்கதை இதுதான். ஜெரால்ட், பிலிப் என்னும் இரண்டு அவுஸ்ரேலிய இசைக்கலைஞர்கள் தான் படத்திற்கு இசையமைக்கிறார்கள்.

## சினி துளி

*பிரபு-மோகன்லால் நடிக்கும் மலையாளப் படமான 'காலாபாணி' யை தமிழில் எஸ்.தாணுவும், இந்தியில் அமிதாப்பச்சனும், கன்னடத்தில் நடன இயக்குநர் சுந்தரமும் வெளியிடும் உரிமையை வாங்கியிருப்பது தெரிந்த செய்தி. அண்மையில், இப்படத்தை தெலுங்கில் வெளியிடும் உரிமையை நாகிரெட்டியார் வாங்கியிருக்கிறார்.

*'காதலன்' படத்தில் கொடுமைக்கார பொலிஸ் இன்ஸ்பெக்டராக நடித்த கவிதாஸ்ரீ, முதன் முறையாக இந்திப் படமொன்றில் நடனமாடியிருக்கிறார். தர்மேந்திரா-ஜெயப்பிரதா நடிக்கும் 'லோபுஷ்' என்ற இந்திப் படத்திலேயே கவிதாஸ்ரீயின் நடனம் இடம்பெறுகிறது.

*தந்தை இளையராஜாவின் இசையில் இதுவரை ஏழு பாடல்களைப் பாடியிருக்கிறார் பவதாரணி. சமீபத்தில் இவரது சகோதரர்களான கார்த்திக் ராஜா இசையில் 'அலெக்ஸாண்டர் தி கிரேட்' படத்தில் ஒரு பாடலும், யுவன் சங்கர் ராஜா இசையில் 'அரவிந்தன்' படத்தில் ஒரு பாடலையும் பாடியிருக்கிறார்.

* 'ரோஜா', 'பம்பாய்' இந்தியில் மொழி மாற்றப்பட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மணிரத்னம் இயக்கிய 'தளபதி', 'நாயகன்' போன்ற படங்களும் இந்தியில் மொழிமாற்றப்பட்டன. தற்போது 'திருடா திருடா' இந்தியில் 'ஷோர் ஷோர்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

* 'சந்திரலேகா' படத்தின் மூலம் அறிமுகமாகிய வனிதா விஜயகுமார் தற்போது ராஜ்கிரணுக்கு ஜோடியாக 'மாணிக்கம்' படத்தில் நடித்து வருகிறார். இவர் முதன் முறையாக 'மைனா' என்ற தெலுங்குப் படத்தில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* பாரதிராஜா இயக்கத்தில் விஜயகாந்த்-ரோஜா இணைந்து நடிக்கும் 'தமிழ்ச் செல்வன்' படத்தின் கதை ஏற்கனவே பாரதிராஜா இயக்கத்தில் டாக்டர் ராஜசேகர் நடிப்பதாக இருந்து நின்று போன 'தமிழா தமிழா' படத்தின் கதை ஆகும்.

* 'இந்திரா' படத்தை இயக்கியதைத் தொடர்ந்து கன்னடப்படமொன்றில் நடித்திருந்தார் சுஹாசினி. இவர் தற்போது கேயார் இயக்கத்தில் ராம்கி, குஷ்பு, ஊர்வசி நடிக்கும் 'இரட்டை ரோஜா' படத்தில் கௌரவ வேடத்தில் நடித்து வருகிறார்.

* ரஜினியின் 'வள்ளி' படத்தில் வில்லனாக நடித்த சஞ்சய் நடித்து கடைசியாக வெளிவந்த படம் 'கோலங்கள்'. இப்போது தமிழில் படங்கள் எதுவும் இல்லாத போதிலும் மலையாளத்தில் 'அரபிக்கடலோரம் ' இந்தியில் 'நஸர்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

* எஸ்.ஏ.சந்திரசேகரின் 'தேவா' படத்தில் அறிமுகமான சுவாதி தற்போது அஜித்குமாருக்கு ஜோடியாக 'வான்மதி' படத்தில் நடித்து வருகிறார். சுவாதி விரைவில் பிரபுவுக்கு ஜோடியாக ஒரு படத்திலும், கார்த்திக்கிற்கு ஜோடியாக ஒரு படத்திலும் நடிக்கவுள்ளார்.

* கே.டி.குஞ்சுமோன் தயாரிக்கும் 'காதல் தேசம்' படத்தை இயக்கி வரும் கதிர். இப்படம் முடிவடைந்ததும் 'தாஜ்மஹால்' என்ற படத்தை இயக்கத் திட்டமிட்டுள்ளார். 'தாஜ்மஹாலி'ல் புதுமுகங்களே நடிக்க இருக்கிறார்கள்.



ரோஜா
படம்-ராஜாளி

## ஐஸ்கிரீமும்-ரோஜாவும்

பாலகிருஸ்ணா நடித்து தெலுங்கில் இருந்து தமிழுக்கு மொழிமாற்றப்பட்டுள்ள படம் வீராதி வீரன்.

ரஜினிகாந்த் நடிக்க பாரதிராஜா இயக்கிய படம் கொடி பறக்குது. அதில் ஒரு காட்சியில் அமலா குடிக்கும் ஐஸ்கிரீம் ரஜினியின் கன்னத்தில் பட்டுவிடுகிறது. அதனை அமலா தனது உதட்டால் துடைத்துவிட வேண்டும் என்பார் ரஜினி. அதேபோல வீராதிவீரனிலும் ஒரு காட்சி. ஐஸ்கிரீம் குடிப்பவர் ரோஜா. அவர் குடித்த ஐஸ்கிரீம் பாலகிருஸ்ணாவின் கன்னத்தில் பட்டுவிடுகிறது. அதனை நாவால் துடைத்துவிடுகிறார் ரோஜா.

பாலகிருஸ்ணாவோடு ரோஜாவும், ரம்பாவும் ஜோடியாக நடிக்கின்றனர். பொலிஸ் அதிகாரியாகவும், ரவுடியாகவும் இரண்டு மாறுபட்ட வேடங்களில் நடிக்கிறார் பலகிருஸ்ணா. கொடி பறக்குது பட சாயல் பளிச்சிடுகிறது. விரைவில் திரைக்கு வரப் போகும் படம்.



சிவாஜி- மோகன்லால்
படம்-ஸ்வர்ணசாமரம்

## பழைய பெயர் வேண்டாம்

புதிய படங்களுக்கு பழைய படங்களின்பெயர் சூட்டுவதை தமிழ்ப் பட ரசிகர்கள் பெரும்பாலானோர் எதிர்ப்பதாக தமிழக சினிமா சஞ்சிகைகள் தெரிவித்துள்ளன.

பழைய படத்தின் பெயர் புதிய படங்களுக்கு சூட்டப்படும்போது குழப்பம் ஏற்படுகிறது. பல நல்ல படங்களின் நிலையான புகழும் கெட்டுவிடுகிறது. புதிய பெயர்களை சூட்டுவது சகல வகையிலும் சிறந்தது என்று ரசிகர்கள் நினைக்கிறார்கள்.

நாடோடி மன்னன், இரகசியப் பொலிஸ், பாசவலை, ஆசை, போன்ற பழைய படங்களின் பெயர்களில் சமீபத்தில் புதிய படங்கள் திரைக்கு வந்தன. அதனையடுத்தே ரசிகர்கள் சலிப்படைந்துள்ளனர்.

## பட்டியலில் ரகுமான்

சொந்தப்பட தயாரிப்பில் ஈடுபடும் நடிகர்கள் பட்டியலில் தற்போது புதிதாகச் சேர்ந்திருப்பவர் ரகுமான்.. தமிழில் பெரிய வாய்ப்புக்கள் இல்லையென்பதால் மலையாளப் படங்கள் சிலவற்றில் நடித்தார். ஓரளவு வரவேற்பும் கிடைத்தது. சம்பாதித்த பணத்தை வைத்து தமிழில் ஒரு சொந்தப்படம் எடுக்கும் ஆசை வந்துவிட்டது ரகுமானுக்கு. அவர்தான் ஹீரோ. ஹீரோயின் மற்றும் கலைஞர்கள் இன்னும் முடிவாகவில்லை.

## ஏற்றா...

பெரிய கோட்டைஸ்...
சுதந்திரதின விழா...
சிறைச்சாலைக்கு...
கொடியைத் தொட்...
குரல் கேட்கிறது. குர...
மாணிக்கம். பொ...
திகைப்பு. ஏன் எ...
ராதா. இவன் அயே...
உரத்து முழக்கமி...
இக் காட்சி இ...
தொழிலதிபரா...
முத்து மா...
பொலிஸ்...
வர் ர...
ஜோட...
நடி...



பாலகிருஷ்ணா-ரம்பா
படம்-வீராதி வீரன்

பாலும் கசக்குதென்று பாடம் படிப்பாள்
பள்ளியில் முள்ளிருக்கப் பார்த்தனன் என்பாள்
நாலும் இழந்தநிலை நங்கை யடைவாள்
நாடகப் பெண்மையெனப் பாவம் புரிவாள்!
காமன் படைத்துவிட்ட கற்பனைச் சிட்டு
காப்பியத் தேரில்வரும் தாமரை மொட்டு
சாமத்திலே மலரும் தங்க நிலவு!
சரசத்திலே உதிரும் இன்பக் கனவு!

—கவியரசு கண்ணதாசன்—



படம்-புதியவன்.



ஜெயராம்-சுகன்யா
படம்-புரியட்டம்

## அமிதாப் மறுப்பு

'பாட்ஷா' இந்தியில் தயாரிக்கப்பட்டு அதில் அமிதாப்பச்சன் நடிப்பதாக இருந்தது. பாட்ஷா படத்தைப் பார்த்த அமிதாப் நடிக்க மறுத்துவிட்டார். ரஜினியால் மட்டுமே அந்தப் பாத்திரத்தில் நடிக்க முடியும் என்று சொல்லிவிட்டார். இப்போது பாட்ஷா இந்தியில் மொழிமாற்றப்படுகிறது. இந்தி விநியோக உரிமையை அமிதாப் வாங்கியிருக்கிறார்.

## நகைச்சுவை நடிகர்களுக்கு நல்ல ராசி

வடிவேலு, கவுண்டமணி, செந்தில் போன்ற நகைச்சுவை நடிகர்கள் ஒரு படத்தில் நடிக்க சராசரியாக 6 இலட்சம் வரை வாங்குகிறார்கள். வருடம் ஒன்றுக்கு 30 முதல் 35 படங்களில் நடிக்கிறார்கள். கவுண்டமணி 6 படங்களுக்கு ஒரு முறை தனது சம்பளத்தை உயர்த்திவிடுகிறார். தற்போது அவரது சம்பளம் 15 இலட்சம்.

## கிடைத்தது வாய்ப்பு

மம்முட்டி, நெப்போலியன் இருவரும் இணைந்து நடிக்கும் 'மாஸ்டர்' படத்தில் மம்முட்டிக்கு சங்கீதா. நெப்போலியனுக்கு ஜோதிமீனா. கவர்ச்சி நடிகை ஜோதிமீனாவுக்கு கதாநாயகி வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. சங்கவிக்கு நேரமில்லாததால் ஜோதிமீனாவை ஒப்பந்தம செய்துள்ளார்கள்.

## முகப்பில்

கார்த்திக்
படம்:
தொட்டாச்சிணுங்கி



ரமேஷ் அரவிந்த்
படம்-மீண்டும் சாவித்திரி

## கா...

ரஜினி படத்...
வுடன் மகிழ்ச்சி...
முடித்துக்கொடுத்...
படப் பாடல்களில்...
மிலாழ்த்திவிட்டது...
என்று பாராட்டி...
மிகப் பெரிய...
போயிருக்கிறார்...


படிப்பகம்

www.padippakam.com

## நக்மாவின் ஹீரோக்கள்

தன்னுடன் தமிழில் நடித்த ஹீரோக்கள் பற்றி நக்மா சொல்லும் விமர்சனம் என்ன? இதோ அவரே சொல்லுகிறார்.

"என்னுடைய ஹீரோக்கள் என்று பார்த்தால் தமிழில் இதுவரை நான்கு பேருடன்தான் நடித்திருக்கிறேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் திறமையானவர்கள். "பிரபுதேவாவின் நடனத்தைப் பார்த்து வியந்திருக்கிறேன். ஆனால் மிகவும் கூச்ச சுபாவம் உள்ளவர்.

ரஜினியின் ஸ்டைலையும், வேகமான வசன உச்சரிப்பையும் பார்த்து என்னை மறந்து பல தடவை நின்றிருக்கிறேன். அவர் சினிமாத்தனம் இல்லாத சினிமாக்காரர்.

சத்யராஜின் வசன உச்சரிப்பும் சரி அவரது நடிப்பும் சரி மிக இயல்பாக இருக்கும்.

சரத்குமாருடன் வேலை செய்வது ஒரு சுற்றுலாவில் இருக்கிற மாதிரி. எதையும் ரொம்ப ஈசியாகச் செய்வார். 'டேக் இட் ஈஸி பொலிசி' மாதிரி.

## ஆசைதான் ஆசை

'ஆசை' பட நாயகன் அஜித்குமாருக்கு ஒரு ஆசை. பம்பாய் நடிகைகளில் பிரபலமானவர்களோடு நடித்துவிட வேண்டும் என்பதுதான் அந்த பொல்லாத ஆசை. நடிக்க ஒப்பந்தம் செய்ய வருகிறவர்களிடம் ஜாடைமாடையாகச் சொல்லியும் பார்க்கிறார். நட்சத்திரக் கதாநாயகனாக வளர்ந்தால் அவரது ஆசை நிறைவேறும்.



## போனும் நட்சத்திரங்களும்

நம்நாட்டில் செல்லுலார் போன் சாதாரணமாகிவிட்டது. ஆனால் இந்தியாவில் இப்போதுதான் பிரபலமாகிக் கொண்டிருக்கிறது. செல்லுலார் போனை கையில் கொண்டு திரிந்து பேசுவதில் சினிமா நட்சத்திரங்களுக்கும் கொள்ளை ஆசை. பம்பாயில் சல்மான்கான், சென்னையில் அர்ஜுன், மீனா என்று ஒரு நட்சத்திரப் பட்டாளமே செல்லுலார் போன் என்றால் மகா அதிசயம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். செல்லுலார் போனோடு நடசத்திரங்களைக் கண்டால் அதை ஒரு பெரிய சமாச்சாரமாக தமிழகப் பத்திரிகைகளும் எழுதித்தள்ளுவதுதான் வேடிக்கை.

## சந்தோசமான வாய்ப்பு

மோகன்லால் மலையாளத்தில் சூப்பர் ஸ்டார். பந்தா கிடையாது. ரொம்ப அடக்கம். சினிமா சஞ்சிகை ஒன்றுக்கு மோகன்லால் பேட்டியளித்தார். அதில் முக்கியமான பகுதி இது.

**கேள்வி**:-மணிரத்னம் படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறதே. என்ன நினைக்கிறீர்கள்?

**மோகன்லால்**:-ரொம்ப சந்தோசமான விஷயம். மணிரத்னம் இயக்கத்தில் முன்னரும் நான் ஒரு படத்தில் நடித்தேன். அதன் பெயர் 'உணரு' பத்துவருச இடைவெளியில் இப்போது இரண்டாவது படம்.

**கேள்வி**:-தமிழ் பட நாயகர்கள் எல்லோருக்கும் ஒரு இமேஜ் இருக்கிறது. மலையாளத்தில் எப்படி?

**மோகன்லால்**:- மலையாளத்தில் அப்படி இல்லை. பாத்திரம் நல்லா அமைந்துவிட்டால் நடிப்போம்.

**கேள்வி**:- தமிழ் படத்துறைக்கு வருகிறீர்கள். இங்கு ஒரு 'இமேஜ்' உங்களுக்கு ஏற்பட்டுவிடாதா?

**மோகன்லால்**:-நான் தமிழ் படவுலகில் நிலைக்கணும் என்று வரேல்லை. நல்ல பாத்திரங்கள் கிடைத்தால் மட்டுமே நடிப்பேன்.

## ஊர்வசிக்கு அலுத்துவிட்டது

அப்பாவிப் பெண்ணாக நடித்து ஊர்வசிக்கு அலுத்துவிட்டதாம். 'அருவா வேலு' படத்தில் வீரமான பெண்ணாக மருதாயி என்னும் பாத்திரத்தில் நடித்து வருகிறார் ஊர்வசி. கதாநாயகன் நாசர். ஊர்வசியும், நாசரும் போட்டி போட்டுக் கொண்டு நடிக்கிறார்கள். வேகமாக வளர்ந்து வரும் படம்.

## ...நிறுத்து

...ர். தொழில் அதிபர். அவர் ...கு கொடியேற்ற மத்திய ...என்றார். தொழிலதிபர் ...ாது. 'நிறுத்து' என்று ஒரு ...க்கு சொந்தக்காரர் முத்து ... அதிகாரி ராதாவுக்கு ...து போலப் பார்க்கிறார் ...யன், கொடியவன் என்று ...ர் முத்து மாணிக்கம்.

...பெற்ற திரைப்படம் 'சீதனம்' ...நடித்தவர் மன்சூரலிகான். ...கமாக நடித்தவர் பிரபு. ...திகாரி ராதாவாக நடித்த ...தா-பிரபுவுக்கு இரண்டு ...ர். மற்றொரு ஜோடியாக ...வர் சங்கீதா.

## அறுபதிலும் காதல்

'அந்தி மந்தாரை' படத்தில் காதலை புதிய கோணத்தில் சொல்கிறார் பாரதி ராஜா. சுதந்திரப் போராட்டத்திற்காக சிறை சென்று திரும்பிய தியாகிக்கு அறுபது வயது. அவரது மனசில் உருவாகும் மென்மையான காதல்தான் 'அந்தி மந்தாரை' படத்தின் மையக் கரு.

அறுபதுவயது தியாகியாக நடிப்பவர் விஜயகுமார். கதாநாயகனும் அவர்தான். ஜோடி ஜெயசுதா. பத்திரிகையாளரான சுதாங்கனும் அந்தி மந்தாரையில் நடிக்கிறார். அவருக்கு ஜோடி சங்கவி.

## ஞானப்பழம் தயார்

பாக்யராஜ்-சுகன்யா நடித்து முடிவடையும் கட்டத்தில் உள்ள படம் 'ஞானப்பழம்' கதை-திரைக்கதை-வசனம், இசை, நான்கும் பாக்யராஜ். படத்தை இயக்குவது ஆர்.பி.விஸ்வம். இவர் பாக்யராஜின் சிஷ்யர்.

'ஞானப்பழம்' என்பது ஒரு பத்திரிகையின் பெயர். அந்தப் பத்திரிகையின் நிருபராகவும், விநியோகஸ்தராகவும் பாக்யராஜ் நடிக்கிறார். 50 நாட்கள் ஒரே மூச்சில் படப்பிடிப்பின் பெரும் பகுதி முடிவடைந்துள்ளது.

## ...மூன்றும் முக்கியம்

நடிகை ரோஜாவின் மார்க்கெட் சற்று டல்லாகியிருப்பது உண்மைதான். மக்கள் ஆட்சி படத்தில் மீண்டும் பழைய ரோஜாவைக் காட்ட முயன்றிருக்கிறார் செல்வமணி. ஆனாலும் முன்பு மாதிரியான துள்ளலும், துடிப்பும் எங்கே என்று தேடவேண்டியிருக்கிறது.

திறமை, இளமை, உழைப்பு ஆகிய மூன்றையும் நம்புவதாகக் கூறுகிறார் ரோஜா. இளமை இன்னும் எத்தனை காலத்திற்கு கைகொடுக்கப் போகிறது? (இங்குள்ள படத்தைப் பார்த்துவிட்டு தீர்மானியுங்கள்)



## "சரசம் பண்ணு ராசா"

ராமராஜன்- சங்கீதா ஜோடி நடிக்க வளர்ந்து வரும் படம் 'அம்மன் கோவில் வாசலிலே'.

செல்வத்தில் புரளும் செல்லமகள் பூங்கோதை. பூங்கோதையை வளைப்பதற்கு வட்டமிடுகின்றனர் வாலிபர் பலர். ஆனால் பூங்கோதையின் எண்ணமெல்லாம் பொன்ராசு மீது. அவனையே காதலித்தாள். கைப்பிடிக்க கனவு கண்டாள். கனவில், பாடல் வருகிறது.

"வயசுப் பொண்ணுதான், மஞ்சள் வாழைக் கண்ணுதான். உன்னை உரச எண்ணுது, சரசம் பண்ணு மாமா... மாமா..." என்று தொடர்கிறது பாடல். பூங்கோதையாக நடிப்பது சங்கீதா. பொன்ராசுவாக ராமராஜன்.

இசை-சிற்பி. கதை-வசனம், இயக்கம் ராமராஜன். இது பொங்கல் வெளியீடாக திரைக்கு வரக்கூடும்.

## ராம்கி கொடுத்த முத்தம்

'சாம்ராட்' படத்திற்காக வினிதாவுக்கு ராம்கி முத்தம் கொடுப்பது போன்ற காட்சி படமாக்கப்பட்டது. தயக்கமே இல்லாமல் காட்சி தத்ரூபமாக அமைய ஒத்துழைத்தாராம் வினிதா.

## தினசரி குளியல்

நக்மா தினசரி நீராவிக் குளியல் நடத்துகிறாராம். உடல் கெடாமலிருக்கும் குளியலாம். அது மட்டுமல்ல, சுமார் ஒரு இலட்சம் ரூபாய்க்கு உடற்பயிற்சி கருவிகளை வாங்கிப் பயிற்சியில் ஈடுபடுகிறாராம் நக்மா. சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம்.





அக்ஷய்குமார்

## மொழி மாறும் 'சாமரம்'

மலையாளத்திலிருந்து மம்முட்டி, ஜெயராம் ஆகியோர் தமிழுக்கு வந்தனர். ஜெயராம் தமிழ்பட நடிகராகவே மாறிவிட்டார். கோபுரவாசலிலே படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் கார்த்திக்கோடு தோன்றியவர் மோகன்லால். அதன்பின்னர் நேரடியான தமிழ் படங்கள் எதிலும் அவர் நடிக்கவில்லை. மலையாளத்தில் மோகன்லால் நடித்து வெற்றி பெற்ற படங்கள் தமிழில்மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளிவந்தன.

தற்போது மோகன்லால், பிரபு இருவரும் இணைந்து நடிக்கும் 'காலாபாணி' தமிழில் 'சிறைச்சாலை' என்ற பெயரில் வருகிறது. சிவாஜி கணேசன், மோகன்லால் நடிக்கும் 'சுவர்ணசாமரம்' படமும் தமிழில் மொழி மாற்றம் செய்யப்படவுள்ளது.

இதற்கிடையே தமிழ், இந்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளில் தயாராகும் 'ஆனந்தம்' படம் மூலம் மோகன்லால் ஒரு கலக்கு கலக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. மணிரத்னம் இயக்கத்தில் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராவோடு நடிப்பதற்கும் ஒரு ராசி வேண்டாமோ? மோகன்லால் ராசியுள்ளவர்.

## ...வுளின் ...ந்தை

...இசையமைப்பது என்ற ...சம்மதித்து. நிறைவாக ...ஏ.ஆர்.ரகுமான். 'முத்து' ...ற்றி ரஜினியை மகிழ்ச்சி ...ான் கடவுளின் குழந்தை' ...ரஜினி. தனக்கு கிடைத்த ...ட்டு என்று பூரித்துப் ...ர்.ரகுமான்.



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## உங்கள் வயதை மற்றவர்களால் சொல்ல முடியுமா?

சுயபசோதனை

நீங்கள் இளம் பெண்ணா? வயதான வரா-இதை எப்படிக் கண்டு பிடிப்பது? 'இது என்ன கேள்வி? வயதைச் சொன்னால், பதில் தெரிந்துவிடப் போகிறது!' என் கிறீர்களா? அதுதான் இல்லை! நீங்கள் எத்தனை பிறந்த நாட்களை கொண்டாடி னாலும் மனத்தளவில் இளமையாக இருக்க வேண்டும்: அதுதான் முக்கியம்! மத்தியதர வயதில் பத்தாம் பசலியாக நடந்தால், உங்களை அனைவரும் ஒதுக்கிவிடுவார்கள்! நீங்கள் எப்படிப்பட்டவர்கள்? மத்தியதர வயதை அடைந்தும் யுவதியாக இருக்கிறீர் களா? அல்லது வயதுக்கு மிஞ்சிய வயோதிக மனப்பக்குவத்தில் இருக்கிறீர்களா?

இதோ ஒரு எளிய சுயசோதனை. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு, 'சரி' அல்லது 'தவறு' என பதில் அளியுங்கள்:

1. வயதான பெண்மணிகள் 'சுரிதார்' போன்ற உடைகள் அணியக்கூடாது! இளம் பெண்கள், மட்டுமே 'மார்டன் டிரஸ்' அணிய வேண்டும்!

2. வயதான பெண்ணுக்கு முகத்தில் அதிக சுருக்கங்கள் இருக்கும். எனவே வய தான பெண் அதிக 'மேக்கப்' செய்து கொள்ள வேண்டும்.

3. வயதுக்கு வந்த இளம் பெண், இளைஞருடன் சுற்றுவது மகா தப்பு!

4. முப்பது வயதுக்கு உட்பட்ட பெண் களுக்கு கடுமையான உடற்பயிற்சி தேவை இல்லை.

5. உங்கள் உண்மையான வயதை மற்றவர்களிடம் சொல்வதில் தவறில்லை; காரணம் முட்டாள்களால் மட்டுமே, வயதைக் கொண்டு உங்களை எடைபோட முடியும்!

6. அதிக செலவு பிடிக்கும், ஆனால் அதி முக்கியமில்லாத பொருளை வாங்கு வதை விட, அதைத் தவிர்ப்பது நல்லது. அப்போது தான் தேவையான நேரத்தில்



பணம் கைவசம் இருக்கும்.

7. வயதானவர்கள் கல்லூரிக்குச் சென்று படிப்பதில் அர்த்தமே கிடையாது. காரணம் அவர்கள் உயிர் வாழப்போவது கொஞ்ச நாள்தான்.

8. ஒரு பெண் 40 வயதைத் தாண்டி விட்டாலே அவள் 'செக்ஸ்' பற்றி நினைக்கக் கூடாது.

9. காதல் மன்னன் மன்மதனுக்கு பின்னர் சிறந்த காதலன் யாருமே கிடையாது.

10. வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருந்தே சாப்பிடமுடியும் என்றால் வேலையை விட்டு விடுவது நல்லது.

11. 40 வயதுக்கு மேல், வேண்டுமென்றே கர்ப்பமாகும் பெண்கள் மிகவும் பைத்தியக் காரத்தனம் செய்கின்றனர்.

12. தங்கள் மீதே நம்பிக்கை இல்லாத வர்கள் தான், தலைக்கு 'டை' அடிப்பார்கள்.

### மதிப்பெண்:

**9–12 'சரி':** நீங்கள் 20 வயதுக்கு உட்பட்ட பெண்ணாக இருந்தாலும் மனதளவில் 60 வயது கிழம் தான். பத்தாம் பசலித்தனமாக சிந்திப்பதை கைவிட்டு, துடிப்புடன் செயல் பட வேண்டிய நேரம் இது! மாறிவரும் உலகிற்கு ஏற்ப உங்களை மாற்றிக் கொள்ள பயப்படுகிறீர்கள். பழமையை கைவிடுங்கள்.

**5–8 'சரி':** உங்களைப் பற்றி மற்றவர்கள் மாறுபட்ட கருத்து கொண்டிருப்பார்கள். மிகவும் முற்போக்கான சிந்தனையால் சில நேரம் மற்றவர்களை ஆச்சரியப்படுத்து வீர்கள். சில நேரங்களில் பத்தாம் பசலியாக நடந்து மற்றவர்களை குழப்புவீர்கள்.

**0–4 'சரி':** உங்கள் உண்மையான வயதை விட உங்கள் வயது குறைவுதான் என மற்ற வர்கள் நினைப்பார்கள். காரணம், என்றும் இளமையாக உள்ள உங்கள் மனது தான்! வயதானவர்கள் எந்த அளவு உற்சாகமாக இருக்க முடியும் என்பதற்கு நீங்கள் தான் உதாரணம். உங்களைச் சுற்றி எப்போதும் விசிறிகள் கூட்டம் இருக்கும்!

## சுத்தமான சமையல் அறை

சமையல் அறையைச் சுத்தமாக வைத் திருப்பதில் பெண்கள் பெரும் பங்கு வகிக் கிறார்கள். அங்கே தான் சில விபத்துக்களை யும் நாம் சந்திக்க நேருகின்றன. மக்களிடம் போதிய விழிப்புணர்ச்சி இருந்தால் சுலபமாக சமையல்அறை விபத்துக் களைத் தடுக்கலாம்.



சமையல் வாயு (GAS) கசிவு, ஹீட்டர், மின்சார அதிர்ச்சி, அடுப் பில் இருந்து தீ வெளியே பரவுதல் போன்றவற்றால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான விபத் துக்கள் ஏற்படாமல் இருக்க சில வழிகள்:

➡ மண்ணெண்ணெய், தீப்பெட்டி போன்றவைகளைக் குழந்தைகள் கைக் கெட்டும் தூரத்தில் வைக்காதீர்கள். காஸ் சிலிண்டரில் கசிவு ஏற்பட்டால் உடனடியாக சிலிண்டரை இறுக்கி மூடிவிட்டு ஜன்னல் கதவுகளை எல்லாம் திறந்துவிட வேண்டும். தீப் பெட்டியை எக்காரணம் கொண்டும் பற்ற வைக்கக் கூடாது.

➡ உயரமான இடத்தில் ஸ்டவ்வை வைக்க வேண்டும். ஸ்டவ் எரிந்து கொண்டிருக்கும் போது ஒரு போதும் மண்ணெண்ணெய் ஊற்றக் கூடாது. ஊற்றினால் தீ பரவி பிடித்துவிட வாய்ப்பு உண்டு.

➡ சமையலறையில் திரைச்சீலை போடக் கூடாது. காற்றில் திரைச்சீலை ஆடி அசைந்து தீப்பிடிக்க வாய்ப்பு உண்டு.

➡ தீ உடலில் பட்டால் அந்தப் பகுதியில் இருக்கும் உடையைக் கழற்றி விட வேண்டும்.

➡ சமைக்கும்போது நைலோன் ஆடை களையோ, தொள தொள ஆடைகளையோ அணியாதீர்கள்.

## சின்னச் சின்னக் குறிப்புகள்

உடம்பில் தேமல் உள்ளவர்கள் பூவரசு மரத்தின் விதையுடன் எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து தேமல் உள்ள இடங்களில் தடவி இரண்டு மணி நேரம் கழித்து வெந்நீரில் கழுவி வந்தால் தேமல் குறைந்து பூரண குணம் உண்டாகும்.

**

எள்ளுக்குப் பாலைப் பெருக்கும் குண முண்டு. பெண்கள் ஆகாரத்தோடு எந்த ரூபத்திலாவது எள்ளைச் சேர்த்துக் கொண் டால் பால் சுரப்பதுடன், உடலும் திடகாத் திரமாக விளங்கும்.

**

பெண்கள் பகலில் உறங்கும் பழக் கத்தை மேற்கொண்டால் உடல் பெருத்து சதை மிகுந்து அழகு கெடும். பகல் நேரத்தில் ஓய்வாக இல்லாமல் சுறுசுறுப்பாக செயற் பட்டால் உடல் கட்டாக அமைந்து அழகு பெற்று காட்சி தரும்.

**

கர்ப்பம் தரித்த பெண்களுக்கு அடிக்கடி வாந்தியும், மயக்கமும் ஏற்படும். ஒரு லீட்டர்



தண்ணீரில், கால் லீட்டர் பார்லியைப் போட்டு நன்றாகக் கொதிக்க வைத்து சிறிது உப்புச் சேர்த்து, பாதி எலுமிச்சம்பழத்தையும் அதில் பிழிந்து தினமும் சில நாட்கள் குடித்து வந்தால் இம்மாதிரியான தொந்தரவு மறைந்து போய்விடும்.

## பட்டுச் சேலை பராமரிப்பு

பட்டுச் சேலைகளை அதிக விலை கொடுத்து வாங்குகிறோம். அப்படி வாங்கும் சேலைகள் நீண்ட நாள் நீடித்து உழைப் பதையே விரும்புவோம். அப்படி அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் சில:

* பட்டுத் துணிகளை அடிக்கடி சவர்க் காரம் போட்டு துவைக்கக் கூடாது. வெது வெதுப்பான நீரில் அரைமணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின் அதனை எடுத்துக் கசக்கி குளிர்ந்த நீரில் அலச வேண்டும்.

* கடலை மாவை நன்றாகக் கரைத்து, அதில்பட்டுத் துணியை உற வைத்துக் கசக்கினால் அழுக்குகள் போய்விடும்.

* பட்டுத் துணியில் எண்ணெய்க் கறை பட்டு விட்டால் கவலை வேண்டாம். சிறு துளி பெட்றோலை எண்ணெய்க் கறை பட்ட இடத்தில் விட்டுத் துவைத்தால் எண்ணெய்க் கறை போய்விடும்.

*துவைத்த பட்டுத்துணிகளை பிளாஸ் டிக் உறைகளில் போட்டு அலமாரிகளில் வைப்பது நல்லது.

* பட்டுத் துணிகளுக்கு இஸ்திரி போடும் போது இஸ்திரி பெட்டியை அதிக உஷ்ண நிலையில் இல்லாமல் மிதமான சூட்டில் வைக்க வேண்டும்.

* பட்டுப் புடவைகளை மடித்து வைக் கும் போது சரிகையை உட்புறமாக இருக்கு மாறு மடித்து வைக்க வேண்டும்.

* வெளியில் கட்டிக்கொண்டு போன பிறகு உடனே மடித்து வைக்கக்கூடாது. இரண்டு மணிநேரமாவது காற்றாட கொடி யில் உலர்த்த வேண்டும்.

பட்டுப் புடவைகளை வெயிலில் உலர்த் தக் கூடாது. நிழலில் தான் உலர்த்த வேண்டும்.

## அடுத்த கப்டன் யார்?

இந்திய கிரிக்கெட் அணியில் கப்டன் பதவி நிரந்தரமில்லாத ஒன்றாகவே இருந்து வந்தது.

கவாஸ்கர்,கபில்தேவ், வெங்சர்க்கார், ஸ்ரீகாந்த் என்று பலரும் கப்டனாக இருந்தார் கள். ஒரு டெஸ்ட் தொடருக்கு ஒரு கப்டன் என்ற ரீதியிலும் கப்டன் பதவி பந்தாடப் பட்டது.



அதனால் இந்திய கிரிக்கெட் அணியில் கோஷ்டிப் பூசல்கள் தலைதூக்கத் தொடங் கின.

சர்வதேச அரங்கில் சிறந்து விளங்கும் அணிகள் கப்டன்களை அடிக்கடி மாற்றுவ தில்லை. கப்டனாக ஒருவரை நியமித்தால் அவர் தனது திறமையைக் காட்ட போதிய கால அவகாசம் கொடுக்க வேண்டும்.

இந்திய கிரிக்கெட் அணி இப்போதுதான் இந்த உண்மையை விளங்கிக் கொண்டி ருக்கிறது. 1990 இல் இந்திய கிரிக்கெட் அணிக் கப்டனாக நியமிக்கப்பட்டார் அஸாருதீன். கப்டன் பொறுப்பு ஆரம்பத்தில் அஸாருக்கு ஒரு சுமையாகவே இருந்தது. அவரது பேட்டிங் திறமையும் முதலில் பாதிக்கப்பட்டது. ஆனால் தற்போது தேறி விட்டார் அஸார். இந்திய அணி ஒற்றுமை யாகவும் செயற்படத் தொடங்கிவிட்டது. இந்தியக் கப்டன்களில் அதிக டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் வெற்றி பெற்ற கப்டனாகவும் அஸாருதீன் திகழ் கிறார்.

இந்த நிலையில் 'அடுத்த கப்டன் யார்? உலகக் கோப்பைப் போட்டிகளில் அஸாரு தீன் கப்டனாக நீடிப்பாரா?' என்றெல்லாம் சில சந்தேகங்கள் எழுந்தன. அதற்கெல்லாம் முடிவு கட்டுவது போல இந்திய கிரிக்கெட் தேர்வுக் குழு தனது முடிவை அறிவித்து விட்டது. அடுத்த வருடம் செப்டம்பர் மாதம் வரை அஸாருதீன்தான் கப்டன் என்று அறிவித்துவிட்டது.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 15

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.

* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.

* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.


## உலகக் கோப்பை யாருக்கு?

அடுத்த வருட ஆரம்பத்தில் உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

உலகக் கோப்பையைக் கைப்பற்றும் அணி எதுவாக இருக்கும் என்று பந்தயம் கட்டுவதில் இரசிகர்கள் இப்போதே ஈடுபடத்தொடங்கி விட்டார்கள்.

நியூஸிலாந்து நாட்டின் முன்னாள் பிரபல பந்து வீச்சாளர் ரிச்சர்ட் ஹாட்லி தனது கணிப்பைச் சொல்லியிருக்கிறார்.

அவர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? "உலகக் கோப்பையை இலங்கை அணிதான் வெல்லும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன." என்று சொல்லியுள்ளார் ரிச்சர்ட் ஹாட்லி.

## காதலின் முகவரி!

ஊரெல்லாம் விளக்கேற்றும் இரவு நேரம்.

அவன் மட்டும் வீட்டில் விளக்கேற்றவில்லை.
அவன் வீடு மட்டுமல்ல, அவனும் இருண்டிருந்தான்.

அவன் காதலி பிரிந்திருந்தாள். அதனால்
அவன் துயரத்தில் இருந்தான்.

அவன் இல்லத்தில் இரவின் இருள்
இருந்தது. அவன் உள்ளத்தில் பிரிவின்
இருள் இருந்தது.

விளக்கேற்றுவதால் இரவின் இருள் நீங்கும்!
பிரிவின் இருள் நீங்குமா?

இரவின் இருள் கொஞ்சம் பழகி விட்டால்
பார்க்க முடியும்.

பிரிவின் இருளில் எவ்வளவு பழகினாலும்
ஒன்றும் தெரியாது.

அது இருளே பயப்படும் இருள்.

அந்த இருள் நீங்க வேண்டுமென்றால்
அதற்கு ஒரே வழிதான் உண்டு.

அவள் வரவேண்டும்.

ஆம் அவள்தான் அந்த இருளுக்கு விளக்கு.

பிரிவுத் துயரத்தில் இருப்பவர்கள் தனிமையை
விரும்புவார்கள்.

இருள் தனிமையைத் தரும் அந்தரங்க அறை.

அந்தத் தனிமை, அந்த இருள் ஆறுதலாக
இருக்கும்.

அதனால் தான் அவன் விளக்கேற்றவில்லை.

❧ ❧ ❧

அந்த இருளில் அவனுக்கு இன்னொரு
நன்மையும் தெரிந்தது.



அவன் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்கக்
காதலி சிரமப்பட வேண்டியதில்லை.
அந்த ஊரில் எந்த வீடு இருண்டிருக்கிறதோ
அதுதான் அவனுடைய வீடு.

இருள்தான் அவன் முகவரி: அதனால்
அவள் காதலி அவன் இருப்பிடத்தை
எளிதாகக் கண்டு பிடித்து விடலாம்.

காதல் உள்ளம் இருளையும் அழகாக்கி விடுகிறது.

கவிஞர் பாஃகீமின் கவிதை இது:

இந்த ஊரில்
என் வீட்டில் மட்டும்தான்
விளக்கில்லை!
இருளே உனக்கு
என் முகவரியைக்
காட்டி விடும்.

## சமைப்போம் சுவைப்போம்

### பூண்டு புலாவ்

தொகுத்துத்-தருவது சுகந்தினி

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பாசுமதி அரிசி | - 2 கப் |
| பூண்டு விழுது | - 2 தேக்கரண்டி |
| பூண்டு | - 10 பல் |
| வெங்காயம் | - 2 |
| தக்காளி | - 2 |
| சீரகம் | - 2 தேக்கரண்டி |
| ஏலக்காய் | - 4 |
| முந்திரிப்பருப்பு | - 50 கிறாம் |
| நெய் | - 6 தேக்கரண்டி |
| உப்பு | - தேவையான அளவு |

**செய்முறை:**

அரிசியைப் பத்து நிமிடம் தண்ணீரில் ஊறவைத்து, நன்றாக்க கழுவி, தண்ணீரை வடிகட்டிக் கொள்ளவும். வெங்காயம், தக்காளி ஆகியவற்றை பொடியாக நறுக்கிக்கொள்ளவும். பூண்டுப்பற்களைத் துண்டு துண்டாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். பிறகு வாணலியில் நெய் ஊற்றி, அடுப்பில் வைத்து சூடேறியதும் முந்திரிப் பருப்பு, நறுக்கிய பூண்டு பல், மிளகு, சீரகம், வெங்காயம் ஆகியவற்றைத் தனித்தனியாக பொரித்து எடுக்கவும். பிறகு அரிசி மற்றும் ஏலக்காய் பொடியை பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும்.

மேலும் ஒரு தேக்கரண்டி நெய் ஊற்றி அரைத்து வைத்துள்ள பூண்டு விழுதைப் போட்டு பொன்னிறமாக வதக்கிக் கொள்ளவும். இதில் ஏற்கனவே வதக்கி வைத்துள்ளவைகளை (முந்திரிப் பருப்பு தவிர) போட்டு கலந்து சூடு படுத்திக் கொள்ளவும். இந்தக் கலவையில் போதுமான அளவு தண்ணீர் ஊற்றி வேகவைக்கவும். அரிசி வெந்ததும் முந்திரிப் பருப்பைத் தூவி விடவும். பூண்டு புலாவ் ரெடி.

## தொடர்ந்தும் பிரேஸில்!

நவம்பர் மாத உலக கால்பந்து ரேங்கிங் பட்டியலில் 68,28 புள்ளிகளைப் பெற்று தற்போதைய உலக சாம்பியனான பிரேஸில் அணி தொடர்ந்தும் முதலாவதாகவும், 61,65 புள்ளிகளைப் பெற்று ஜேர்மன் அணி இரண்டாவது இடத்திலும் இருக்கின்றன.

சர்வதேச கால்பந்து சம்மேளனம் வெளியிட்டுள்ள ரேங்கிங் பட்டியலில் முதல் 20 இடங்களைப் பெற்றுள்ள அணிகளும், அவற்றின் புள்ளிகளும்.

| அணி | புள்ளிகள் |
|---|---|
| 1, பிரேஸில் | 68.28 |
| 2, ஜேர்மனி | 61.65 |
| 3, ஸ்பெயின் | 61.02 |
| 4. இத்தாலி | 60.53 |
| 5. ரஷ்யா | 58.39 |
| 6. நோர்வே | 57.98 |
| 7. ஆர்ஜென்டீனா | 56.77 |
| 8. டென்மார்க் | 56.26 |
| 9. ஃபிரான்ஸ் | 56.14 |
| 10. நெதர்லாந்து | 56.00 |
| 11. ஸ்வீடன் | 55.36 |
| 12. ருமேனியா | 55.14 |
| 12. மெக்ஸிக்கோ | 55.14 |
| 14. பல்கெரியா | 54.47 |
| 15. சுவிற்ஸர்லாந்து | 54.25 |
| 16. போர்த்துக்கல் | 54.19 |
| 17. கொலம்பியா | 53.23 |
| 18. செக் குடியரசு | 52.72 |
| 19. அமெரிக்கா | 51.19 |
| 20. இங்கிலாந்து | 50.02 |





படிப்பகம்

www.padippakam.com

## மௌன எரிகை!

நீயும் நானும்-
உரசிக் கொள்ளாத
இந்தச் சாபமிடப்பட்ட-
இரவுகள்....
எனக்குள்-
தீப்பிடித்தெரிவதை
கொஞ்சம்-
திரும்பிப்பார் காதலி!

உன்
தாவணிக்குள் தவமிருந்த
என் நினைவுகளுக்கு
இன்றுமின்றும்-
இந்த-
தனிமையின் வெறுமைகளை
தாங்கிக் கொள்ள பொறுக்குதில்லை!

மண் தின்பதற்குள்-
உன் மடி சாய்வதான
என் கனாக்களெல்லாம்...
இறுதிவரை-
காத்திருப்புகளாகவே
கரைந்து போய்...
அஸ்திகளாகவே-
உமிவதா.....?

ஒவ்வொரு பொழுதிலும்-
ஒவ்வொரு நடவையும்...
உன்னை நினைத்து-
உள்ளே அழுவது
எனக்கே தெரியும்...!
யாரா அறியும்...?

என்னவளே...!
எங்கே வைத்திருக்கிறாய்-
என் நினைவுகளை...?
ஏதோவொரு பழைய பரணில்..
இற்றுப் போனதொரு-
ஓலைச் செத்தையில்...
சிறு குப்பைக் கூடையில்...
அன்றி-
மண் தோண்டப் பட்ட தொரு-
மடுவினில்...
என்று-
எங்கோ
என் நினைவுகளை
நீ-
அலட்சியமாய் வைத்திருக்கலாம்....!

உன் ஆரோக்கியமான
அந்த-
புன்னகை மழைகளில்......
என் பாலைவனப் பரப்புகள்
இனி-
நனையவே மாட்டாதா...?

செத்துப் போனதாய் -
சிறு-
சேதி வரும் சினேகிதி...!
அன்பிருந்தால்...
அப்போதாவது-
அழுவதற்கு
கண்ணீரைக் கொஞ்சம்
சேமித்து வை....!

அட்டாளைச்சேனை-பூவெல் மப்ராக்

# தேன் கிண்ணம்



## யுத்தம்

யார்
கூடுதலாக...
ஆட்டமிழந்தார்கள்....!
என்று
ஆராயும்
ஆடுகளம்!
○○

**தணிக்கை**
பார்த்ததை(ப்)
பேசாதே...
கேட்டதை
எழுதாதே...
உண்மையை
உளறாதே....
○○

**சுதந்திரம்**
கொடுத்தவர்களுக்கு
மட்டுந்தான்!
வாங்கியவர்களுக்கு
இல்லை!
○○

**வதந்தி**
தீப்பிடித்த...
அனுமானின்
வால்!
○○

**மலையகம்**
மாமனிதர்களை
உருவாக்கிவிட்டு...
மௌனித்துக்கிடக்கும்
தியாக பூமி!

சோ.ஸ்ரீதரன்- பொகவந்தலாவை.

## மரணங்களை ஒத்திவைப்போம்....!

மனிதம் மலிந்துவிட்டது!
மண்ணில் மனிதனின்
மனிதாபிமானம் மறைந்து..,
மனமே இங்கு தொலைந்து விட்டது!

சத்தங்கள் முழங்கிய
ரத்தங்கள் விழுங்கிய
யுத்தத்தை எண்ணும் இதயம்
நித்தமும் செத்து ஜனனிக்கிறது.

உள்நாட்டு ஏரிகளில்..,
உடலின் எத்தனை வகையான கூறுகள்?
உல்லாசமாய் உலாவி மிதந்து..,
ஊர்பேர் தெரியாமல் வந்து சேருகின்றன?

தாய்க்கு தனயனில்லை....
தாரத்துக்கு துணையுமில்லை....
தங்கைக்கு தமையனில்லை....
தரணிக்கு தலைமுறையேயில்லை!

நிறுத்திடுவோம்..,
நியாயமற்ற குரோதங்களையும்..,
நிரந்தரமற்ற வாதங்களையும்..,
நிலத்திற்கடியில் போட்டு புதைத்திடுவோம்!

அன்பினைப் பகிர்வோம்!
அப்படி இல்லையேல்..,
அந்த மரணங்களையாவது
ஒத்திவைப்போம்!

நிட்டம்புவ கலாயுவன்

## இன்றைய யதார்த்தம்

மனித உயிர்
நசுக்கப்படும் போது
புரட்சி வெடிக்கும்!
வெடித்த புழுதியில்
உயர்த்திய
கரங்கள்
தாழ்ந்து போகும்.

நீறு பூத்த சாம்பலில்
உண்மையின்
அவதாரங்கள்
பிறப் பெடுக்கும்!
எடுத்த பிறப்பு
முடியு முன்னே
ஆயுள் முடிந்து
போகும்!
••
தர்மம் அதனை
சூது கவ்வும்!
மீளும் தர்மம்
ஜெயிக்கு முன்னே
அதர்மம்
வழியை
அடைத்து நிற்கும்!
••

சமாதானப்
பாதையில்
பேச்சுக்கள் தொடரும்!
தொடர்ந்த பேச்சுக்கள்
முடியு முன்னே
குண்டு வெடிப்பில்
உயிர்கள்
பலியாகும்!

அன்பு ஆனந்தி, அன்புவழிபுரம்

## மூர்ச்சித்து வீழ்ந்த வாழ்வு

நீ எனைவிட்டு
நிரந்தரமாகவே
நீங்கிவிடுவாயோ என
நினைக்கும் போது,
உடலின் அத்தனை
உயிரணுக்களும்
நடுங்கிச் சாக
நான்.....
தற்காலிகப் பிணமாகித்
தள்ளாடித் திரிவேன்!

உனது
தரிசனத்துக்காகத்
தாகித்திருந்த விழிகள்
உன்னைக் காணாமல்
கண்ணீர் வடிக்கின்றன!

அன்றெனது
கரம்பற்றிக் கூறிய
உறுதிகள்
இன்று காற்றில்
கைவிடப்பட்டுப்
படபடக்கின்றன!

உனக்காகக்
காணிக்கையாக்கிய இதயம்
புழுதியில்
புரண்டு போயுள்ளது!

காதலெனும்
அரக்கு மாளிகைக்குள்
ராணியாக
முடிசூட்டப்பட்டேன்!
கிரீடத்தைச் சூட்டிய
கரங்களே இன்று
கொள்ளி வைத்துவிட்டுத்
தள்ளியோடுகின்றன!

விஷம் தூவப்பட்ட
காதல் கிண்ணத்தினுள்
வீழ்ந்த என்னுயிர்
மீளமுடியாமற்
போராடுகிறது!

மரணத்தின்
தலைவாயிலில்
எனது ஆன்மா
கதவம் திறக்கும் வரை
காத்துக் கிடக்கிறது!

காதலின்
பயங்கர ரோசாவை
முகர்ந்ததால்
மூர்ச்சித்து
வீழ்ந்து கிடக்கிறது
எனது வாழ்க்கை!

செல்வி - பஹீமா ஜஹான்,
தெமடகொல்ல, மெல்சிரிபுர

## சந்திப்பு

எங்கள்
முதற் சந்திப்பில்
கண்களைக் குருடாக்கிவிட்டு
உன் விம்பத்தைப்
பரிசளித்தாய்........!
⁂
கொஞ்சும் குரலால்
காதுகளை
கெடுத்துக் கொண்டே
குயிலாக மாறினாய்....!
⁂
தொடர்ந்துவந்த
தொடர்புகளில்
உன் ஞாபகங்களை
விதைத்து விட்டு
நினைவுகளுக்கு
நீர் வார்த்தாய்.....!
⁂
உள்ளத்தை
உனதாக்கினாய்......!
⁂
இறுதியில்,
என்னைத் தவிர
எல்லாவற்றையும்
எடுத்துக் கொண்டாய்......!
⁂
காதலி!
"சில சந்திப்புக்கள்
சரித்திரமாகலாம்"
என்கிறார்கள்.
⁂
எங்கள் சந்திப்பும்
நிச்சயம் சரித்திரமாகலாம்;
நான் மட்டும்
கல்லறைக்குள்ளிருந்து
கவிதை வடிப்பதால்!!

அ.டக்ளஸ் ஜெய சேகரன்,
வவுனியா

## அழுது கொள்கிறேன்!

காதலீ.....!
நீ
அழவேண்டாம்....!
*
இறைவனைப் போலத்தான்
நீயும்
இரக்கமில்லாதவள்!
அதனால்
நீ ஒன்றும்
அழவேண்டாம்...!
*
எப்படியெல்லாம்
வாழ நினைத்தேன்...!
இப்போது
அப்படி யெல்லாம்
அழுகின்றேன்.....
*
அழுது புரண்டு...
ஆர்ப்பரித்து....
ஆகாயம் வெறித்து....
ஓ...
போதும் போதுமுன்
போர்க்காலத்து நினைவுகள்...!
*
சந்தர்ப்பமில்லாததால்
சத்தியங்களும்
செத்து விட்டன.
*
அநேகமாக
எல்லாப் பெண்களுமே
ஒரே மாதிரித்தான்...!
இடையிலேயே
வருவார்கள்....
இடையிலேயே.
போய்விடுவார்கள்....;
இருக்கிற சோகங்களையும்
இரட்டிப்பாக்கி விட்டு....!
*
இப்படித்தான்
ஒவ்வோரு பொழுதிலும்
ஓராயிரமாய்
அழுகின்றேன்...
*
என்றாலும் நிலவே!
அவசியம் ஏற்படினும்
நீ......
அழவேண்டாம்.
ஏனென்றால்
உனக்கும்
சேர்த்துத்தான்...
நான்
மொத்தமாய்
அழுது கொள்கிறேனே.....!

அ.சுதா சேகர்.பொத்துவில்.03

## நாள் எப்போதோ...?

எண்ணி மனம் வேகுறது
இதய மெல்லாம் நோகிறது
கண்ணீர் வெள்ளம் உடைகிறது
காட்சி எல்லாம் மறைகிறது....!
○○
பொன் விளைந்த பூமியெல்லாம்
மண் மேடாய் போனதிங்கே
செந் நெல் வயல் வெளிகள்
தீக் காய்ந்து போனதுவே....!
○○
திருக் கோண மலையீசன்
சிறை பட்டுப் போனாரோ...?
பெரு மகனார் புத்தருமே
புறங் காவல் நிற்கின்றார்!
○○
தெரு வெல்லாம் தமிழ் மக்கள்
திரி கின்றார் அகதிகளாய்
புரியாத கவலை யெல்லாம்
போகும் நாள் எப்போதோ....?

- கேணிப்பித்தன் -

## நெருக்தியடி!

நீ எந்த மதம்
எந்த இனம் என்பது
எனக்கு முக்கியமல்ல;
என்னை உன்னால்
நேசிக்க முடியுமா....?
அப்படியென்றால்
வா...
புத்திஜீவிகள்
நம்மைக்
கொல்வதற்கு முன்
இறந்து போவோம்!!

எம். சுரேஷ்,
கொழும்பு வளாகம்.




## இந்த வாரம் உங்கள் பலன்

(03.12.95 முதல் 09.12.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன். |
| தனு | - வியாழன், வெள்ளி, செவ்வாய், புதன். |
| கும்பம் | - சனி |
| மீனம் | - கேது |
| கன்னி | - இராகு |

சந்திரன்-மேடம், இடபம், மிதுனம், ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்: (சுப நேரம்)

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பொருள் விரயம், மனக் கவலை. | காலை 6 மணி |
| வெள்ளி - | தொழில் சிறப்பு,பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- | பெரியோர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: (சுப நேரம்)

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| புதன்- | துயர்நீங்கும், வீண்குறைகேட்டல். | காலை 7 மணி |
| வியாழன்- | பயனுள்ள செயல்,கௌரவக் கேடு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி,செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- | தொழில் பிரச்சனை, பணவிரயம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: (சுப நேரம்)

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம் | காலை 6 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும்,முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, மனமகிழச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, உயர்ந்தநிலை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, பணச்செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: (சுப நேரம்)

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில்நிலை மந்தம், காரியத்தடை. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| புதன்- | பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, புதிய நட்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, கொளரவம். | காலை 7 மணி |
| சனி- | பயனுள்ள செயல், உயர்ந்தநிலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன் அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: (சுப நேரம்)

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழிலில் மந்த நிலை, மனக் கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், பொருள்விரயம். | பி.ப. 1 மணி |
| புதன்- | பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | தொழிலில் சிறப்பு, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| சனி- | அந்நியர் உதவி,பொருள் வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: (சுப நேரம்)

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி,செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- | வீண் குறை கேட்டல், தொழில் சிறப்பு. | காலை 6 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| சனி- | காரிய சித்தி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: (சுப நேரம்)

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 6 மணி |
| திங்கள்- | தொழிலில் உயர்ச்சி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன் - | துயர் நீங்கும், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, பொருள் விரயம். | காலை 6 மணி |
| சனி- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: (சுப நேரம்)

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி,கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பணச் செலவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- | பொருள்விரயம், பெரியோர் பகை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: (சுப நேரம்)

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- | வீண்குறை கேட்டல், தொழில்நிலை கஷ்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | காலை 7 மணி |
| புதன்- | பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | காலை 6 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: (சுப நேரம்)

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் விரயம், தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- | உறவினர் பகை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, அதிகார விருத்தி. | பி.ப. 2 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: (சுப நேரம்)

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மனக்குறை நீங்கும், பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, உயர்ந்தநிலை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, மனக்கவலை. | காலை 7 மணி |
| சனி- | வீண் குறை கேட்டல், பிரயாணம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கன்னி: (சுப நேரம்)

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், தொழில் பிரச்சனை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- | தொழிலில் சிறப்பு, பணச் செலவு. | காலை 7 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வெள்ளி- | வெளியிட பயணம், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| சனி- | தொழில் பிரச்சனை, பண விரயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com





## அறுசுவை விருந்து

இனிப்பது கரும்பு
இன் தமிழ் விரும்பு
புளிப்பது மாங்காய்
புசிப்பவள் தங்காய்.

மிளகாய் காரம்
அளவுடன் போதும்
பாகற்காய் கசப்பு
பக்குவச் சமைப்பு.

உவர்ப்பது உப்பு
உணவுக்கு சுவைப்பு
பாக்கோ துவர்ப்பு
பாட்டிக்கு விருப்பு.

உவர்ப்பு, இனிப்பு,
துவர்ப்பு, புளிப்பு,
கசப்புடன் காரம்
கலந்திடும் நேரம்
அறுசுவை விருந்து
ஆசையாய் அருந்து.

-நீலா தர்மதுரை-

'சாதி இரண்டொழிய வேறில்லை' யென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்த மென்போ
நீதி நெறியினின்று பிறர்க்கு தவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# "போதுமா ராசு?"

ஓர் ஊரில் ராசு என்றொருவன் இருந்தான். அவன் ஓரளவு சம்பாதித்து வாழ்க்கை நடத்தினாலும், அந்த வாழ்க்கை என்னவோ அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் நல்ல வசதிகளோடு ஆடம்பரமாக வாழ வேண்டும் என்று விரும்பினான். ஆனால் அதற்கான உழைப்பு அவனிடம் இல்லை.

நாளாக நாளாக அவனுக்கு ஆடம்பர மோகம் பிடித்து ஆட்டியது. போதும் என்று ஒரு காலத்தில் நினைத்திருந்த மனம், இன்று பேராசை பிடித்ததாக மாறியது.

பக்கத்து ஊரில் ராசுவுக்கு சேது என்ற நண்பன் ஒருவன் இருந்தான். சிறு வயதில் இருவரும் ஒனறாகப் படித்தவர்கள். சேது நல்ல வசதியாக வாழ்ந்து வருகிறான்.

வசதியாக இருக்கும் சேது பலருக்கும் உதவி வருவதாகக் கேள்விப்பட்டான் ராசு. ஆகவே அவனிடம் சென்று உதவி பெற்று ஒரு நல்வாழ்க்கை அமைத்துத் தரும்படி கேட்கலாம் என்று நினைத்து, சேதுவின் ஊருக்குப் புறப்பட்டான் ராசு.

காலையில் புறப்பட்ட ராசு வெய்யிலினாலும், நடந்த களைப்பினாலும் ஓய்வெடுக்க விரும்பி வீதியின் ஓரத்தில் இருந்த வீடொன்றின் வெளித்திண்ணையில் போய் அமர்ந்து கொண்டான்.

திண்ணையில் அமர்ந்த ராசு தன்னையும் அறியாமல் தூங்கிவிட்டான். அப்போது அந்த வீட்டிலிருந்து வெளியே ஒருவர் வந்தார். திண்ணையில் தூங்கிக் கொண்டிருக்கும் ராசுவைப் பார்த்தார். பின்னர் ஒன்றும் பேசாமல் உள்ளே சென்று விட்டார்.

சிறிது நேரத்தில் விழித்துக் கொண்ட ராசு, எழுந்து புறப்பட ஆயத்தமானான். அந்த நேரத்தில் வீட்டிற்குள் இருந்தவர் மீண்டும் வெளியே வந்து ராசுவிடம் பேச்சுக் கொடுத்தார்.

அந்தப் பேச்சின் மூலம் ராசுவின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட அந்த வீட்டுக்காரர் ராசுவுக்கு உதவி செய்ய விரும்பினார். அவர் ராசுவைப் பார்த்து,



"நீ வாழ்க்கையில் முனனேற விரும்புகிறாய். உனக்கு என்ன வேண்டுமோ கேள். உதவி செய்கிறேன்," என்றார்.

"என் வறுமை நிலை நீங்கி நான் நல்ல வாழ்க்கை வாழ வழி செய்ய வேண்டும்!" என்றான் ராசு.

"கவலைப்படாதே!" என்று சொன்ன வீட்டுக்காரர் தன் அருகே கிடந்த ஒரு செங்கல்லை நோக்கி ஏதோ முணுமுணுத்தபடி தனது ஆட்காட்டி விரலை நீட்டினார்.

அடுத்த வினாடி-

அந்தச் செங்கல் சுத்தத் தங்கக் கட்டியாக மாறி தகதகத்தது.

"போதுமா ராசு?" என்று கேட்டார் வீட்டுக்காரர்.

அந்த வீட்டுக்காரரிடம் ஏதோ ஒரு அபூர்வசக்தி இருப்பதாக உணர்ந்த ராசுவின் மனதில் உடனே பேராசை எழுந்தது.

"ஐயா! இந்தச் செங்கல்லுக்குப் பதில் வேறு ஏதாவது ஒரு பெரிய பொருளைத் தங்கமாக்கியிருக்கலாமே!" என்று கூறினான்.

உடனே வீட்டுக்காரரும் அருகில் கிடந்த பெரிய மரக்கட்டையை நோக்கித் தனது ஆட்காட்டி விரலை நீட்டினார். உடனே அந்த மரக்கட்டை அப்படியே தங்கமாக மாறி ஜொலித்தது.

ராசுவின் மனம் மேலும் பேராசை கொண்டது.

"இதைவிடப் பெரிய பொருட்களும் இருக்கின்றனவே," என்றான் ராசு. வீட்டுக்காரரும் பக்கத்தில் இருந்த பாறாங்கல்லை நோக்கி ஆட்காட்டி விரலை நீட்டினார்.

உடனே அந்தப் பாறாங்கல்லும் தங்கமாக மாறியது. ஆனால் எதிலுமே ராசு 'போதும்' என்று திருப்தி அடையவில்லை.

"ராசு! இந்த இடத்தில் இனி பெரிய பொருள் எதுவும் இல்லை" என்றார் பொறுமை இழந்த வீட்டுக்காரர்.

"ஏன் இல்லை! இருக்கிறது" என்றான் ராசு அழுத்தமாக.

"எங்கே இருக்கிறது?" என்று எரிச்சலோடு கேட்டார் வீட்டுக்காரார்.

"உங்களிடத்திலேயே தான் இருக்கின்றது. தங்கங்களை உருவாக்கும் உங்கள் ஆட்காட்டிவிரல் தான் அது. அதை எனக்கு கொடுத்து விடுங்கள்!" என்றான் ராசு.

அதைக் கேட்ட வீட்டுக்காரர் திடுக்கிட்டார்.

"ராசு! உலகத்திலேயே மிகவும் தரித்திரம் பிடித்தது எது தெரியுமா? தன் தேவைகள் நிறைவேறினாலும் கூட, பேராசையால் "போதவில்லை போதவில்லை "என்று திருப்திப்படாமல் இருப்பதுதான். நான் இந்த உலகத்தையே தங்கமாக்கிக் கொடுத்தாலும் உனக்கு திருப்தி வராது. இனி என்னால் உனக்கு உதவி செய்யமுடியாது. இந்தத் தங்கங்கள் எல்லாம் அதன் இயற்கை ரூபத்தை அடைந்துவிடும். நீ உடனே இந்த இடத்தை விட்டுச் சென்றுவிடு", என்றார்.

ராசு தனது பேராசையால் கிடைத்த தங்கத்தையும் இழந்து, உள்ளது போதும் என்று நினைத்தபடி அவனது நண்பனையும் பார்க்காமலே தனது ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

## இஸ்ரேல் — வாரம் ஒரு நாடு

**தலைநகர்**-ரெல்அவிவ்
**பரப்பு**-20,772 சதுர கிலோ மீற்றர்
**மக்கள் தொகை**-54,00,000
**மொழி**-ஹிப்ரு (ஆட்சி மொழி). அரபி
**எழுத்தறிவு**-92%



**சமயம்**-யூதம், இஸ்லாம்
**நாணயம்**-ஷெகெல்
**தனி நபர் வருமானம்**-12,500 டொலர்

**வரலாறு:-**

மூன்று பக்கமும் அரபு நாடுகளால் சூழப்பட்ட ஒரு மத்திய கிழக்கு நாடு. பாலஸ்தீன துருக்கியின் ஒட்டோமான் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. நான்கு நூற்றாண்டுகள் ஒட்டோமான் சாம்ராஜ்ய ஆட்சிக்குப் பிறகு 1917 இல் பிரிட்டனின் ஆளுகைக்குட்பட்டது. யூதர்களுக்கு ஒரு தனிநாடு அளிப்பதாக பிரிட்டன் உறுதியளித்தது. ஜெர்மனியின் நாஸிப் படுகொலையைத் தொடர்ந்து பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து அராபியரும், யூதர்களும் பங்கிட்டுக் கொண்டனர். 1948 மே 14இல் இஸ்ரேல் சுதந்திரநாடாகப் பிரகடனப்படுத்தப் பட்டது. ஆனால் அராபியர் இதை விரும்பவில்லை. எனவே அண்டை நாடுகளுடனான போர் தவிர்க்க இயலாததாகி விட்டது. இன்றும் கூட பூரண அமைதி அப்பகுதியில் திரும்பவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் 120 பேர். இவர்கள் அதிபரைத் தேர்ந்தெடுக்கின்றனர். 1993 செப்டெம்பர் 13ல் பாலஸ்தீன தன்னாட்சி உடன்பாடு ஏற்பட்டது.

**பொருளாதாரம்:-**

விவசாயத்திலும் கைத்தொழிற்துறையிலும் தனக்கு ஒதுக்கப்பட்ட சிறிய நிலப்பகுதியிலேயே நிபுணத்துவத்தாலும், திறமையாலும் பெரும் வளர்ச்சியை அடைந்துள்ளது. கிப்பூட்ஸ் (கூட்டு விவசாயம்), நீர்ப்பாசனத் திட்டங்கள் குறிப்பிடத்தக்கன. கொடிமுந்திரி, எலுமிச்சம் பழங்கள் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும். மதுத்தயாரிப்பு முக்கிய தொழில். இரத்தினங்கள் வெட்டுவதில் இஸ்ரேல் பெல்ஜியத்திற்கு அடுத்த இடத்தைப் பெறுகிறது. ஜோர்டான் சமவெளியிலும் சாக்கடல் பகுதியிலும் பாறை உப்பு, கந்தகம், பொட்டாசியம் ஆகியன கிடைக்கின்றன.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.12.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 119
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 116

பரிசுக்குரியவர்:
ச. ..பியா பேகம்
முஸ்லிம் மகளிர் கல்லூரி கல்கிசை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சு. அர்ச்சனா புனித. சிசிலியா மகளிர் மகா வித்தியாலயம்-மட்டக்களப்பு. | பாத்திமா ரிஸ்னா இப்றாஹீம் அஸ்ஹர் மத்திய கல்லூரி, அக்குறணை. |
| நஸீர் நஸ்ரூன் நெய்தல் நகர், மூதூர்-01. | எஸ். பிரகலாதன் கமு/உவெஸ்லி உயர்தர பாடசலை, கல்முனை. |
| கனகரத்தினம் வாசுதேவன் கணபதி வித்தியாலயம், கொழும்பு-12 | ஏ.எச். ஹாரிஷ் நஸ்றியா மகா வித்தியாலயம், சிலாபம். |
| சித்தி பர்ஹானா ஆனந்தா மகா வித்தியாலயம், புத்தளம். | ச. ஜெயலீலா, நல்லிலை பாற்றிய கன்னியர் பாடசாலை-நுவரெலியா. |
| ஏ. ராஜேஸ்வரி மா/அஸ்மீர் மத்திய கல்லூரி, உக்குவெளை. | அ. சத்தியதாசன் ப/வேவெஸ்ச த.வி., பதுளை. |

## கண்டுபிடிப்பு



மலேரியா நோயினால் பலர் மடிந்து கொண்டிருக்க, இந்நோய்க்குக் காரணமான கிருமி 1880ம் ஆண்டுகளில் தான் கண்டு பிடிக்கப் பட்டது.

மலேரியா பரவ நுளம்புகள் தான் காரணம் என்பதை இங்கிலாந்து டாக்டர் பாட்ரிக் ரிக்மான்சன் என்பவர் 1890ம் ஆண்டு கண்டுபிடித்தார்.

இந்தியாவில் பிறந்த டாக்டர் ரொனால்ட் ரொஸ் இதே எண்ணத்துடன்-ஒரே குறிக்கோளுடன் மலேரியாவுக்கு மருந்து கண்டு பிடிக்க முனைந்தார். பல மாதங்கள் அவர் நுளம்புகளைப் பிடித்து ஆய்வு நடத்தினார். 1900ம் ஆண்டில் அவரது முயற்சிக்கு வெற்றி கிடைத்தது. அனோபிலிஸ் என்ற நுளம்பின் மூலம் மலேரியா பரவுகிறது என்பதை நிரூபித்தார்.

மலேரியாவுக்கு எதிரான போரில் இந்தக் கண்டுபிடிப்பு ஒரு பெரிய திருப்புமுனையாக இருந்தது.

## விருந்தும் - விளைவும்



அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் அதிபர் தியோடர் ரூஸ்வெல்ட்டுடன் புத்தக வெளியீட்டாளர் டி.வாஷிங்டன் என்ற கறுப்பர் ஓர் இரவு விருந்தில் கலந்து கொண்டார். இதன் மூலம் புது வரலாறு உதயமானது. அதற்கு முன் அமெரிக்க அதிபருடன் கறுப்பர் இனத்தவர் யாரும் உணவு அருந்தியது கிடையாது. இந்த நிகழ்ச்சியின் காரணமாக அப்போது வெள்ளை இனத்தவர் கொதித்தனர். இதனால் இனக்கலவரம் வெடித்தது. 34 பேர் கொல்லப்பட்டனர்.

## சுற்றுலா



## நகரம்

வட அமெரிக்காவின் மெக்சிக்கோ நாட்டின், பசிபிக் கடற்கரை ஓரம் அமைந்துள்ளது அகபல்கோ என்ற துறைமுக நகரம். இதன் இன்னொரு பெயர் அகபல்கோ-டி-ஜுரஸ். காடுகளும் மலைகளும் சூழ்ந்த இயற்கை வனப்பு மிக்க நகரம் இது. உலகத்திலேயே மிக அழகான சுற்றுலா இடமாகத் திகழ்கிறது. இதன் இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், மற்ற நகரங்களைப்போல பனிமூடி குளிர்ப பிரதேசமாக இருக்காது. குளிர் காலத்தில் கூட வெதுவெதுப்பாக இருக்கும். இந்த வெப்ப சுகத்தை அனுபவிப்பதற்காகவே சுற்றுலாப்பயணிகள் அதிகம் பேர் வருகின்றனர்.

இந்நகரம் கடற்கரை ஓரமாக அமைந்திருப்பதாலும், பயணிகள் வருகை அதிகமாக இருப்பதாலும் இந்நகரைச் சுற்றிலும் சுமார் இருபது இடங்களில் கடற்கரை ஓர குடியிருப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளைக் கவரும்வகையில் படகு விளையாட்டு, மீன் பிடிக்க வசதி, இசை அரங்கு, இரவு விடுதி போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
அனுப்பவேண்டிய முகவரி
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# விலை உயர்ந்த குற்றம் 12

பிரபாகர் பட்டுக்கோட்டை

ஒன்றும் பெரிய மாற்றமில்லை. அங்கு விட இங்கு இன்னும் இரண்டு அறைகள் அதிகம். ஏதாவது சாப்பிடு கிறீர்களா?" என்றாள் ஏராள உடம்பை ஒரே கவுனுக்குள் புதைத்துச் சரிக்கட்டி யிருந்த ரெய்ஸா.

"கேட்காதே. கொலைப்பசி. இன்னும் பத்து நிமிடத்தில் எதையாவது கொடு. இல்லையென்றால் உன்னை ஒரு ஓரத்தில் பிய்த்துச் சாப்பிட்டு விடுவேன்" என்று சிரித்தார் ஸ்மித்.

"வெஸ்லி, இப்படி உட்கார்"

வெஸ்லி தன் கழுத்தில் டை போலக் கட்டியிருந்த ஸ்வெட்டரின் கைகளைப் பிரித்து, நுழைத்து கழுத்து வழியாக அணிந்து கொண்டு, மென்த்தால் சிகரெட்டை எடுத்து உதடுகளில் பொருத் திக் கொண்ட பார்க்கர் ஸ்மித்திற்குத் தன் லைட்டரால் நெருப்பு கிளிக்கிவிட்டு அமர்ந் தான்.

"சொல்லுங்கள். என்ன உங்கள் திட்டம்?" என்றாள் ஆனி.

"இரு. அதை விட முக்கியமான காரியம் ஒன்று இருக்கிறது."

பார்க்கர் ஸ்மித் டெலிபோனை எடுத்து, எண்கள் சுற்றினார்.

"ஹலோ! ப்ரூடி. நியூயார்க்கிலிருந்து பார்க்கர் ஸ்மித் பேசுகிறேன்"

"நியூயார்க்கிலிருந்து? வாவ்! எப்போது வந்தீர்கள் இந்தியாவில் இருந்து?"

"நாற்பது நிமிடங்களாகிறது. ஏன், உங்கள் நபர் சொல்லவில்லையா?"

"எங்கள் நபர்? புரியவில்லை."

"விமான நிலையத்தில் ரோஜரைப் பார்த்தேன். ஒன்று முடிய அடுத்தது என்று சிகரெட் புகைத்துக் கொண்டிருந் தான். என்னைத் தொடர்ந்து வந்தான். நான் வீடு வந்து சேர்ந்த பிறகுதான் திருப்திப்பட்டு தன் பைக்கைத் திருப்பிக் கொண்டு சென்றான்.

"ரோஜர்? யார்?"

"நமக்குள் பாசாங்கு வேண்டாம் மிஸ்டர் ப்ரூடி. ரோஜர் தெரியாது? புகைப்படக்காரன். ஜோ அண்ட் ஜோவில் பகுதி நேர சேவகன். தெரியாது?"

"ஓகாட். யு மீன் வில்லியம் ரோஜர்? அவன் எங்கே அங்கே வந்தான்? ஏன் உங்களைத் தொடர்ந்தான்?"

"ஆளையும் அனுப்பிவிட்டு, கேள்வி யும் கேட்பது நன்றாக இல்லை மிஸ்டர் ப்ரூடி..."

"அவனை நான் அனுப்பினேனா? நோ"

"என் மேல் நம்பிக்கை இல்லை யென்றால் அதை நேரடியாகச் சொல்லி விடுவதுதான் எனக்குப் பிடிக்கும். இப்படி உளவு பார்ப்பது என்னை அவமானப் படுத்துவது போலிருக்கிறது."

"மிஸ்டர் பார்க்கர், ரோஜரை நான் அனுப்பவில்லை. இது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. விசாரிக்கிறேன். நம்பிக்கை இல்லாமல் உங்களிடம் பொறுப்பு ஒப்படைக்கவில்லை. என்ன ஆயிற்று? பையன் எங்கே? அதைப் பற்றிச் சொல்லுங்கள்"

"பார்க்கர் எப்போதும் எடுத்தகாரியத் தில் தோற்றதே இல்லை."

"கன்கிராஜுலேஷன்ஸ், எங்கே இருக் கிறான்?"

"என்னுடன். என் வீட்டில்."

"நீங்கள் ஃப்ராங்ளின் ஸ்ட்ரீட்டில் இருந்து விலாசம் மாறிவிட்டதாக...."

"உங்கள் உளவாளி சொன்னானா துப்பறிந்து?"

"ஏன் எல்லாவற்றையும் தவறாக எடுத்துக்கொள்கிறீர்கள்? டெலிபோன் டிபார்ட்மெண்டில் சொன்னார்கள். இப் போது எங்கு இருக்கிறீர்கள்?"

"ரோஜரைக் கேட்டால் சொல்வான்"

"மறுபடி ரோஜரை ஏன் இழுக் கிறீர்கள்? என் நிறுவனத்தில் இருந்து, எனக்குத் தெரிந்து உங்களை உளவு பார்க்க அவனை யாரும் அனுப்பவில்லை. நம்புங்கள்."

"அப்படியென்றால் உங்களுக்கே தெரியாமல் ஜோ-அண்ட் ஜோவில் சில காரியங்கள் நிகழக்கூடும் என்று புரிந்து கொள்கிறேன்."

"நேரில் விளக்குகிறேன் மிஸ்டர் பார்க்கர்!"

"சரி"

"நான் வரட்டுமா அங்கு?"

"வேண்டாம். அலுவலகத்திற்கு நாளை மாலை நான் வருகிறேன். பேசிக் கொள்ள லாம்."

"நல்லது. மனதில் எந்த வருத்தமும் வேண்டாம் மிஸ்டர் பார்க்கர்."

"குட் நைட் மிஸ்டர் ப்ரூடி" என்று பதில் குட் நைட்டை எதிர்பார்க்காமல் தொடர் பைத் துண்டித்தார் பார்க்கர்.

"என்ன அந்த விரட்டு விரட்டுகிறீர்கள்? உண்மையில் நம்மை யாராவது பின் தொடர்ந்து வந்தார்களா என்ன?" என்றாள் ஆனி.

"ஆமாம். ஒரு பைக் விடாமல் பின்தொடர்ந்தது." என்றான் வெஸ்லி.



"எனக்கு ஒன்றுமே புரியவில்லை."

"என்ன புரியவில்லை?" என்றார் பார்க்கர்.

"இரண்டாவது கட்டம் என்கிறீர்கள். ஜோ அண்ட் ஜோவிடம் ஒப்படைக்கப் போவதில்லை என்கிறீர்கள். ஆனால் வந்ததும் முதல் காரியமாக அவர்களை தொடர்பு கொண்டு காரியம் சக்ஸஸ், பையன் என் னிடம் தான் இருக்கிறான் என்கிறீர்கள். இந்த விலாசம் கண்டுபிடிப்பது அவர்களுக் குச் சிரமமா என்ன?"

"இல்லை, மிகச் சுலபம். ஆனி, என்னிடம் ஒரு கொள்கை உண்டு. ஒரு திறமை அதன் முழு அளவிலும் பயன்படுத் தப்பட வேண்டும். உனக்கு ஜர்னலிசத்தில் எக்கச்சக்கமான ஆர்வம் உண்டு. கிரியேட்டிவ் சிந்தனை உண்டு. உன்னைப் போல் இயந்திர கதியில் ஒரு அலுவலகம் டைப்பிஸ்ட்டாக உட்கார வைத்தால் விரும்புவாயா?"

"மாட்டேன். ஒருநாள் கூட என்னால் இருக்க முடியாது."

"அதைப் போலத்தான் சரவணகுமார் விஷயமும். பார்த்தாயா நேரில், எப்படி அபாரமாகத் தன் திறமைகளை வெளிப்படுத் தினான். இவைகளை ஜோ அண்ட் ஜோ முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளப் போவதில்லை. தன் சுயநலத்திற்காக சில்லறை விஷயங்களில் ஈடுபடுத்தும். அதைவிட, இவனின் திறமைகளை அதன் கடைசி எல்லை வரை பயன்படுத்த வாய்ப் புகளும், சௌகரியங்களும் கொண்டது சி.ஐ.ஏ!"

"யு மீன்... இவனை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப் போகிறீர்களா?"

"அரசாங்கமும், சி.ஐ.ஏ. நிறுவனமும் ஒன்றை ஒன்று சார்ந்தவை என்றாலும், சி.ஐ.ஏ. சுதந்திரமாக இயங்கும் ஒரு அமைப்பு. அதன் பல சுதந்திரங்களில் அரசாங்கமே கூடத் தலையிடுவதில்லை. ஜனாதிபதியைக்கூட ரகசியமாக கண்காணிக் கிற வால்த்தனமெல்லாம் செய்யும். அதன் பழைய ஊழியன் என்கிற முறையில்... நான் அதற்குப் பரிசாக அளிக்கப் போகிறேன் சரவணகுமாரை. இவனை வைத்து வெளிநாடுகளில் கூட பல பெரிய காரியங் களைச் சாதித்துக் கொள்ள முடியும். பலன்-அரசாங்கத்திற்கு, நம் நாட்டுக்கு. ஆக, ஒரு வகையில் நாம் செய்யப் போவது தேச சேவை"

பிரமித்துப் போன ஆனி, "புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இதை எப்படிச் செய்யப் போகிறீர்கள்? எப்படி ஜோ-அண்ட்-ஜோ நிறுவனத்தைச் சமாளிக்கப் போகி றீர்கள்?"

"முதல் கட்டத்தில் எனக்குத் துணையாக நின்றவள் நீ. இந்த இரண்டாவது கட்டத்தில் எனக்குத் துணையாக நிற்கப் போவது.... வெஸ்லி."

"நானா?" என்றான் வெஸ்லி ஆச்சரிய மாய்.

"ஆமாம்"

ரெஸ்ஸா ட்ரேயில் பீங்கான் பிளேட்டுகள் வைத்து, அவற்றில் ஆவி பறக்கும் சைனீஷ் அசைவ உணவு வகைகள் எடுத்து வர...

சிகரெட்டை புகைத்த பார்க்கர், "சாப்பிட்டு விட்டு விரிவாகப் பேசலாம்" என்றார்.

பம்பாய்.

பார்க்கர் ஸ்மித் அண்ட் கோவை விமானத்தில் வழியனுப்பி திரும்பினான் மார்ட்டின்.

கண்ணபிரானைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "அனுப்பியாச்சு சார்" என்றான்.

"வெரிகுட். எப்ப வர்றே இங்கே?"

"சார். எனக்கு ஒரு வாரம் லீவு வேண்டும்."

"ஏண்டா? என்ன செய்யப் போறே அங்கே?"

"ஏற்கனவே சொல்லியிருக்கேனே சார், இங்கே பம்பாய்ல ஆஷான்னு எனக்கு ஒரு ஃபிரண்டு...."

"ஏண்டா வார்த்தைகளை அர்த்தம் புரியாம கொச்சப் படுத்தறே? சரி, சரி. கையில பணம் துள்ளுது. விளையாடு. சீக் கிரம் வந்து சேரு. நீ இல்லைனா எனக்கு கையி, காலு எல்லாமே உடைஞ்ச மாதிரி......"

"ஒரே வாரத்தில வந்துடறேன் சார்."

மார்ட்டின் கவனமாக ஷேவ் செய்து கொண்டான். நேற்று வாங்கின புதுச் சட்டை அணிந்து கொண்டான். பனியனுக்குள் கை நுழைத்து செண்டு அடித்துக் கொண்டான். நீளமான சிகரெட் புகைத்துக் கொண்டு புறப்பட்டான்.

டாக்ஸி பிடித்து அப்போலோ பந்தர் ரோடு வந்தான்.

தாஜ் மஹால் ஹோட்டல் ரிஸப்ஷன் ஹாலில் தேடி, "ஹாய் ஆஷ்" என்றான்.

மஞ்சள் மிடியில் இருந்த ஆஷ் உதடு விரிய, மிதக்க மிதக்க நடந்து வந்து அவன் கைப்பற்றி முத்தமிட்டு, "எத்தனை நாளாச்சி பார்த்து? சொன்னபடி வருவீங்களான்னு கவலைப்பட்டுக் கிட்டிருந்தேன்."

"வந்தாச்சு. என்ன செய்யலாம் சொல்லு ஆஷ்?"

"எத்தனை மணி நேரம் உங்களுக்கு டைம் இருக்கு மார்ட்டின்?"

"மணி நேரமா? ஒரு வாரம் ஆஷ்! உனக்காகவே ஒதுக்கிட்டு வந்துட்டேன். எங்க போகலாம்? உனக்கு என்ன வாங் கலாம்?"

"முதல்ல எங்க தங்கலாம்?"

"என் முதலாளி பங்களா இருக்கு ஆஷ். காலியா இருக்கு. கட்டில்ல விரிப் பெல்லாம் மாத்தி வெச் சிட்டேன். வா"

"உடனேவா? ச்சீ. கொஞ்சம் பேச லாம்ப்பா. சுத்தலாம்ப்பா?"

"சரிப்பா. எங்கேப்பா?"

"ஜுஹீ பீச் போவமா?"

"காஷ்மீர் வேணாலும் போலாம். படகு வீடு எடுத்துக்கிட்டு ஒரு முழு நாள் கதவையே திறக்காம, டிரெஸ்சே போட்டுக்காம..."

"அய்யோ! குளிரும்."

"சூடாக்கிட்டால் போச்சி. வா, முதல்ல பீச்" என்று அவள் இடுப்பில் கை செலுத் தினான் மார்ட்டின்.

பம்பாய் எல்லையில் தான் தப்பான ஆசாமியிடம் பணம் பெற்றுக் கொண்டு, சரவணகுமாரை ஒப்படைத்து விட்டதை உணராத சுபாகர் என்கிற சுபா, படு உற்சாகமாக புறப்பட்டு புனேயில் ஒரு ஹோட்டலில் தங்கினான்.

கிஷன்சந்தின் ஆளாக நடித்த மார்ட்டின் கொடுத்த நாற்பது நூறு ரூபாய் நோட்டுக் கட்டுக்களை படுக்கை முழுக்க ஆசையாக அடுக்கிப் பார்த்துக் கொண்டான். ஆசையாக அதன்மேல் அப்படியே படுத்துப் பார்த்துக் கொண்டான்.

மனம் முழுக்க சந்தோஷக் கொப் புளங்கள் மிதந்தன.

என்ன ஒரு அதிஷ்டக்காரன் நான்!

சென்னையில் சரவணகுமாரின் அப் பாவை பிளாக்மெயில் செய்து பெற்றது ஐந்து லட்சம். இப்போது ஷேட்டிடம் கறந்தது நான்கு லட்சம். இந்தத் திட்டத்தில் உதவி செய்த செல்வத்துக்கும், பொறுப்பு கொடுத்த ராஜனுக்கும் பங்கு கொடுத்தாலும்.... எப்படி யும் என் பங்குக்கு ஏழு லட்சங்களுக்கு மேல்!

நான்கே நாட்களில் யாரால் இப்படி சம்பாதிக்க முடியும்?

சரவணகுமார், நீ வாழ்க! உன் திறமை வாழ்க!

நோட்டுக் கட்டுக்களை அடுக்கிப் பெட்டிக்குள் வைத்துக்கொண்டு, ரூம் பாயை அழைத்தான். ஹிந்தியில் பெண்வேண்டும் என்றான்.

"இங்கே வராது சார்."

விலாசம் கேட்டுக் குறித்துக் கொண்டு. காரில் சென்றான். பாண்ட் பாக்கேட்டில் குவாட்டர் விஸ்கி வாங்கி வைத்துக் கொண்டான்.

மொழிவாரியாக நிறுத்தப்பட்டு யார் வேண்டும் என்று கேட்கப் பட்டான்.

"தமிழும், தெலுங்கும்" என்று இரண் டைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

மஞ்சத்தில் இப்படியும், அப்படியு மாகத் திரும்பித் திரும்பிக் கொஞ்சினான். விஸ்கி புகட்டி விட்டான். சிகரெட் பற்ற வைத்து விட்டான். இன்னும் இரண்டு கைகள் தேவையாய் உணர்ந்தான். இன்னும் ஒரு....

புறப்படும் போது நூறு ரூபாய் தாள்களை விசிறி மடிப்பாகப் பிடித்து கூரை நோக்கி வீசினான். அவர்கள் அவசர அவசரமாகப் பொறுக்குவதை ரசித்துவிட்டுப் புறப்பட்டான்.

மறுநாள் காலை ஒரு புரோக்கர் ஷாப் சென்று, ஏற்கனவே ராஜன் கையெழுத்திட்டுத் தந்திருந்த காகிதங் களைக் கொடுத்து ஆர்.சி.புக் கொடுத்து, அடிமட்ட விலைக்கு பதில் பேசாமல் காரை விற்றான்.

சென்னை செல்ல விமானமா, ரயிலா என்று யோசித்தான்.

ரயிலைத் தேர்ந்தெடுத்துப் புறப் பட்டான்.

மறுநாள் காலை அரசியல் துடிக்கும் செய்தித்தாள்கள் துரிதமாக விற்பனை யாகிக் கொண்டிருந்த சென்னையின் சென்ரலில் இறங்கினான் சுபா.

"டாக்ஸி! டாக்ஸி!"

திருவெற்றியூர் போகும் வழியில் இருந்த ஏதோ ஒரு பாக்கத்தில் தன் நண்பன் செல்வம் வீட்டு வாசலில் இறங்கிக் கொண்டு, டாக்ஸியை அனுப்பி விட்டுக் கவனித்த போது..... கதவு பூட்டியிருந்தது.

அருகே ஒரு ரிக்ஷா இளைப்பாறிக் கொண்டிருக்க... சற்றுத்தள்ளி ஒரு டீக்கடையில் ஆகாஷவாணியின் பிரத் யேகக் கரகரப்புச் செய்திகள். விளக்குக் கம்பத்தில் எருமை மாட்டைக் கட்டி, பால் கறந்து கொண்டிருந்த அம்மாள் நடுவில் நிறுத்தி, காலில் கடித்த கொசுவை உதைத்தாள். தமிழ் டீச்சர் போல ஒரு பெண் விபூதி வைத்து, கொண்டை போட்டு சாலை நோக்கிப் போனாள். கடந்த சைக்கிளின் கேரியரில் மூங்கில் கூடைக்குள்ளிருந்து கோழிகளின் கொண்டைகள் எட்டிப் பார்த்தன.

"ஒரு டீ போடுப்பா. பச்சை பெயிண்ட் அடிச்ச அந்த வீட்ல செல்வம்னு இருக்காரே, தெரியுமா?"

"தெரியுமே. ஏன் சார்?"

"வீடு பூட்டியிருக்குதேன்னுதான் கேட்டேன். பார்க்க வந்தேன். நான் அவரோட தோஸ்து."

இரண்டு கையாலும் கிளாஸ் வாங்கிக் கொண்டு மேலே மிதந்த வைக்கோல் துண்டையோ எதையோ நுனி விரலால் எடுத்து விட்டுக் குடித்தான். ஐந்து லட்சத்தை செல்வத்திடம் ஒப்படைத் தோமே..... பார்சலாகக் கட்டி ஒரு அரிசி டிரம்முக்குள் என் கண்ணெதிரில் போட்டு மறைத்தானே..... பிறகு சபலப் பட்டு எடுத்துக் கொண்டு ஓடிவிட்டானோ?

"நேத்து கூட பார்த்தேனே..... தெரிலைங்க. பக்கத்தில கேட்டுப்பாருங்க."

பக்கத்தில் பால் கறப்பவளைத் தவிர யாருமில்லை. அவளிடமிருந்து நிச்சயம் தகவல் தெரிய வாய்ப்பில்லை. எந்த ஆம்பிளை எங்க போறான்னு பாத்து வைக்கிறதுதான் என் வேலையா என்று கேட்டு வம்புக்கு வரலாம்.

இவன் யோசனை செய்து கொண்டி ருந்த போதே, சைக்கிளில் வந்து நின்று மணியடித்தான் செல்வம். இவனைப் பார்த்ததும் பதட்டமானான். "பாவி! எங் கடா போனே பூட்டிக் கிட்டு?"

"கட்டிங் செஞ்சிக்கப் போனேன். அதிருக்கட்டும். உள்ளே வா. முக்கியமான விஷயம்."

பூட்டைத் திறந்து உள்ளுக்குள் வந்து.... *(தொடர்ந்து வரும்)*

## பேனா நண்பர் அரங்கம்



**பெயர்:** வி. பாஸ்கரன்
**வயது:** 26
**முகவரி:** 25, விகாரை வீதி, திருகோணமலை.
**பொழுது போக்கு:** கரப்பந்து, பத்திரிகை.



**பெயர்:** கே. பிரசாந்தினி
**வயது:** 17
**முகவரி:** சரஸ்வதி வித்தியாலய வீதி, தம்பிலுவில்-01.
**பொழுது போக்கு:** பத்திரிகை, வானொலி.



**பெயர்:** பி. முருகதாஸ்
**வயது:** 26
**முகவரி:** MATTER GASSE.17, 8005. ZURICH, SWITZERLAND.
**பொழுது போக்கு:** பத்திரிகை, சினிமா, உதைபந்து.



**பெயர்:** எஸ். முகமட் பௌமி
**வயது:** 26
**முகவரி:** 37இ, ஜயந்தி மாவத்தை, சி.டி.பி. வீதி, அநுராதபுரம்.
**பொழுது போக்கு:** பத்திரிகை, வானொலி.



**பெயர்:** எஸ். ஜன்ஹா
**வயது:** 23
**முகவரி:** P.O.BOX- 31127, CODE NO- 90803, AL-SULIBIKHAT, KUWAIT.
**பொழுது போக்கு:** வழமையானவை



**பெயர்:** எம். இக்ராம்
**வயது:** 24
**முகவரி:** P.O.BOX-946, DHAHRAN-31932, K.S.A.
**பொழுது போக்கு:** வானொலி, தொலைக்காட்சி.

**பெயர்:** எம். ஸுஹார்
**வயது:** 22
**முகவரி:** 139/11, ஹிங்குலோயா, மாவனல்லை.
**பொழுபோக்கு:** பத்திரிகை, நண்பர் தொடர்பு.

**பெயர்:** எம். ராஸின்
**வயது:** 16
**முகவரி:** 73, புளுகொகதென்ன, அக்குறணை.
**பொழுது போக்கு:** பத்திரிகை, கிரிக்கெட்.

**பெயர்:** எஸ். ரவி
**முகவரி:** 720, KENNEDY ROAD, #805, SCAG. ONT. M1 K2 B7. CANADA.
**பொழுது போக்கு:** பேனா நட்பு, சினிமா.

**பெயர்:** எம். நல்லநாதன்
**வயது:** 20
**முகவரி:** 6/20, கல்பொத்த வீதி, கொழும்பு-13.
**பொழுது போக்கு:** பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

**பெயர்:** எஸ். புவனேந்திரன்
**வயது:** 16
**முகவரி:** 61, இந்துக் கோவில் வீதி, அக்கரைப்பற்று-07.
**பொழுது போக்கு:** பத்திரிகை, வானொலி, புத்தகம்.

**பெயர்:** ஜே. றிஸ்வி
**வயது:** 19
**முகவரி:** டி 44, ஞானவிமல வீதி, தெமட்டகொட, கொழும்பு-09.
**பொழுது போக்கு:** சினிமா, தொலைக்காட்சி, பத்திரிகை.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## மக்சீம் கார்க்கி

53

அவள் சொல்வதை அவர்கள் அமைதியுடன் கேட்டார்கள். மிருகத்தைப் போல் மதிக்கப்பட்டு நடத்தப்பட்ட அவளது வாழ்க்கையில், தனக்கு நேர்ந்த துயரங்களையும் கொடுமைகளையும் பொறுமையோடு சகித்துத் தாங்கிய அவளது வாழ்வில் படாடோபமோ அலங்காரமோ அற்ற அவளது எளிய வாழ்க்கையின் பின்னணியிலே மறைந்துள்ள யதார்த்தமான அர்த்தபாவத்தை அவர்கள் உணர்ந்து உணர்ச்சிவசப் பட்டார்கள். அவள் மூலம் ஆயிரக் கணக்கான ஜீவன்கள் பேசுவது போலிருந்தது. அவள் வாழ்ந்ததெல்லாம் எளிய வாழ்வு, சர்வ சாதாரண வாழ்வு. இந்த உலகிலுள்ள எண்ணிறந்த பெரும்பான்மை மக்களது வாழ்வைப் போன்ற சாதாரண வாழ்வு. அவளது வாழ்க்கைக் கதை அந்த வாழ்வுக்கு ஒரு உதாரணம்; ஒரு





அறிகுறி. நிகலாய் தனது முழங்கைகளை மேஜைமீது ஊன்றி, மோவாயைக் கைகளில் தாங்கியவாறு கண்களைச் சுருக்கி, கண்ணாடி வழியாக அவளைக் கூர்ந்து கவனித்தான். சோபியா நாற்காலியில் சாய்ந்து இடையிடையே நடுக்கிக் கொண்டாள், தலையையும் உலுப்பிக் கொண்டாள். அவளது முகம் மெலிந்து வெளுத்துப் போனது போலத் தோன்றியது; அவள் சிகரெட்டும் பிடிக்கவில்லை.

"ஒரு காலத்தில் நான் என்னையே துர்ப்பாக்கியசாலி என்று கருதினேன்" என்று கண்களைத் தாழ்த்திக்கொண்டு, அமைதியாகச் சொன்னாள் சோபியா. "என்னுடைய வாழ்க்கையே ஒரு ஜன்னி மயக்கம் என்று எனக்குத் தோன்றியது. அது என்னை ஒரு சிறு நகரத்திற்கு கடத்தப்பட்டிருந்த காலம். அந்தச் சமயத்தில் என்னைப் பற்றி நினைப்பதைத் தவிர, எனக்கு வேண்டியதைக் கவனிப்பதைத் தவிர, வேறு சிந்தனையோ செயலோ கிடையாது. ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்ற விருப்பால், நான் எனது துன்பங்களைக் கணக்கிட்டுப் பார்த்தேன். என்னை மிகவும் நேசித்த தந்தையோடு சண்டை பிடித்துக் கொண்டிருந்தேன்; என்னைப் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேற்றினார்கள்; என்னை ஒரு அவமானச் சின்னமாகக் கருதினார்கள். நான் சிறையிலும் தள்ளப்பட்டேன். எனது நெருங்கிய தோழன் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுத்தான். என் கணவர் கைதாகி, நான் சிறைக்குள் போய் மீண்டும் நாடு கடத்தப்பட்டேன், பிறகு கணவரின் மரணமும் சம்பவித்தது. இந்த உலகிலேயே நான் தான் மிகவும் துர்ப்பாக்கியமானவள் என்று அப்போது எனக்குத் தோன்றியது. ஆனால், என்னுடைய சகல துர்ப்பாக்கியங்களும்- அதை விடப் பத்துமடங்கு அதிகமான துர்பாக்கியங்களும் கூட, உங்களுடைய ஒருமாத வாழ்க்கைக்குச் சமமாகாது, பெலகேயா நீலவ்னா! உங்கள் துர்ப்பாக்கியமோ அன்றாடச் சித்திரவதை; ஆண்டாண்டு தோறும் நிரந்தரமாக நிலைத்திருந்த சித்திரவதை. அந்த மாதிரியான சித்திரவதையைத் தாங்குவதற்கு உங்களைப் போன்றவர்கள் எங்கிருந்துதான் சக்தி பெறுகிறார்களோ?"

"எங்களுக்கு எல்லாம் பழகிப்போய் விடுகிறது" என்று பெருமூச்சுடன் சொன்னாள் பெலகேயா.

"நான் வாழ்க்கையை நன்றாகவே அறிந்திருக்கிறேன் என்றே தோன்றுகிறது" என்று சிந்தனை வயப்பட்டவனாகக் கூறினான் நிகலாய்; என்றாலும் வாழ்க்கையைப் பற்றிப் புத்தகத்தின் மூலமாவது - என்னுடைய பக்குவமடையாத அரைகுறை அபிப்பிராயங்கள் மூலமாவது தெரிந்து கொள்ளாமல், இந்த மாதிரி நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் போதே, வாழ்க்கை பயங்கரமாய்த் தோற்றமளிக்கிறது. சின்னஞ் சிறு விசயங்கள் தான் பயங்கரமாய்த் தோன்றுகின்றன. அந்தக் கவனிப்பற்ற சிறு சிறு பொழுதுகள்தான் ஆண்டுகளை உரு வாக்குகின்றன....."

அந்தப் பேச்சு இடைவிடாது விரிந்து பெருகியது. இருண்ட வாழ்க்கையின் சகல அம்சங்களையும் அந்தப் பேச்சு தொட்டு விரித்தது. தாய் தனது நினைவின் ஆழத்திலேயே முங்கி, முழுகிவிட்டாள்; தனது இளமைக் காலத்தில் பயங்கரத்தை உண்டாக்கிய அன்றாடத் துயரங்களையும், ஆறாத மனப் புண்களையும் அவள் சங்கிலித் தொடர்போல நினைவுக்குக் கொண்டு வந்து சிந்தித்துப் பார்த்தாள். கடைசியாக அவள் பேசினாள்:

"நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளும் நேரமாகிவிட்டது. நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டே இருக்கிறேனே. சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி முடித்துவிட என்னால் முடியுமா? முடியாது."

அக்காவும் தம்பியும் அவளிடமிருந்து மௌனமாகவே விடைபெற்றுச் சென்றனர். வழக்கத்துக்கு மாறாக, நிகலாய் தன் தலையை அதிகம் தாழ்த்தி வணங்கியது போலவும், தன் கரத்தை அதிக அன்போடு குலுக்கியது போலவும், தாய்க்கு தோன்றியது. சோபியா தாயை அவளது அறைவரையிலும் சென்று வழியனுப்பிவிட்டு, திரும்ப முனையும்போது வாசல் நடையில் நின்றவாறே சொன்னாள்:

"நிம்மதியாகத் தூங்குங்கள். நல்லிரவு!"

அவளது குரலில் பரிபூரணமான பரிவு தொனித்தது: அவளது சாம்பல் நிறக் கண்கள் ஆர்வங் கலந்த அன்போடு தாயின் முகத்தைக் கனிந்து நோக்கின.

பெலகேயா சோபியாவின் கரத்தைத் தனது இரு கரத்தாலும் பற்றிப் பிசைந்து கொண்டே சொன்னாள்:

"மிகுந்த நன்றி."

✱✱

சில தினங்கள் கழிந்தபின், ஒரு நாள் தாயும் சோபியாவும் ஏழை நாடோடிப் பெண்களைப் போல் உடை தரித்தவாறு நிகலாயின் முன்னால் வந்து நின்றார்கள். அவர்கள் இருவரும் நைந்து போன கவுன்களும் ரவிக்கைகளும் அணிந்திருந்தார்கள். முதுகில் ஆளுக்கொரு சாக்குப் பையைத் தொங்கவிட்டுக்கொண்டிருந்தார்கள்; ஒவ்வொருவர் கையிலும் கம்பு இருந்தது. அந்த உடையலங்காரம் சோபியாவை ஓரளவு குள்ளமாக எடுத்துக் காட்டியது; அவளது வெளுத்த முகத்தை மேலும் கடுமையாகக் காட்டியது.

நிகலாய் தனது சகோதரிக்கு விடை கொடுக்கும்போது அவளது கரத்தை ஆர்வத்தோடு குலுக்கினான். அவர்களிருவருக்குமிடையே நிலவிய அமைதியான எளிமையான ஒட்டுறவைத் தாய் மீண்டும் ஒருமுறை உணர்ந்தாள். அவர்கள் ஒருவருக்கொருவர் முத்தமிடவில்லை; அன்பு ததும்ப அழைக்கவில்லை. என்றாலும் அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் ஆழ்ந்த பரிவோடும் ஆர்வத்தோடும் தம் உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொண்டார்கள். அவள் குடிவாழ்ந்த இடத்தில் ஜனங்கள் முத்தமிடவும் செய்தார்கள், அன்போடு அழைக்கவும் செய்தார்கள். ஆனால் ஒருவரை யொருவர் பசி வெறி கொண்ட பட்டி நாய்களைப்போல் கடித்துக் குதறவும் செய்தார்கள்.

பெண்கள் மௌனமாய் நகரத்தின் வீதிகளின் வழியே, வயற்புறங்களின் வழியே நடந்து சென்றார்கள், இருபுறத்திலும் பெரிய பெரிய பிர்ச் மரங்கள் வளர்ந்தோங்கி நிற்க, சமதளமற்று மேடுபள்ளமாயிருக்கும் அகன்ற பாதையின் வழியாக, தோளோடு தோள் உரச, ஒருவர் பக்கம் ஒருவராக நடந்து சென்றார்கள்.

"உங்களுக்கு களைப்பே தோன்றவில்லையா?" என்று சோபியாவைப் பார்த்துக் கேட்டாள் தாய்.

"எனக்கு அதிகமாக நடந்து பழக்கமிராது என்று நினைக்கிறீர்களா? இதெல்லாம் எனக்குப் பழகிப்போன விவகாரம்?"

சோபியா உற்சாகத்தோடு தனது பிள்ளைப் பிராயத்தின் செல்ல நடவடிக்கைகளைப் பற்றிப் பேசத் தொடங்கினாள்.

அவள் பொய்யான தஸ்தாவேஜுகளோடு எத்தனை யெத்தனையோ பெயர்களில் வாழ்ந்திருக்கிறாள். அவள் மாறு வேடம் பூண்டு, உளவாளிகளிடமிருந்து தப்பியிருக்கிறாள். விரோதமான புத்தகங்களை கட்டுக்கட்டாக வண்டிகளில் ஏற்றிக் கொண்டு ஊர் ஊராய்ச் சொன்றிருக்கிறாள். நாடு கடத்தப்பட்டவர்களைத் தப்பித்து ஓடச் செய்வதிலும் ஒத்துழைத்திருக்கிறாள், அவர்களோடு வெளி நாடுகளுக்கு துணையாகவும் சென்று சேர்த்திருக்கிறாள். ஒரு தடவை அவள் தான் குடியிருந்த வீட்டுக்குள்ளேயே ஒரு இரகசிய அச்சகத்தை வைத்திருந்தாள்: பொலீஸ்காரர்கள் அதைக் கண்டு பிடித்து, வீட்டை சோதனையிட வந்த போது, அவள் தன்னை வேலைக்காரி மாதிரி வேடமிட்டு மறைத்துக் கொண்டு தன் வீட்டு வாசலில் வந்து நின்ற பொலீஸ்காரர்கள் முன்நிலையிலேயே தன்னை இனங்காட்டாமல் ஓடி மறைந்து தப்பி விட்டாள். அன்றைய தினம் ஒரே குளிர். அவளோ மெல்லிய ஆடைகளைத் தான் அணிந்திருந்தாள். தலைமீது ஒரு சவுக்கத்தைப் போட்டவாறு, அவள் அந்தப் பெரிய நகரத்தின் எல்லைவரைக்கும் நடந்து சென்றாள்; கையில் ஒரு டப்பாவைத் தூக்கிக்கொண்டு மண்ணெண்ணெய் வாங்கச் செல்கிறவள்போல் சென்று நழுவித் தப்பி விட்டாள்.

இன்னொரு தடவை அவள் சில தோழர்களைச் சந்திப்பதற்காக, ஒரு நகரத்துக்குள் வந்து சேர்ந்தாள்; அவர்கள் தங்கியிருந்த மாடிக்குச் செல்லும் சமயத்தில், படியில் ஏறிக்கொண்டிருக்கும் போதே, மாடியில் சோதனை நடக்கிறது என்பதைக் கண்டு கொண்டாள். திரும்பவும் கீழே இறங்கி தப்பிச் செல்வதற்கு அவளுக்கு நேரமில்லை. எனவே அவள் ஒரு மாடியின் கீழே இருந்த வீட்டுக் கதவைத் துணிந்து தட்டினாள்; உள்ளிருந்தவர்கள் கதவைத் திறந்தவுடன் அவள் விறு விறு என்று தனது மூட்டை முடிச்சுக்களுடன் அந்த இனந்தெரியாத ஜனங்களின் வீட்டுக்குள் நுழைந்து விட்டாள். பிறகு அவர்களிடம் பட்டவர்த்தமாகத் தன் நிலைமையைச் சொன்னாள்.

"நீங்கள் விரும்பினால், என்னைப் பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கலாம், ஆனால் நீங்கள் அந்த மாதிரிச் செய்வீர்கள் என்று நான் நினைக்கவில்லை" என்றாள்.

அந்த வீட்டிலுள்ளவர்களோ ரொம்பவும் பயந்து போய் விட்டார்கள். அன்றிரவு முழுவதும் அவர்கள் கண்ணையே இமைக்கவில்லை. எந்த நேரத்திலும் பொலிஸ்காரர்கள் தம் வீட்டுக் கதவைத் தட்டக்கூடும் என்று எதிர்பார்த்தார்கள். இருந்தாலும் அவளை அவர்கள் வெளியே விரட்டவில்லை. மறுநாள் காலையில் அவர்கள் அனைவரும் தங்களது தீரமிக்க செயலையெண்ணிக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள்.

மற்றொரு முறை அவள் ஒரு கன்னியாஸ்திரி மாதிரி வேடமிட்டுக் கொண்டு, அவளைத் தொடர்ந்து திரியும் ஒரு உளவாளி சென்ற அதே ரெயிலில், அதே சீட்டிலேயே பிரயாணம் செய்தாள். தான் மோப்பம் பிடித்துவரும் பெண்ணை எவ்வளவு கெட்டிக்காரத்தனமாகப் பின் தொடர்ந்து வருகிறான் என்பதை அவளிடமே அதே ரயிலில் இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்து வருவதாக அவளிடமே தெரிவித்தான். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அவன் கீழே இறங்கிச் சென்று அவள் இருக்கின்ற பெட்டியை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் திரும்பி வந்து, அந்தக் கன்னியாஸ்திரியிடம் சொன்னான்:

"அவளை இப்போது காணவில்லை. ஒருவேளை படுத்துத் தூங்கியிருப்பாள். அவளுக்கு ஒரே களைப்பாயிருந்திருக்கும். நமது வாழ்க்கையையெல்லாம் விட, அவளுடைய வாழ்க்கை சிரமமானதுதானே!"

சோபியாவை அன்பு ததும்பப் பார்த்தவாறே அந்தக் கதைகளைக் கேட்டு, தாய் தனக்குள் சிரித்துக்கொண்டாள். நெட்டையாகவும் ஒல்லியாகவுமிருந்த சோபியா தனது அழகிய கால்களை லாகவமாக எட்டி வீசி நடந்தாள். அவளது பேச்சிலும் நடையின் வீச்சிலும், அவளது உற்சாகம் நிறைந்த கம்மலான குரலிலும், அவளது நிமிர்ந்த தோற்றம் முழுவதிலுமே ஒரு துணிவும் முழுமையான ஆரோக்கியமும் நிறைந்திருப்பதாகத் தோன்றியது. அவள் எதையுமே ஒரு வாலிப மிடுக்கோடுதான் நோக்கினாள்; எங்கெங்கு நோக்கினும், அவள் தன் இதயத்துக்கு மகிழ்வூட்டும் எதையோ தான் கண்டாள்.

"எவ்வளவு அழகான பைன்மரம்!" என்று ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டியவாறு கூவினாள் சோபியா. தாய் உடனே நின்று அந்த மரத்தைப் பார்த்தாள்- அந்தப் பைன் மரமும் மற்ற மரங்களைப் போலத்தான் அவளுக்குத் தோன்றியது; அவளுக்கு அதில் எந்தவித அழகோ புதுமையோ தோன்ற வில்லை.

"ஆமாம் அது ஒரு அழகான மரம்தான்" என்று கூறிக் கொண்டே அவள் சிரித்துக் கொண்டாள். சோபியாவின் காதருகே உள்ள நரை முடிகளில் காற்று எப்படி ஊசலாடித் திரிகிறது என்பதைப் பார்த்தாள்.

"அதோ ஒரு வானம்பாடி!" என்றாள் சோபியா. சோபியாவின் சாம்பல் நிறக் கண்கள் அன்பு ததும்பி ஒளிபெற்று விளங்கின; அவளது உடல் முழுவதுமே நிர்மலமான வான மண்டலத்தில் எங்கேயோயிருந்து கேட்கும் ஏதோ ஒரு அரூபியான கீதத்தைக் கேட்க எண்ணித் துடித்தது. சமயங்களில் அவளது அழகிய உடல், ஒரு காட்டு மலரைக் கொய்வதற்காக குனிந்து வளையும்; வாய்க்குள்ளாக ஏதோ ஒரு இசையை முணுமுணுத்துக் கொண்டே அவள் அந்த மலரைத் தனது மெல்லிய விரல்களால் விறுட்டென்று பறித்தெடுப்பாள். நடுங்கும் அந்தப் பூவின் இதழ்களை இனிமையாய் தடவுவாள்.

இவையெல்லாம் சாம்பல் நிற கண்களையுடைய சோபியாவின் மீது தாய்க்கு ஒரு ஈடுபாட்டை உண்டாக்கியது; எனவே அவளோடு சேர்ந்து நடப்பதற்காக, தாய் அவளுக்கு மிகவும் அருகில் நெருங்கியவாறு நடந்து சென்றாள். சில சமயங்களில் சோபியா கடுமையாகவும் பேசினாள். தாய்க்கு அப்படிப் பேசுவது பிடிக்காது. எனவே அப்போது அவள் தனக்குத் தானே நினைத்துக் கொள்வாள்:

"மிகயீலுக்கு அவளைப் பிடிக்காது."

ஆனால் மறுகணமே சோபியா மீண்டும் அன்போடும் எளிமையோடும் பேசுவாள்; தாயும் அவளை ஒரு புன்னகையோடு பார்த்துக் கொள்வாள்.

"நீங்கள் இன்னும் எவ்வளவு இளமையோடிருக்கிறீர்கள்?" என்று பெருமூச்சுடன் சொன்னாள் தாய்.

"எனக்கு முப்பத்திரண்டு வயதாகிறதே!" என்றாள் சோபியா.


பெலகேயா புன்னகை செய்தாள்:

"நான் அதைச் சொல்லவில்லை. முகத்தைப் பார்த்தால், உங்கள் வயது நீங்கள் சொன்னதை விடவும் அதிகமாகத் தான் தெரிகிறது. ஆனால், உங்கள் பேச்சைக் கேட்டால், கண்களைப் பார்த்தால் எனக்கு ஒரே வியப்பா யிருக்கிறது- நீங்கள் ஒரு சின்னஞ் சிறு பெண் போலவே இருக்கிறீர்கள். எவ்வளவோ கஷ்டமும் அபாயமும் நிறைந்த வாழ்க்கையை அனுபவித்திருக்கிறீர்கள். இருந்தாலும் இதயம் மட்டும் எப்போதும் சிரித்த வண்ணமாகவே இருக்கிறது."

(தொடர்ந்து வரும்)

---

# மரணக் கன்னி



சிலாபம் பொ.புஷ்பராஜு

கற்பிட்டியிலிருந்து காலை 7 மணிக்கு கொழும்புக்கு புறப்பட்ட அந்த தனியார் பஸ்வண்டி தலவில்று, பாலக்குடா, தேலி, நுரைச்சோலை கிராமங்களை எல்லாம் தாண்டி 10 மணிக்கு பாலாவி சந்தியை வந்தடைந்தது.

அன்று பாலாவி நகரத்தில் வார சந்தை நாள். ஒரே சனக் கூட்டம். புத்தளத்திலிருந்து வந்து கொண்டிருந்த வாகனங்களை சந்தியில் இருந்த ஆமிக்காரர்கள் செக் பண்ணிக் கொண்டிருந்தனர். புத்தளம் – கொழும்பு செல்லும் பஸ் வண்டியில் ஒரே சன நெரிசல். ரவியும் பஸ்சில் ஏறிப் பார்த்தான். தன்னால் வண்டியினுள் ஏற முடியவில்லை. பின்னாலிருந்த கற்பிட்டி–கொழும்பு பஸ்சில் ஒருவாறு தொத்திக் கொண்டான்.

இப்போது பஸ்வண்டி மதுரங்குளியையும் முந்தல் தமிழ் கிராமத்தையும், புளிச்சாகுளம் முஸ்லிம் கிராமத்தையும் தாண்டி மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. வண்டியின் சாரதி நல்ல நல்ல தமிழ் பாடல்களை கெசட்டில் ஒலிபரப்பிக் கொண்டிருந்தான். பாட்டுச் சத்தம் ரவியின் காதை அடைத்தது.

இப்போது பஸ் வண்டி, மையாவ, நல்லதரன்கட்டுவ பிரதேசங்களை எல்லாம் தாண்டி ஆராச்சிகட்டு என்ற நகரில் ஹோட்டல் ஒன்றின் முன் நின்றது. "தே பொண்ண கட்டிய தே பொண்ட பஹிண்ட. ஆய வாகன நத்தரகரண்ண கொழும்ப" என நடத்துனர் மிக பணிவாக கத்தினான்.

எல்லோரும் மூட்டை முடுச்சுகளுடன் தேனீர்குடிக்க ஹோட்டலினுள் சென்றனர். ரவியும் வண்டியை விட்டு இறங்கி அருகேயிருந்த காட்டினுள் சென்றவன் பின் பத்து நிமிடம் கழித்தே வீதிக்கு வந்தான்.

வந்தவன் நேராக ஹோட்டலுக்குள் நுழைந்து ஒரு பணிசை கடித்துக் கொண்டே தேனீரையும் குடித்துக் கொண்டிருந்தான்.

அவனுக்குள் மனதில் ஒரே போராட்டம். கலியாணம் முடித்து பத்து வருடத்தின் பின் லீலா பிள்ளைப்பெறப் போகிறாள். வயிற்றுப்பிள்ளைக்காரி. கொழும்பில் நாட்டுப் பழங்கள் கிடைக்காது. என்ன செய்கிறாளோ தெரியாது. "மச்சான் நீங்கள் வரும் போது பிஞ்சி மாங்காய் பத்தும், புளித்தோடம்பழம் ஐந்தும் வாங்கி வாங்கோ." என செல்டெல்லில் கூறியதும் ஞாபகத்திற்கு வந்து மனதை உருக்கியது. இந்த நினைவிலேயே அவன் பணிசை கடித்துக் கொண்டிருக்கும் போதே பயணிகள் ஒவ்வொருவராக வண்டியினுள் ஏறத் துவங்கினர். ரவியும் வேகமாக கெசியரிடம் காசை கொடுத்து விட்டு அருகேயிருந்த பெட்டிக் கடையில் மாங்காய்க்கு விலை பேரம் பேசிக்கொண்டிருந்தான்.

இப்போது பஸ் வண்டியில் ஒரே பரபரப்பு. முன் சீட்டுக்கு அடியில் உருண்டையான பார்சல். அருகேயிருந்தவன் "போம்ப பார்சலயக்" என்று சொல்லிக் கொண்டே இறங்கி ஓடத் தொடங்க, எல்லோரும் பஸ்சை விட்டு தலை தெறிக்க ஓடினர். அருகேயிருந்த வாகனங்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டன. ஒரே சலசலப்பு. இரண்டே நிமிடத்தில் ஹோட்டலில் ஈக்கள் மட்டுமே சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தன. சனங்களைக் காணோம்.

சுமார் ஒரு கிலோ எடையில். உருண்டை வடிவத்தில் - மேலே முட்டிக் கொண்டு, கூர்மையாக மணல் கடுதாசி பேக்கில் போட்டு அதுவும் சொப்பிங் பேக்கில். அந்நகரமே வெறிச் சோடிவிட்டது. பார்சலுக்கு உரிமை கோர யாருமே இல்லை.

ரவியின் செவிக்கு விசயம் விழுந்தது. செவிட்டில் யாரோ அறைவது போன்ற உணர்ச்சி. மாங்காயை பெட்டிக்கடை கிழவியிடம் கொடுத்து விட்டு ரவி வேகமாக ஓடி வந்து பஸ் வண்டியினுள் ஏறப் போன போது சனங்கள் "போம்ப, போம்ப பஸ் எத்துலேயண்ட எப்பா" என காதைப் பொத்திக் கொண்டு கத்தினர்.

ரவி ஓடிப் போய் சீட்டுக்கு அடியிலிருந்த பார்சலை எடுத்துக் கொண்டு வீதிக்குப் பாய்ந்தான். "ஐயோ" என தூரத்தில் இருந்தவர்கள் கத்தினர்.

ரவி மெதுவாக எழுந்து தன் கன்னத்தில் ஒட்டியிருந்த மண்தூசியை தடவிக்கொண்டே பார்சலைப் பிரித்துக் காட்டினான்.

பார்சலில் ஒரு பெரிய பழுத்த பனம்பழம் "இந்தப் பழம் என் மனுசிக்கு பாலாவி சந்தையில் வாங்கியது. அவ நிறை மாத கர்ப்பிணி. பனம்பழம் என்றால் அவளுக்கு உயிர்" என்று சொல்லிக் கொண்டே மீண்டும் பார்சலை கட்டத் தொடங்கினான்.

"போம்ப" என்று புரளியைக் கிளப்பியவன் தலையை தொங்கப் போட்டுக் கொண்டு மீண்டும் பஸ்வண்டியில் ஏறினான்.



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# கண்களில் என்ன ஈரமோ

ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி

நிசப்தமாய்க் கிடந்தது லைப்ரரி. புத்தகத்துள் மூழ்கியிருந்த என்னைக் கடந்து போனது ஓர் இனிய சுகந்தம். தலையை நிமிர்த்தியதும் என் கண்ணில் பட்டது ஓர் அழகிய பெண். சிவப்பு நிறம். நீண்ட கூந்தல். அழகிய முகம். பார்த்தவாறிருந்தேன். புத்தக அடுக்கை புரட்டிக் கொண்டிருந்தாள்.

தேர்ந்தெடுத்தவுடன் நேரே என் இருக்கைக்கு எதிரில் அமர்ந்து கொண்டாள். 'என்ன அழகு!' மனதுக்குள் வியந்தவாறு மீண்டும் படிக்க முயல்கையில் மனது மறுத்தது. மீண்டும் நிமிர்ந்து பார்த்தேன்.

என்ன தோன்றியதோ அப்பெண்ணும் சட்டென நிமிர்ந்தாள். தீட்சண்யமான பார்வை. மெதுவாய்ப் புன்னகைத்தேன். புன்னகைத்தாள். மீண்டும் பார்த்தால் நல்லதில்லை. நினைத்தவாறு படிக்கவாரம்பித்தேன்.



மனசுக்குப் பிடித்தமான நிறத்தில் ஸாரி வேண்டும் என கடையில் பரத்தி வைத்திருந்த ஸாரிகளைப் புரட்டிக் கொண்டிருந்தேன். எந்த டிசைனும் கலரும் சரியாகப் பிடிக்கவில்லை. உடன் வந்திருந்த தோழி சலித்துக் கொண்டாள்.

"இந்த ஸாரி உங்களுக்கு நல்லா யிருக்கும்" எடுத்து தந்தவளை ஏறிட்டு திடுக்கிட்டேன். அந்தப் பெண். அழகிய பெண். லைப்ரரியில் கண்ட அதே பெண். சிநேகிதமாய்ச் சிரித்தாள். என் விருப்பமான நிற ஸாரி. எப்படித்தான் தேர்ந்தெடுத்தாளோ? எவ்வளவு நேரமாய் நானும் தடுமாறினேன். தட்டுப்படவில்லையே.

"தேங்க்யூ.....மிஸ்...?" மெதுவாய்ச் சொன்னேன்.

"மிஸ் வீணா..." அவள் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள். "இரண்டு முறை சந்திச்சுட்டோம் இல்லியா?" அவளாகத் தொடர்ந்தாள். நிறையக் கதைத்தோம். வெளியே வந்த போது வீணாவும் தொடர்ந்தாள். "வாங்க... நானே உங்களை பஸ் ஹோல்ட்ல டிராப் பண்ணிடறேன்." தன் காரில் வரும்படி அழைத்தாள். வெயில் மண்டையை பிளக்கும் பகல் வேளையில் அந்த அழைப்பு இதமாய்த் தெரிய ஆமோதித்தாள் தோழி. நானும் தான்.

தானே காரை ஓட்டினாள் வீணா. கைகளிலும் கழுத்து காதிலும் தங்கமும் வைரமும் பதித்த நகைகள் 'பளிச்' சென்றன. நீண்ட கூந்தல் காற்றில் பறக்க, லாவகமாக ஒதுக்கியபடி ஒரு நடிகையைப் போன்ற பவிசுடன் மிளிர்ந்தாள். கலகலவென கதைக்காவிட்டாலும் பேசிய வசனங்களில் ஒரு இதம் இருந்தது. இறங்கிக் கொண்டு நன்றி கூறியபோது புன்னகைத்தாள். காரின் பின்புறம் வாங்கிய புடவைப் பெட்டிகள் மற்றும் இதர பொருட்கள் குவிந்து கிடந்தன. கிட்டத்தட்ட பத்தாயிரத்துக்காவது வாங்கி யிருப்பாள். தோழி என்னைப் பார்த்த அந்த பார்வையில் வியப்பு தெறித்தது.

"நல்ல பணக்கார பொண்ணு போல தெரியுது. எப்படி பழக்கம்டி?" நான் என்ன சொல்ல பழக்கமொண்ணுமில்லை.... ஒரு நாள் லைப்ரரில வெச்சு கண்டேன். பிறகு இப்ப கடையில வெச்சு அவளாக என்னைக் கண்டு பேசினா அவ்வளவுதான்." என்றேன்.

"பொறந்தாலும் அப்படிதான் பொறக்கணும்டி.. என்ன அழகு! ஆடம்பர வாழ்க்கை! பொறாமையா இருக்குடி.. நாம இருக்கோமே.... என்ன வாழ்க்கைடி எங்களோடது! காலைல பஸ்ஸுக்கு காத்து நிற்கறதும்.... பஸ்ஸ நரக வேதனை அனுபவிக்கிறதும். ஒரு ஸாரி, நகையின்னு வாங்கறதுக்கு ஆயிரம் முறை யோசிச்சு கணக்கு பார்க்கறதும்...... ச்சீ..." தோழி அலுத்துக் கொண்டாள். நான் பேசவில்லை.

பலமுறைகள் லைப்ரரியில் அந்த அழகிய வீணாவைக் கண்டேன். சிரித்தேன். கதைத்தாள். "வாசிப்பது எனக்கு மிகவும் பிடித்தமானது" என்றாள். "மனசுக்கு ரொம்ப நிம்மதி தரும் புத்தகங்கள் நிரம்ப வாசிப்பேன். கவிதை படிப்பேன்; எழுதுவேன்." சொல்லும் போது அவள் விழிகளில் லேசான ஈரம் படிவதை உணர்ந்தேன்.

எங்கேயோ இடறிற்று. பெரிய இடத்து செல்லப் பெண். பார்ட்டி, கிளப், பிக்னிக் என கும்மாளமிட வேண்டிய வயது. இப்படி கவிதை, தத்துவம் என ஒதுங்கிப் போவது சரியாகப் படவில்லை. வீணாவைப் பற்றி புரிந்து கொள்ள சிரமப்பட்டேன். ஒரு நாள் தானாகவே மௌனம் கலைத்தாள். ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தியைக் கூட்டி வந்தாள் "இது யார் தெரியுமா?" என்றாள். சிரித்தேன்.

"இவ என் மகள்" என்றாள். அதிர்ந்தேன். அவள் சிரித்தாள். காற்றிலசைந்த கூந்தலை அலட்சியமாக ஒதுக்கினாள்.

"இருபது வயசில வீட்டார் எதிர்ப்பை மீறி இஷ்டப்பட்டு கல்யாணம் முடிச்சேன். காதல் கடைசியில கானலா மாறிடிச்சு. சரியா ஒரு வருட வாழ்க்கைக்குப் பின்னால அவர் மனம் மாறிப் போயிடுச்சு. இடையில வந்த இன்னொருத்திய கூட்டிக்கிட்டு கனடா போயிட்டாரு. என்ன அதிர்ச்சியா இருக்கா? இருக்கும்..... இருக்கும் என் சோகங்கள, வேதனை எல்லாம் மொத்தமா இப்ப மறந்துட்டேன். இருந்தாலும் மீண்டும் கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லை. மிஸ் வீணா என்ற பெயரோட இருக்கேன். டிவோர்ஸ் பண்ணப் புறமும் மிஸஸ் போட்டுக்கிட்டா நல்லாருக்காதில்ல. நினச்சிருந்தா இன்னொருத்தர முடிச்சிருக்கலாம். ஆனா மனசுக்கு ஒண்ணுருக்கே! ஒருத்தர ஒரு முறைதான் விரும்பமுடியும். காதலங்கிறது ஒரு முறை, ஒரேயொரு முறை மட்டும் மலரும் மலரில்லையா? சொல்லுங்க...." நான் சொல்லவில்லை. இப்படியும் ஒரு பெண்ணா? எனக்குள் அதிர்ச்சி அலையலையாகப் பரவியது. என்னவோ என் மனதுக்குள் கண்ணகி தான் நினைவுக்கு வந்தாள். அந்த அழகிய வீணா ஆயிரம் சோகங்களைச் சுமந்து அமைதியாகப் புன்னகைத்தாள்.

****

# தவறிய கடமை



எனக்கு நேற்று நடந்த மாதிரித்தான் இருக்குது. அந்த துயரமான சமபவம். சீ.... ஏன் இப்படி பிரிவுகளைத் தருகிறான் ஆண்டவன்......?

ஆனாலும் ஒரு விதத்திலை ஆறுதல் தான், ஆச்சியை (யார்) ஆர் ஒழுங்காப் பார்த்தவை. அது மனிசி போய்ச் சேர்ந்ததும், ஒரு விதத்திலை நிம்மதிதான்.

இங்கை இருந்து அலைக்கழிஞ்சு திருஞ்ச மனிசியை எந்தப் பிள்ளையள் ஒழுங்காப் பாத்ததுகள்? எல்லாரும் திட்டிக் கொண்டு திரிஞ்சவை. அது மனிசியும் ஐந்து பிள்ளையளைப் பெத்தும் ஒரு பிரயோசன முமில்லை. நல்ல காலம் கொள்ளிவைக்க கடைசி நேரம் ஒண்டு உதவிச்சுது.

ஆனா, சவம் போக மட்டும் எல்லாரும் கத்திச்சினம்.

"என்ரை அம்மா...... எங்களை விட்டுட்டு போறியே"-எனக்கண்டா உதைக்க வேணும் போலைகிடந்தது. அது மனிசி ஆராலை

யாழ். ஞானகணேசன்

செத்தது, பிள்ளையளாலை தானே? ஒரே சண்டை. உதுகள் பிள்ளையளே-சள்ளையள்.

இப்ப எல்லாருக்கும் நிம்மதி. கிழவி போய்ச் சேர்ந்தது எல்லாருக்கும் மனசுக்கு நல்ல சந்தோஷம்.

ஆனா, வெளியாலை மட்டும் ஆரேன் கேட்டா, "எங்களுக்கு சரியான கவலைதான், அது மனிசி படுத்த படுக்கையிலை இருந்தாலும் பிரச்சனையில்லை, தெய்வம் மாதிரி, ஒரு கரைச்சலில்லை."

எனக்கெண்டால் உதுகளைக் கேக்க எரிச்சல்தான் வரும். ஏன் எங்கடை அம்மாவும் அண்டைக்கு பக்கத்து வீட்டு சரஸ்வதி அக்காவுக்கு சொல்லுறா, "நாங்கள் எங்கடை அம்மாவுக்கு ஒரு குறையும் விடயில்லை. மனிசி என்ன கேட்டாலும் செய்து குடுத்திடுவோம்." உண்மையாய் உது மனசிலை இருந்து வரயில்லை எண்டு சரஸ்வதி அக்காவுக்கு வடிவாய் தெரியும்.

விடியக்காலமை எங்கடை விட்டை நடக்கிற சண்டை அவாக்கு கேக்காமல் விட்டிராது.

அண்டைக்கு ஒரு நாள், விடியக்காலமை நான் படிச்சுக் கொண்டிருக்கிறேன், அம்மா ஆச்சியை திட்டிறா:

"உந்தக் கிழவியோடை பெரிய கரைச்சல், வெள்ளண போய்ச் சேர்ந்திட்டுது எண்டா மனிசருக்கு பெரிய நிம்மதி. ராத்திரியும் இரண்டு மணிக்கு எழுப்புது. குறுக்கால போனதுக்கு நித்திரையும் வாறதில்லை. தனக்கு நித்திரை வராட்டி மற்றவையையும் கிடக்க விடாது."

நான் அம்மாவைப் பேசினேன், "என்னணை ஆச்சியை திட்டுறாய்? அது கின்ரை வருத்தம் அதுமனிசிக்குத் தான் தெரியும். உங்களை மனிசி பெத்தது பிற்காலம் உதவுவியள் எண்டு தானே?"

"ஓ! அவ ஐஞ்சு பேரைப் பெத்தவ- நான் மட்டும் தான் தனிய மாரடிக்கிறதோ? மற்றவை தங்கடை வீடுகளிலை நல்லாக் கிடக்கினம்!"

"ஆச்சி உனக்குத்தானே உதவி செய்தது கூட?"

"உதவியே! உபத்திரவம்....?"

அவளவு தான். இதுக்கு மிஞ்சி நான் என்ன கதைக்க? நிப்பாட்டிப் போட்டேன்.

எனக்கு வடிவாய் தெரியும், மனிசி எங்கடை அம்மாவுக்கு செய்த உதவியள்.

எங்களை சின்னனிலை பள்ளிக்கூடம் கொண்டு போய் விட்டது கூட ஆச்சிதான். ஒரு நாள் கூட நாங்கள் படிச்ச பள்ளிக் கூடத்துக்கு அம்மா வந்ததேயில்லை.

நான் ஐஞ்சாம் வகுப்புப் படிக்கு மட்டும் இரவிலை ஆச்சிக்கு பக்கத்திலைதான் படுப்பேன். அது மனிசி விடிய ஐஞ்சு மணிக்கு எழுப்பிவிடும் படிக்கிறதுக்கு. நான் "கொலர்சிப்" பாஸ் பண்ணினதே அந்த மனிசியால தான்.

உம்..... அது மனிசி இருக்கும் வரை செய்த உதவியள் எவ்வளவு?

ஆனா, உவை ஆச்சியைத் திட்டின திட்டுக்கு உவைக்கு பிள்ளையள் என்ன செய்யும் எண்டு நானும் பாக்கத்தான் போறேன்.

ஏன் முந்தநாள் அம்மா தலையைச் சுத்துது எண்டு படுத்துக் கொண்டு "பிள்ளை கொஞ்சம் தேத்தண்ணி தா" எண்டு தங்கச்சியைக் கேக்க, அவள் "சும்மா கிடவணை உனக்கு நெடுகத் தலைச்சுத்து தான். எனக்கு வகுப்புக்கு நேரம் போச்சு" என்டு சொல்லிக் கொண்டு ஓடயில்லையே!

அப்ப கொஞ்சமாவது அம்மாவுக்கு விளங்கியிருக்கும்-தான் விட்ட பிழையள்.

# பழக்க தோசம்

ரி.தேவன் மட்டக்களப்பு

தலையில் கட்டு, நெற்றியில் பிளாஸ்டர், உதட்டுப்பக்கம் தீற்றலாய் ஒரு இரத்த சிராய்வு... முழங்கையில் மருந்து போடப்பட்ட ஒரு காயம். இந்தக் கோலத்துடன் சித்திரகுப்தன் அலுவலகத்திற்கு வந்ததும் அனைவரும் அதிர்ந்தார்கள். சித்திரகுப்தனை "நான் தான் சித்திரகுப்தன்" என்றே அனைவரும் அழைப்பர்.

சித்திரகுப்தனுடைய பெயருக்கு முன்னால் 'நான் தான்' என்ற பட்டம் சேர்ந்ததே



ஒரு தனிச் சிறுகதை!

அந்த அலுவலகத்திலேயே சித்திரகுப்தன் ரொம்ப சுறுசுறுப்பானவர். தற்பெருமைக்காரர்!

புகழ் விரும்பி!

ஏதாவது ஒரு காரியம் நடந்தால், அதில் அவர் சம்மந்தப்பட்டிருந்தாலும் சம்மந்தப்படாவிட்டாலும், "நான் தான் இதற்கு காரணம்... இது என்னால்தான் நடந்திடுச்சு..." என்று தம்பட்டம் கொட்டாத குறையாக விளம்பரம் பண்ணுவார். இது இவரது இரத்தத்தில் ஊறிய பழக்கம்.

உதாரணமாக போனவாரம் ஒரு சம்பவம் நடந்தது. சித்திரகுப்தனின் அலுவலக பிரதிநிதி போன வாரம் மாற்றலாகி அவரது சொந்த ஊர் பக்கம் போனார்.

உடனே சித்திரகுப்தன் "நான்தான் ரங்கநாதனுக்கு சொந்த ஊர்ப்பக்கமாக மாற்றலுக்கு ஏற்பாடு பண்ணினேன். நான் மட்டும் தலையிடலைன்னா அவரை வேறு தண்ணியில்லாத ஊருக்கு தூக்கிப் போட்டிருப்பாங்க" என்று பிரசாரம் செய்யத் தொடங்கினார்.

ரங்கநாதனுக்குப் பதிலாக மகாலிங்கம் வந்தார். வந்ததும் வராததுமாக 'நான் தான்' சித்திரகுப்தன் அவருடன் ஒட்டிக் கொண்டார்.

உடனேயே தனது ஒலிபரப்பையும் அவர் தொடங்கிவிட்டார்.

"மகாலிங்கம் வீடு பார்க்கிறதுக்குள்ள ரொம்ப சிரமப்பட்டுப் போயிட்டார். நான் தான் அவருக்கு அம்சமாக ஒரு வீடு பிடித்துக் கொடுத்தேன். இரு நூறு ரூபா வாடகை. நான் மட்டும் இல்லைனா.. ஐநூறு அறுநூறு வாடகையில் எங்கேயாவது மாட்டியிருப்பார்," என்று அலுவலகம் பூராவும் வாய் வலிக்க ஒருவர் பாக்கியில்லாமல் சொல்லித் தீர்த்து விட்டார்.

இப்படியாக எதை எடுத்தாலும் நான் தான் செய்தேன், நான் தான் செய்தேன் என்று சொல்வதால், அவரை எல்லோரும் 'நான் தான் சித்திரகுப்தன்' என்று சொல்லத் தொடங்கினார்கள்.

இப்போது வாடிக்கையாளர்களுக்கும் இந்தப் பெயர் ரொம்ப பிரபலம்.

சரி இனி கதைக்கு வருவோம்...

கொத்தலும் குதறலுமாய் அலுவலகத்தில் வந்து நின்ற நான்தான் சித்திரகுப்தனை அனைவரும் சூழ்ந்து கொண்டார்கள்.

"என்ன சார் இது? விழுந்திட்டீங்களா?"

"சித்திரகுப்தன் சார் என்ன இது? ஏதும் விபத்தா?"

"என்ன சார் ஆச்சு சொல்லுங்களேன்!"

நான் தான் சித்திரகுப்தன் பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார்.

"இதுக்கு காரணமே நான் தான்!"

அவர் அப்படிச் சொன்னதும் அனைவரும் சிரித்து விட்டார்கள் "என்ன சார் சொல்றீங்க? கொஞ்சம் விபரமாக சொல்லுங்களேன்" என்று கேட்டவர்களை கையமர்த்தி விட்டுச் சொன்னார்.

எங்க வீட்டுக்கு அருகில் இருக்கானே காளிச்சாமி-அவனாலதான் எனக்கு இந்தக் கதி.....

"அவன் ரொம்ப முரட்டுப் பயலாச்சே....."

"அவன் கிட்ட ஏன் சார் தகராறு வச்சுக்கிட்டீங்க....?"

"நான் தான் சார் தகராறு பண்ணினேன் அவன் என் கிட்ட வந்து "சார் நான் ஒரு ஆண் குழந்தைக்கு அப்பா ஆகியிருக்கேன்னு சொன்னான், நானும் பழக்க தோஷத்துல "இதுக்கு காரணமே நான்தான்"னு வாய் தவறி சொல்லிவிட்டேன். புரட்டி எடுத்துட்டான்."

அதைக் கேட்டதும் எழுந்த வெடிச் சிரிப்பு அடங்க வெகு நேரமானது.

# முகங்கள்!

ரம்புக்எலையூரான்

**மே 1995க்கு பின்-**

**ஒரு நாள்,**

"இப்படியே சென்று கொண்டிருந்தால் எமது நாட்டின் கதி என்னாகும்? மக்கள் ஒருவரையொருவர் குண்டு வைத்தும், குண்டு வீசியும், சுட்டும் கொலை செய்து கொண்டு இருப்பதால் என்ன முடிவு வரப் போகிறது? ஓர் இனம் அழிந்தால்தான் இனப்பிரச்சினை தீரும் என நான் நினைக்கிறேன். எந்த இனத்தை அழிப்பது? சிங்களவனையா, தமிழனையா? ஏன் இந்த யுத்தம்? எதற்காக இந்த யுத்தம்? எத்தனை கப்பல்கள், எத்தனை விமானங்கள், எத்தனை படகுகள், எத்தனை கட்டிடங்கள்? இவையெல்லாம் போகட்டும் எத்தனை ஆயிரம் விலை மதிக்க முடியாத உயிர்கள் இந்தப் போரில் இழக்கப்படுகிறது? கெரில்லாக்களை அழிப்பது மிகக்கடினம் என்பதை ஏன் உணர்கிறார்கள் இல்லை." (சிங்களத்தில்) கூறிவிட்டு கவிராஜின் முகத்தை பார்த்தான் தேசப்பிரிய. கவிராஜ் மேலும் கீழும் தலையை ஆட்டினான்.

"நாடு சுதந்திரம் பெற்றது முதல் எமது தலைவர்கள் செய்த தப்புக்கள் தான், இன்று நாம் அனுபவிக்கின்றோம். பெரும்பான்மையென்றும், சிறுபான்மையினர் என்றும் பேதங்கள் இல்லாமல் எல்லோரும் இந்நாட்டு மக்கள், இலங்கையர், என்ற நிலையில், எல்லோருக்கும் எல்லா உரிமையும் உண்டு என்ற ரீதியில் இங்கே நாம் வாழ்ந்தால் இந்த நாடு உண்மையிலேயே ஒரு தர்ம தீவாக இருக்கும்." சிகரட் பில்டரை தரையில்



போட்டு காலால் கசக்கிவிட்டு, இருக்கையை விட்டு இருவரும் எழுந்து 'கென்ரீனை' விட்டு வெளியே வந்து தத்தமது பணிகளைக் கவனிக்கச் சென்றனர்.

தன்னோடு இத்திணைக்களத்தில் வேலை செய்யும் தேசப்பிரிய போன்ற எண்ணமுடையோர் இந்நாட்டில் இருந்தால் பிரச்சினையே வந்திருக்காது. மனதில் நினைத்துக் கொண்டான் கவிராஜ்.

**ஒக்டோபர் 1995 -**

**ஒரு நாள்,**

"என்னப்பா கவி முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிறாய்? புலிகளுக்கு நல்லாப் படுகுதாமே, பிரபாகரன் ஓடி விட்டாராமே? எல்லாவற்றுக்கும் ஓர் அளவு உண்டு, சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை அடக்க வந்தால் இப்படித்தான் நடக்கும். நாங்கள் கொடுப்பதை பெற்றுக் கொண்டு சிறுபான்மையினர் திருப்திப்பட வேண்டும். இது எங்கள் நாடு, உங்களுக்கென்று பக்கத்திலே பெரியதொரு நாடு இருக்கிறது. நீங்கள் அங்கே ஓடலாம். நாங்கள் எங்கே போவது? இன்றைக்கு ஈழம் என்பீர்கள், நாளைக்கு மலை நாடு என்பீர்கள், அதன் பின்னர் முஸ்லிம்கள்....... இப்படி ஆளுக்கு ஆள் பங்கு போட்டால் இந்தச் சின்ன சிங்களத் தீவு என்ன ஆவது? அன்று முதலே சிறுபான்மையினர் எமது நாட்டை சுரண்டுகின்றனர். நாம் அவர்களுக்கு அடிமைப்பட்டு வாழ வேண்டியுள்ளது. அதனால் சிறுபான்மையினருக்கு உள்ள உரிமைகள் வரையறைக்குட்பட்டதாக இருக்க வேண்டும்." என்றான் தேசப்பிரிய.

எனக்குத் தலை சுற்றியது.

எதிரே ஒருவர் பத்திரிகை வாசிக்கிறார், அதன் தலைப்புச் செய்தி "அரச படை முன்னேறுகிறது, புலிகளுக்கு படு தோல்வி"

தேசப்பிரியாவின் மனமாற்றத்திற்கு காரணம் புரிகிறது.

அவனின் நிஜம் பளிச்சிடுகிறது.

எதிர்காலம்.........?



படிப்பகம்



# இலக்கிய நயம்

## தருவது-ரசிகன்

# ஆசிரம ராச்சியம்

மன்னனுக்கு மகா வியப்பு. வியப்புக்குக் காரணம் இந்திரசுவாமிகள்.

"மன்னா! உன் கைரேகைகளில் ஆயுள் ரேகை கெட்டியாக இருக்கிறது. அதிஷ்ட ரேகையோ அதைவிடக் கெட்டியாக இருக்கிறது. இந்தப் புவியைக் கட்டியாளும் வலிமை உன்னிடம் இருக்கிறது. பகைவர்கள் பெட்டிப் பாம்பாக அடங்கிப் போவார்கள் உன் திறமையின் முன்னால் என்பது என் ஞானக் கண்ணுக்கு தெரிகிறது."



மன்னன் மணிமுடிச் சோழன் மகிழ்ந்து போனான்.

எட்டடி உயரத்தில், தீர்க்கமான பார்வையுடைய விழிகளோடு, நீண்ட முடியும், நிறைவான தாடியுமாய், வயதை வெல்லும் இளமையோடு மன்னனைப் பார்த்து தாடிக்குள் புன்னகைத்தார் இந்திர சுவாமிகள்.

மன்னன் தன் கணிப்பில் மயங்கி விட்டான் என்பதை ஒரு பார்வையால் உள்வாங்கிக் கொண்டார் சுவாமிகள்.

மன்னா என்று அழைத்தவர் இப்போது மகனே என்று அழைக்கத் தொடங்கினார்.

"மகனே! ஈரேழு லோகங்களும் நீ ஆள வேண்டும் என்பதற்காகவே காத்திருக்கின்றன. வளம் உண்டு. படை பலம் உண்டு. வீரம் உண்டு. வியூகம் வகுத்து எதிரியைப் பந்தாடும் விவேகமும் உண்டு. இன்னொன்றும் உண்டு. உரைக்கவா, என் உள்ளத்திலேயே ஒளித்து வைக்கவா சொல் மகனே!"

மன்னனுக்கு அறியும் ஆசை. "சொல்லுங்கள் சுவாமிகளே அறியும் ஆவல் அலை கடலாய் எழுகிறது என் உள்ளத்தின் உள்ளே."

"உனக்கு கன்னிராசி மகனே"

"அல்லவே, கர்க்கடக ராசியல்லவோ நான்!"

மன்னன் பதற, சுவாமிகள் தனது ஒளிரும் விழிகளை மூடித் திறந்தார். உதட்டில் ஒரு சின்னக் குறும்புப் புன்னகையைச் சுமந்திருந்தார்.

"நான் சொன்னதை நன்றாக விளங்கிக் கொள்ளவில்லை நீ. கட்டழகுப் பாவையர் உன்னை வட்டமிடுவர். அவர் கொட்டித் தரும் இன்பக் கடலில் நீ கொட்டமடிப்பாய். தட்டுத் தடுமாறி அந்த மஞ்சம் துடிக்கும்!"

மன்னன் வெட்கப்பட்டான். சுவாமிகளின் காலடியில் மண்டியிட்டான்.

மண்டியிட்ட முடி தொட்டு சுவாமிகள் ஆசி வழங்கினார்.

"என்ன வரம் வேண்டும் கேள்? வெற்றிக் கனியை உண்ணும் வரம் வேண்டுமா? சிற்றின்ப வெள்ளத்தில் தினம் தோயும் தெய்வீக மூலிகை வேண்டுமா?"

"இரண்டும் வேண்டும்!"

"ஆனாலும் மன்னா உனக்கு ஆசை அதிகம். தருகிறேன், இரண்டும் தருகிறேன்."

மன்னன் கரை காணா மகிழ்வில் காணாமல் போனான்.

"சுவாமிகளுக்கு இந்த அடிமை என்ன காணிக்கை தரவேண்டும் சொல்லுங்கள்!"

"கேட்டுத் தருவதல்ல மகனே காணிக்கை. தவிரவும், பற்றில்லாத எனக்கு எதையும் பெற்றுக் கொள்ளும் ஆசையுமில்லையப்பா!"

சுவாமிகள் இரு கைகளையும் தட்டி ஓசையெழுப்பினார்.

மன்னனுக்கு அதன் காரணம் புரியவில்லை. காதில் விழுந்தது சலங்கை ஒலி.

சுவாமிகளின் அழைப்போசைதான் அந்தக் கரவோசை.

கரவோசை கேட்டு சிலம்போசையோடு வந்தவள் கோலம் கண்டு, மூர்சித்துப் போகாமல் மன்னன் தப்பியது ஆச்சரியம்.

அழகியென்றால் எப்படியென்று உவமை சொல்லத் தேவையில்லை, அவள் உருவே சாட்சி சொல்லும்.

சிற்றிடை அசைய, சில்லென்று ஒரு புன்னகை செவ்விதழில் விரிய, மொட்ட விழாத தாமரை அரும்புகளாய் நெஞ்செழில்கள் நிமிர்ந்திருக்க, மலைகளையடுத்துள்ள சுனையாக வயிற்றில் ஒரு சுழியிருக்க, மன்னவன் உயிர் சுண்டியிழுக்கப்பட்டது. மெல்ல, மெல்ல சுய நினைவை இழந்து கொண்டிருந்தான் மன்னன்.

சுவாமிகளுக்கு மன்னன் நிலை புரிந்தது. ஒரு குறும்புப் புன்னகை உதட்டில் அரும்பி மறைந்தது.

"என் குடிலில் ஏழு நாட்கள் தங்கியிருக்கப் போகிறாய் நீ. வேள்வி முடியும் வரை நீ தூங்குவதும் தெய்வக் குற்றம் மகனே."

"என்னது, ஏழு நாட்களுக்கு தூங்காமல் தொடர்ந்திருக்க வேண்டுமா?"

மன்னவன் குரலில் இயலாமை எட்டிப் பார்த்தது. சுவாமிகள் புன்னகைத்தார்.

"கிடைக்கப் போவது ஈரேழு லோகங்கள். அதற்காக நீ இழக்கப் போவது ஆகமொத்தம் ஏழே ஏழு நாள் தூக்கம்."

"என்னால் முடியுமா?"

"உன்னால் மட்டும் முடியாது. அதற்காகத்தான் இந்தக் கனிகையைக் காணிக்கை தருகிறேன். துணையாக இருப்பாள். நீ துடிப்பான ஆண்மகன். அதனால் தூங்கவே மாட்டாய்."

மன்னனுக்கு இப்போது ஆனந்த ஆச்சரியம். ஈரேழு லோகம் கிடைக்காமல் போனாலும் இனிக் கவலையில்லை என்று மனது சொல்லித் துடித்தது.

நிலவு ஒளி வீச, குடிலின் மஞ்சத்தில் அழகியின் நெஞ்சமே தஞ்சம் என்று கிடந்தான் மன்னன்.

அவன் மார்பு வருடி, தலைமுடி கோதி, நெற்றியில் இருந்து தொடங்கி, உதடுவரை தன் இதழ்களால் ஈர முத்திரை பதித்துக் கொண்டு வந்து, உதட்டில் மட்டும் முத்திரையிடாமல் சட்டென்று இதழ் விலக்கி, மீண்டும் நெற்றியில் இருந்து ஆரம்பித்து, மீண்டும் முன்புபோல் அவன் உதடுகளை ஏமாற்றி, தாகத்தில் அவன் துடிப்பதை ரசித்தாள் அந்த வித்தைக்காரி.

ஏங்கவைத்தால்தான் மதிப்பு. உடனடியாகவே இன்பத்தில் தோய்த்து விட்டால் இருக்காது சிறப்பு. காமன் கலையில் சுவாமிகள் சொல்லிக் கொடுத்த வித்தை அது.

"அருகில் வந்து நழுவி ஓடும் தேனருவி. முட்ட வந்து கிட்ட விலகும் மலையெழில்கள். தாங்க வரும் மாயம் காட்டி தள்ளி நின்று ஏங்க வைக்கும் பருவ நிலா."

மன்னன் கவிஞனானான். அழகி கள்ளியானாள். மொத்தமாய் கிள்ளாமல், கொஞ்சம் கொஞ்சமாய் மன்னன் உயிரைக் கிள்ளியெடுத்துக் கொண்டிருந்தாள்.

"தேகம் சூடேறும். தேவசுகம் ஊறும். மாயம் இதுவென்று மஞ்சம் தடுமாறும். காயமே இது பொய் என்று சொன்னவன் எந்தச் சித்தன்? காயம் இது மெய், காயம் முழுக்க களிப்பு ஊறுவதும் மெய்! ஞானக் கண் வேண்டாம், நாலாயிரம் கண் வேண்டும்! காணக் கிடைக்காத காவியத்தை, கட்டழகுச் சித்திரத்தை முற்றிலுமாய் நான் காண நாலாயிரம் கண் வேண்டும்"

மன்னவன் மதியை அழகென்னும் வலை விரித்து பிடித்துக் கொண்டாள்.

மறுநாள் இந்திர சுவாமிக்கு தான் ஆளும் பூமியில் பாதியை எழுதிக் கொடுத்தான் மன்னன்.

அதுமட்டும் போதுமா. சுவாமிகளா கொக்கா?

நாட்கள் ஏழில் நங்கையின் நயனம் விந்தைகள் புரிந்தது. மஞ்சத்தில் புரிந்த நளினம் மன்னவன் நெஞ்சில் சுவாமிகள் மீது நன்றியை வளர்த்தது.

இப்போது பெயருக்குத்தான் அவன் மன்னன். பேரதிகாரம் முழுக்க சுவாமியின் கையில் இருந்தது.

ஆட்சியதிகாரம் ஆசிரமம் நடத்தும் சுவாமியின் மொத்தக் குத்தகையாய் மாறிப் போனது.

ஈரேழு லோகம் எங்கே? கேட்கும் நிலையில் மன்னன் இல்லை. இன்ப வெள்ளத்தில் மிதந்தால் போதும். இதழ் தரும் சுகத்தில் தோய்ந்தால் போதும். கொடியிடை தழுவிக் கிடந்தால் போதும்.

கூடி மயங்கி மஞ்சத்தில் துவண்டு கிடந்த மன்னனுக்கு பாதி இரவில் விழிப்பு வந்தது. பக்கத்தில் தேடினான் பாவையைக் காணவில்லை.

எழுந்து நடந்து வெளியே வர எதிரில் சுவாமியின் குடிலில் 'களுக்'கென்று சிரிப்பொலி. புத்தியில் ஒரு மின்னல் பொறி.

எட்டி நடந்து குடிசை நெருங்கி தெரிந்த இடுக்கில் விழிகளைப் பொருத்தினான்.

அவன் மஞ்சத்தில் தேடிவிட்டு வந்த வீணை இந்திர சுவாமிகளால் மீட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

சுவாமிகள் சுரம் மீட்டிக் கொண்டே சொன்னார், "உன் எழில் முட்டாள் மன்னனைக் கட்டிப் போட்டதில் ஆச்சரியமில்லை. பெண்ணே! உனக்கு காளை ராசி. நீ அம்பு. உன்னை எய்து கொண்டேயிருக்கலாம். மன்னர்கள் என் காலடியில் வீழ்ந்து கொண்டேயிருப்பார்கள்."

மன்னன் சிலையானான். மனச்சாட்சி சிரித்தது.

**"நடக்க முடியாத காரியத்தை நடத்தி முடிக்கிறேன் என்று நாவினிக்கப் பேசுவதும், நடக்கக் கூடிய காரியத்தை நடத்தி முடிக்காமல் நாட்களை தள்ளிப்போடுவதும் வாழ்நாளை வாடச் செய்துவிடும். அவ்வாறு இருப்பதும் தவறு. அவ்வாறானவர்களோடு நட்புக் கொள்வதும் தவறு."**

**செய்யாத செய்துநாம் என்றலும் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக் கொண் டோட்டலும்-மெய்யாக
இன்புறூஉம் பெற்றி இகழ்ந்தார்க்கும்-அந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும்.**

நாலடியார் (பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று.)

பெற்றி=பெருமை, செயல்

## சிந்தியா பதில்கள்

**என்ன சிந்தியா, தமிழக முதல்வர் 5 ஆயிரம் ஜோடிகளுக்கு திருமணம் நடத்துவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

சி.மார்ட்டின்-நீர்கொழும்பு.

*ஆயிரம் பொய் சொல்லியும் ஒரு கல்யாணத்தை நடத்திவைக்கலாம் என்பது பழமொழி. ஒரு கல்யாணத் தவறை மறைக்க ஆயிரமாயிரம் கல்யாணங்களை நடத்திவைக்கலாம் என்பது புதுமொழி.*

▫▫

**புதிதாக வெளியாகியுள்ள திரைப் படங்களின் பெயர்களைக் கூறுங்கள் பார்க்கலாம்?**

செல்வி க.இந்திராணி-தெஹிவளை.

*சீதனம், மாமனிதன், ஆயுதபூஜை, வீராதிவீரன்.*

▫▫

**டியர் சிந்தியா! மனிதனுக்கு எதில் நம்பிக்கை இருக்க வேண்டும்?**

எஸ்.கருணாகரன்-அப்பர் கலஹா.

*உண்மை-உறுதி-உழைப்பு.*

▫▫

**திரைப்படக் காதல் வாழ்க்கைக்கும், நடைமுறை காதல் வாழ்க்கைக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?**

க.சுதர்சன்-செங்கலடி.

*பல உண்டு. அதில் ஒன்று-திரைப்படக் காதலன் மரங்களையும், காதலியையும் சுற்றி டூயட் பாடிக் கொண்டிருப்பான். நடைமுறைக் காதலன் காதலியை மட்டுமே சுற்றிக் கொண்டு சில சமயம் டூப் விட்டுக்கொண்டிருப்பான். 'நோ டூயட்!'*

▫▫

**யாழ் நகரில் படையினர் கொடி ஏற்றுவது குறித்து வெளியான செய்திகள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

ஆர்.சந்தானம்-கொழும்பு-5.

*நடப்பது உள்நாட்டுப் போரா? நாடுகளுக்கிடையிலான போரா? என்று.*

▫▫

**டியர் சிந்தியா! அரசியல் பற்றி அலட்டிக் கொள்பவரிடம் எதைக் கேட்கலாம்?**

கோ.ரகு-குருமன்காடு.

*அரசியல் என்பது சாக்கடையல்ல என்பதை தகுந்த உதாரணங்களுடன், அறுவை கலக்காமல்-சுருக்கமாக விளக்குக என்று கேட்கலாம்.*

▫▫

**நம் ஜனாதிபதிக்கு பிடித்த திரைப்படம் என்ன?**

எஸ்.ரஞ்சித்குமார்-தெனியாய.

*'பூ ஒன்று புயலானது'*

▫▫

**துன்பத்தைப் போக்க எதை ஈடுகொடுக்க முடியும்?**

எம்.ஏ.நஸீரா-அக்கரைப்பற்று.

*மன உறுதியை!*

▫▫

**உலகில் குடிசைகளே இல்லாத செல்வந்த நாடுகளே இல்லையா சிந்தியா?**

என்.சண்முகநாதன்-அப்புத்தளை.

*இருக்கிறதே: 'பங்களா, தேஷ்' (எங்கேயோ கேட்ட கடி ஜோக்)*

▫▫

**அப்பாவி சிங்கள மக்கள் கொல்லப் பட்டதை கண்டிக்காமல் விட்டது பக்க சார்பா, இனவாதமா?**

எம்.எச்.எம்.தௌபீக்-கின்னியா.

*உயிரபிமானம்.*

▫▫

**இந்தியாவும்-நியூசிலாந்தும் மோதிக் கொண்ட 5வது ஒருநாள் போட்டியைக் கவனித்தீரா? உமது அபிப்பிராயம்?**

வி.ஜெகசோதி-கொழும்பு-11.

*இந்திய அணியின் பொறுப்பற்ற தனத்துக்கும், தன்னம்பிக்கையை சரியான தருணத்தில் தவறவிடும் தன்மைக்கும் நல்ல உதாரணம். நினைத்தால் இந்தியா அன்று ஜெயித்தும் இருக்கலாம்.*



**தமிழ் நாட்டில் மீண்டும் புலிகளுக்கு சார்பான அலை எழுகிறதல்லவா?**

கு.அமுதன்-மட்டக்களப்பு.

*குரல்கொடுத்துள்ள தலைவர்களில் வை.கோ.உட்பட-எவருமே புலிகளுக்கு சார்பாக நேரடியாகப் பேசத் தயங்குவதைப் பார்த்தால் அப்படிச் சொல்ல முடியவில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு சார்பான அலைதான் தற்போது எழுந்துள்ளது.*

▫▫

**தற்போது யாழ்ப்பாண மக்களின் நிலையைப் பற்றி சில வரிகள் சொல்லுவீர்களா?**

பி.யோகேஸ்வரி-அப்புத்தளை.

*"எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி, அங்கே நமக்கோர் இடம் வேண்டும்....."*

▫▫

**இறுதியாக வீழ்ந்த 'அன்டநோவ் வீழ்ந்ததா, வீழ்த்தப்பட்டதா?**

மா.ரம்சி-கந்தப்பளை.

*வீழ்த்தப்பட்டது என்றால் புலிகள் நிச்சயம் உரிமை கோரியிருப்பார்கள். வை-8 வீழ்ந்ததுக்கு உரிமை கோரியிருந்தார்கள் அல்லவா?*

▫▫

**சினிமா தணிக்கைக் குழுவினரால் சில படங்கள் தாமதமாவதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

கே. பிரகாஷ்-கண்டி.

*சமீபத்தில் இந்திய சஞ்சிகை ஒன்றில் வந்த ஜோக் ஞாபகம் வருகிறது.*

*"சென்சார்லேந்து உங்க படத்தை வாங்க லேட்டாகுதே ஏன்?"*

*"படம் ரொம்பக் கவர்ச்சியா இருக்கிறதால இன்னொரு தரம் பார்க்க ஆசைப் படறாங்களாம்."*

## குறுக்கெழுத்துப் போட்டி இல-129

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | ■ | 2 | | 3 | |
| 4 | | 5 | | ■ | | ■ |
| | ■ | 6 | | | | |
| | ■ | | | ■ | | ■ |
| 7 | 8 | | ■ | 9 | ■ | 10 |
| | | ■ | 11 | | | |
| ■ | 12 | | | | ■ | |

### இடமிருந்து வலம்

01. அழகிய மலரை அநாவசியமாகப் பறிக்க முயலுபவர்களை எச்சரிக்கும்.
02. தமிழர்களுக்கு மட்டுமே உரிய உறவு முறைச்சொல், வேற்று மொழிக்காரர்களின் வாயில் புகுந்து விளையாடுகிறது.
04. ஆடவரைக் கவர்ந்திழுக்கும் காந்த சக்தி இதற்குண்டு.
06. தடைபெறக்கூடாத ஒரு காரியம் நடந்து விட்டால் இதன் மீது பழி சமத்துபவரும் உண்டு.
07. தாயிடமும் தாரத்திடமும் அகப்பட்டுத் திணறும் குடும்பத் தலைவனை இதற்கு ஒப்பிடுவதுண்டு.
11. முரசில் இவர்களுக்கென தனியானதொரு சாலை இருக்கிறது.
12. எம்மவரின் உறைவிடம்.

### மேலிருந்து கீழ்

01. இதனை நிர்ணயிக்க நாள்-கோள்-நட்சத்திரங்களின் நடமாட்டம் பற்றிய கணக்கு அவசியம்.
02. எவரையும் மயக்கும் சக்தி படைத்தது.
03. சிலருக்கு இது பாதகமாக அமைந்தால் துன்பம்தான்.
05. வடக்கே நடைபெறும் சம்பவங்களின் உண்மையான இது எதுவோ தெரியவில்லை.
08. புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் 'வேரில் பழுத்த பலா' என்று குறிப்பிட்டுள்ளார்.
09. சுவைதான்! சிறப்பாக அமைந்தால் மதிய உணவின் சுவையும் அதிகரிக்கும்.
10. எமது நாட்டின் பிரச்சனைக்கு சுமூகமான முடிவு ஏற்பட இது அவசியம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 09.12.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-129
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-127ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வா | ன | 2 வி | ல் | ■ | ■ | 3 த |
| ய் | ■ | ர | 4 கா | 5 த | ல | ர் |
| மை | 6 ய | ல் | ■ | பே | ■ | ம |
| ■ | ந் | ■ | 7 வி | லா | 8 ச | ம் |
| 9 அ | தி | கா | ரி | ■ | மி | ■ |
| மு | ர | ■ | 10 ச | வு | க் | கு |
| 11 து | ம் | ம | ல் | ■ | 12 கை | தி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 127இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. ஏ. ஷாஜகான், கொழும்பு - 13
2. ரி. ஜெகதீஸ்வரன், புசல்லாவ.
3. வினிபிறீடா இராசேந்திரம், மூதூர்-7.
4. செல்வி. றுமைஸா பாஹிம், காத்தான்குடி.
5. எம். பிர்தௌஸ், நாவலப்பிட்டி.
6. கே. சோதிப்பிரகாசம், மட்டக்களப்பு.
7. செல்வி.எஸ். மலர்விழி, கம்பளை.
8. திருமதி. சியாமா சித்தீக், உக்குவளை.
9. ஆர். ராஜேந்திரன், வவுனியா.
10. கே. சூரியகுமார், பொகவந்தலாவ.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 9

## "கைவண்ணம் அங்கு கண்டேன்.....! ....கால் வண்ணம் இங்கு கண்டேன்"

அமரரிடர் தீர்க்க அவதரித்த இராம பிரான் விசுவாமித்திரர் கூறியபடி அக்கல்லின் மீது தன் கால்களை வைத்ததும் அதிசயம் நிகழ்ந்தது. அந்தக்கல் அழகியதோர் இளமங்கை உருவானது. இக் காட்சியைக் கண்ட இராமனும் இலக்குவனும் திகைப் படைந்தனர். முற்றுமுணர்ந்த முனிபுங்கவர் தனது அருட்பார்வையால் அம்மங்கையையும் இராமனையும் ஆசீர்வதித்தார்.

"இராமா! கவுதம மாமுனிவரின் தர்ம பத்தினியான அகலிகை தான் இம்மாதரசி. கணவர் கவுதமரின் சாபத்தினால் ஆயிரம் வருடங்கள் கருங்கல்லாகக் கிடந்தாள். அதி உத்தமனான உன் திருவடிகள் பட்டமையினால் இன்று சாப விமோசனம் பெற்றாள்" என்றார்.

அகலிகைக்கு அவள் கணவனால் இத்தகைய கொடிய தண்டனை கிடைக்கக் காரணம் என்ன என்பதனை அறிய இராமச்சந்திரனுக்கும் இலக்குவனுக்கும் ஆசை உண்டாயிற்று. அவர்களின் அவாவினை உணர்ந்த மாமுனிவர் விசுவாமித்திரர், அகலிகையின் கதையினைக் கூறலானார்.

### அழகின்மையே இல்லாத அரும் படைப்பு

படைத்தல் கடவுளான பிரம்ம தேவன், தான் படைத்த அழகிய உயிரினங்கள் அனைத்தையும் விட மிகவும் அழகான ஒரு பெண்மணியைப் படைக்க விரும்பினார். மூவுலகிலுமுள்ள அழகிகள் ஒவ்வொருவரிடமும் காணப்படும் பிரதான அழகு அம்சங்கள் அத்தனையையும் ஒன்று திரட்டி அதி அற்புதமான அழகியை உருவாக்கினார், 'அழகின்மையே இல்லாதவள்' என்ற கருத்துக்கமைவாக 'அஹல்யா' என்ற பெயர் அவளுக்குச் சூட்டப்பட்டது. உரிய பருவமடைந்த இப்பேரழகி, தனக்கே ஏற்றவள் என்று தேவர்க்கரசனான இந்திரன் கருதினான், எப்படியாவது அகலிகையை அடையத் துடித்தான்.

இந்திரனின் எண்ணம் பிரம்மாவுக்கு ஏற்புடையதாயில்லை. மாபெரும் தவசியும் மிகவும் கட்டுப்பாடான பிரம்மச்சரியத்தை அனுஷ்டித்தவருமான கவுதமரிடம் அகலிகையை பிரம்ம தேவன் ஒப்படைத்து, ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் தன்னிடம் அனுப்பி வைக்கும்படி கூறினார். அதன்படி அகலிகை கவுதம முனிவரின் ஆசிரமத்தில் தங்கி அவருடைய தவ வாழ்க்கைக்கு உதவினாள். உரிய காலம் வந்ததும் கவுதமர் பிரம்மனிடம் அகலிகையை ஒப்படைத்தார். அத்தகைய அழகியை எத்தகைய களங்கமும் ஏற்படாதவாறு காத்துவந்த கவுதமருக்கே அகலிகையை பிரம்மன் மணம் முடித்து வைத்தார். இதனால் இந்திரன் ஏமாற்றமடைந்தான். தான் ஆசை வைத்த அழகி தனக்குக் கிட்டாமல் கானகத்தில் தவம் செய்யும் ஒரு முனிவனுக்குக் கிடைத்து விட்டதே என்ற பொறாமைத் தீயால் பொசுங்கினான்.

தேவருலகவாசிகள் தீதறியாதவர்கள் என்பது தான் பொதுவான கருத்து. இருப்பினும் அவர்களும் ஆசாபாசங்களுக்கு ஆட்பட்டு அதனால் பெரும் அபகீர்த்தி அடைந்த கதைகளும் புராண- இதிகாசங்களில் காணப்படுகின்றன. தேவர்கோன் இந்திரன் தன்னுடைய காம வேட்கையைக் கட்டுப்படுத்த மாட்டாமல் களங்கப்பட நேர்ந்த கதை இது.

அழகி அகலிகை மீது தான் வைத்த இச்சையை ஒரு நாளாவது தணித்து விட வேண்டும் என்று இந்திரன் சந்தர்ப்பம் பார்த்திருந்தான். கவுதமரும் அகலிகையும் நடத்திய உயர்தரமான வாழ்க்கை நெறியினை சிதைத்து-அந்த வட்டத்துக்குள் புகுவதற்கு இந்திரனால் முடியவில்லை. உரிய காலம் வரை காத்திருந்தான்.

ஒவ்வொருநாளும் அதிகாலையில் முதல் சேவல் கூவும் வேளை துயிலெழும் கவுதமர், ஆசிரமத்துக்குச் சற்றுத் தொலைவிலுள்ள நீர் நிலைக்குச் சென்று நீராடிவிட்டு, பூசைக்குரிய திரவியங்கள் மற்றும் பூ முதலான பொருட்களையும் சேகரித்துக் கொண்டு திரும்புவது வழக்கம். இந்த இடைவெளியைத் தன் இச்சையினைத் தீர்ப்பதற்குப் பயன் படுத்துவதே இந்திரனின் திட்டம்.

ஒரு நாள், முதல் யாமக் கோழி கூவுவதற்கு சில நாழிகைக்கு முன்பாகவே இந்திரன் கவுதமரின் குடிசையை அணுகி சேவல் கூவுவதுபோல் கூவினான். உண்மையை உணராத முனிவரோ, உண்மையாகவே சேவல் கூவிவிட்டது என்று கருதி நீர் நிலை நோக்கிப் புறப்பட்டார். இதனை எதிர்பார்த்த இந்திரன், கவுதம முனிவர் போன்று தன் உருவினை மாற்றிக் கொண்டு குடிசைக்குள் சென்றான்.

நீராடச் சென்ற கணவன் திடீரென திரும்பி வருவதைக் கண்டு அகலிகை திகைப்புற்றாளெனினும் முனிவரின் உருவில் வந்தவன் நடந்துகொண்ட முறையினை அவதானித்தாள்.

மன்மதன் பாணம் மனிதர்மீது மோதுவதற்குக் காலநேரம் கிடையாது. தனது கணவனும் காமன் கணைபட்டமையினால் தான் ஓடோடி வந்திருக்க வேண்டும் என்று கருதிய காரிகை, கணவனின் இச்சைக்கு இணங்க தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள். இருவரும் ஒருவராகி- இரண்டறக் கலக்கும் போது- தன் கணவனாக வந்தவன் உண்மையில் வேறொருவன் என்பதைக் கண்டு கொண்டாள். அதுவும் தேவர்க் கதிபனான இந்திரனே தன் மீது இச்சை கொண்டு வந்திருக்கிறான் என்பதனையும் அறிந்துவிட்டாள். இருப்பினும் அவளால் அப்போது எதுவுமே செய்ய முடியவில்லை.

இதற்கிடையில், தான் தவறான நேரத்தில் எழுந்து காலைக்கடன் முடிக்கக் கிளம்பி விட்டதை முனிவரும் உணர்ந்து, குடிசை நோக்கிப் புறப்பட்டார்.



### மதிகெட்ட இந்திரனுக்கு முனியிட்ட சாபம்

இந்திரன் தன் காம இச்சையைத் தீர்த்து குடிசையை விட்டு வெளியேறும் அதே காலகட்டத்தில் வெளியே கவுதமர் வந்து கொண்டிருந்தார். உடனடியாக தன் உருவை மாற்றி பூனை வடிவெடுத்தான் இந்திரன். அந்த ஆசிரமத்தில் என்றுமே தென்படாத பூனை ஒன்று அன்று கண்ணில் பட்டதும் கவுதமர் தடுமாறினார். முற்றுமுணர்ந்த அம் மாமுனிவருக்கு முழு உண்மையும் புலனாகி விட்டது. தேவருலகத்துக்கதிபதியே இத்தகைய தீய செயலைப் புரிய முன்வந்தமை முனிவரின் கோபக் கனலை கொழுந்து விட்டெரியச் செய்தது. பூனை உருமாறி இந்திரன் முனிவர் முன் அவமானத்தால் அடங்கி ஒடுங்கி நின்றான். இடக் கையிலிருந்த கமண்டலத்திலிருந்து தண்ணீரை வலக்கரத்தில் ஊற்றிய வண்ணம் "காமவெறி தலைக்கேறி, மாற்றான் மனைவி மீது இச்சை கொண்டு கருத்திழந்த கயவனே! உன் உடலெல்லாம் ஆயிரம் குறிகள் உண்டாகட்டும். அண்டசராசரம் அனைத்தும் உன் இழிசெயல் கண்டு உன்னை இழிந்துரைக்கட்டும்." என்று நீரை இந்திரன் மீது தெளித்துச் சாபமிட்டார். அக்கணமே இந்திரனின் உடலெங்கணும் யோனிக் குறிகள் தோன்றின.

தனது பத்தினியான அகலிகையை கல்லாகுமாறு கவுதம மாமுனிவர் சபித்ததும் அவள் உடனே கல்லாகவே மாறினாள். "ஆயிரம் ஆண்டுகள் கருங்கல்லாகவே கிடப்பாய். அதன் பின் தசரத குமாரனான இராமனின் காலடி பட்டதும் உன் சுய உருவம் பெறுவாய்," என்பதுதான் கவுதமரின் சாபம்.

"இராமா! கவுதமரின் தர்ம பத்தினியானவள் உண்மையில் ஒரு கற்புக்கரசி. ஆனால் கபட நாடகமாடிய காமுகனால் சுய நிலை இழந்துவிட நேர்ந்தமையினால் குற்றத்துக்கு உடந்தையாகிப் போனாள். அதனால் இத்தகைய கொடிய தண்டனை பெற நேரிட்டது." இவ்வாறு கூறியதும் அகலிகையின் கால்களைத் தொட்டு இராமனும் இலக்குவனும் வணங்கினர்.

இந்நிகழ்ச்சி நடைபெறுவதை உணர்ந்த கவுதமரும் அங்கு வந்து சேர்ந்தார். தான் கொடுத்த சாபம் நீங்கிய அகலிகையை தம்முடன் சேர்த்துக் கொண்டார். அதிதிகளாக அவ்வாசிரமத்துக்கு வந்து சேர்ந்த விசுவாமித்திர மாமுனிவருக்கும் இராம-இலக்குவனுக்கும் அதிதி பூசை செய்து உணவளித்து அகலிகை உபசரித்தாள். அவர்களுடன் வந்திருந்த ஏனைய முனிவர்களும் உபசாரங்களை ஏற்றனர்.

### கால் வண்ணமும் கைவண்ணமும்

அகலிகையின் கதை பற்றி கவிச்சக்கர வர்த்தி கம்பன் கூறிய கருத்துக்களையே இங்கு தந்தோம். வால்மீகி முனிவர் கூறிய கருத்துக்களில் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. இக் கட்டத்தை விசுவாமித்திரர் வாயிலாக வெளிப்படுத்தும் கம்பநாடார், மிக அற்புதமான பாடலைத் தந்துள்ளார்.

இராமனைப் பாராட்டுவதாக அமைந்துள்ள அப்பாடலில் தாடகை வதத்தினை இராமனின் கை வண்ணமாகவும் அகலிகை சாப விமோசனத்தை இராமனின் கால் வண்ணமாகவும் கம்பர் வர்ணித்துள்ள முறை தனிச் சிறப்பு வாய்ந்த தொன்றாக விளங்குகிறது.

**இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்;**
**இனி, இந்த உலகுக்கு எல்லாம்**
**உய் வண்ணம் அன்றி, மற்று ஓர்**
**துயர் வண்ணம் உறுவது உண்டோ?**
**மை வண்ணத்து அரக்கி போரில்,**
**மழை வண்ணத்து அண்ணலே! உன்**
**கை வண்ணம் அங்கு கண்டேன்;**
**கால் வண்ணம் இங்கு கண்டேன்.**
(பால காண்டம்: 475)

### இராஜகுமாரன்

*பொருள்:*

நடைபெறவேண்டிய முறைப்படி நடந்து முடிந்திருக்கிறது. ஆதலால் இந்த உலகுக்கு இனிமேல் உய்வே அல்லாமல் துயரங்கள் வந்து சேர முடியுமோ?

மேக வண்ணத் திருமேனியனே! இருண்ட நிற முடைய அரக்கியை நீ அழித்த போது உன் கைத்திறமையைக் கண்டு கொண்டேன்; அதேபோல் (அகலிகையின் சாபத்தினை நீக்கியபோது) உன்னுடைய காலின் மகிமையினை இங்கு கண்டு கொண்டேன்.

### ஏர் முனையில் உதித்த ஏந்திழை

விதேக நாடு வளம் நிறைந்த நாடு. நாட்டின் வளம்போல மக்களின் மனவளமும் வாழ்க்கை வளமும் சிறந்து விளங்கியது.

இந்நாட்டின் தலை நகராகத் திகழ்வது மிதிலை நகர். சனக மாமன்னர் நீதி தவறாது- நேர்மை குன்றாது-தர்மம் தடம் புரளாது ஆட்சி புரிந்து வந்தான். கவுதம மாமுனிவரின் மகனான சதானந்தரே இவ்வரச வம்ச குலகுருவாக விளங்கினார்.

சனக மன்னன் கல்வி கேள்விகளில் சிறந்தவன்; வேத சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவன்; இணையில்லாத வீரனும் கூட, மன்னனாக இருந்தபோதும் பற்றற்ற வாழ்வைக் கடைப்பிடித்தான். தனது நாட்டினதும் உலகனைத்தினதும் நலன்களுக்காகவே பல வேள்விகளை வேத முறைப்படி நடத்தி, ராஜரிஷி என்ற பெயருக்குப் பொருத்தமுடையவனாகவும் விளங்கினான்.

ஒரு முறை வேள்வி ஒன்றினை நடத்தும் பொருட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தை ஏர் கொண்டு உழுது கொண்டிருந்தார் சனகர். அப்போது கொழு முகத்தில்-நிலத்தில் அழுகான பெண் குழந்தை ஒன்று கிடந்தது. ஈடிணையற்ற அழகுடன் திகழ்ந்த அக் குழந்தையை இரு கைகளாலும் தூக்கி எடுத்த சனக மன்னன், அக் குழந்தை பூமாதேவி தனக்கீந்த பெரும்தனம் எனக் கருதி அரண்மனைக்கு எடுத்துச் சென்றான். தனது பட்டத்து ராணியிடம் அக்குழந்தையை கொடுத்து, இறைவனருளால் கிடைத்த அக்குழந்தையே தமது சொந்தப் புதல்வி என அறிவித்து விட்டான். அக்குழந்தைக்கு சீதை என்று நாமம் சூட்டி வளர்க்கலாயினர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சீதை வளர்ந்து எழில் நிறைந்த இளமங்கைப் பருவத்தினை அடைந்திருந்தாள்.

இந்திரன் சபையிலுள்ள மேனகை முதலான பேரழகிகளே பொறாமை கொள்ளும் அளவு மிகச் சிறப்பான எழிலரசியாக சீதை காணப்பட்டாள், அவளுடைய அழகுக்கு உவமை சொல்ல இயலாது. அழகுக்கு உவமையாக இலக்குமியைக் குறிப்பிடுவார்கள். அதே இலக்குமி தேவியே சீதையாக மிதிலை நகரில் வந்து அவதரித்துள்ளாள். சனகனின் மகள் என்பதனால் சானகி (ஜனகன் மகள் ஜானகி என்ற உச்சரிப்பு வடமொழியில் வருகிறது) என்ற பெயரினையும் பெற்றாள்.

மிதிலை மாநகரில் மற்றுமொரு வேள்வியினை நடத்தும் பொருட்டு சகல ஏற்பாடுகளையும் செய்திருந்த சனக மாமன்னன், விசுவாமித்திர மாமுனிவரையும் வேள்வியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார் என்பதனை முன்பே அறிந்திருந்தோம். அகலிகை சாப நீக்கம் பெற்ற பணி முடிவடைந்ததும் இராமனுக்கு தனது நன்றியறிதலைத் தெரிவிக்கும் பணி தனக்கிருக்கிறது. என்பதனை உணர்ந்த விசுவாமித்திரர், இராமனையும் இலக்குவனையும் மிதிலை நகருக்கு தன்னுடன் வருமாறு கேட்டுக்கொண்டார்.

மாமுனிவரும் குழுவினரும் மிதிலை நகரை வந்தடைந்தனர். அந்நகரின் அழகையும் நேர்த்தியான அமைப்பையும் பார்த்து இரசித்து இன்புற்ற வண்ணம் அவர்கள் சென்று கொண்டிருந்தனர். மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் அழகிய பூங்காக்களும் பார்ப்போரைப் பரவசப் படுத்தின. அந்நகரில் வாழும் மாந்தரும் சகல சிறப்புக்களும் பொருந்தியவர்களாகக் காணப்பட்டனர். ஆண்களும் பெண்களுமாக அலையலையாக மக்களனைவரும் வீதிகளெங்கணும் மொய்த்துக் கிடந்தனர்.

காவி கமண்டலங்களுடன் சென்ற முனிசிரேட்டர்களுடன்- விண்மீன்களுக்கு மத்தியில் தண்ணொளி பரப்பும் பூரணசந்திரனைப் போன்ற பேரழகு வாய்ந்த இராமச்சந்திர மூர்த்தியும் இளவலும் வருவதைக் கண்ட மிதிலை நகர் மக்கள் அனைவரும் திகைப் பெய்தி நின்றனர். இத்தகைய பேரழகுடைய இளஞர்களை மிதிலை மாநகரில் இதுவரை எவருமே கண்டதில்லை. ஆண்களும் பெண்களும் மட்டுமல்லாமல், வயதாகி வாடி வதங்கிய வயோதிப ஆண்களும் பெண்களும் கூட இராமனின் எழில் தோற்றம் கண்டு களிப்படைந்தனர்.

பல வீதிகள் வழி சென்ற விசுவாமித்திரரும் குழவினரும் ராஜபாட்டையை அடைந்தனர். அரச குலத்தவருக்குரிய மாளிகைகள் அங்கேதான் உள்ளன. வானைத் தொட்டு நிற்கும் அம்மாளிகைகளை இரு புறமும் கொண்ட அவ்வீதியின் ஓரிடத்தில் செல்லும் போது, முன்சென்ற முனிவர் விசுவாமித்திரர், தன் நடையின் வேகத்தை ஓரளவு குறைத்தார். காரணம் தெரியாமல் உடன் சென்ற இராமனும் இலக்குவனும் முனிவரின் பின்னால் தங்கள் நடையினையும் தளர்த்தினர். இவர்களுடன் அப்பாதையில் விசுவாமித்திரின் சீடர்கள் எவரும் வரவில்லை. தாங்கள் செல்லும் பாதை சரியானதுதானா என்பதை நிச்சயித்துக் கொள்ள-வழிப்போக்கர்கள் எவரையாவது வழி மறித்து-குறிப்பிட்ட ஓரிடத்தைப் பற்றி விசாரிப்பதற்காகத் தாமதிப்பது போல் முனிவரின் செயல் தென்பட்டது.

தயங்கியவர்போல் அவ்விடத்தில் முனிவர் நின்றதும் இராமனும் நின்றான்; உடன் வந்த இலக்குவனும் நின்றான். அவர்கள் வீதியில் நின்ற அதே வேளையில் வலது புறத்து மாளிகையின் உப்பரிகையில் சிலம்பொலி கேட்டது. ஒலி கேட்டதும் தன் ஓரக்கண்களை அத் திசையில் இராமன் செலுத்தினான். கண்கள் அத்திசை திரும்பியதும் அங்கேயே தரித்து நின்றன. கண்கள் மட்டுமா? இராமனின் கருத்தும் கண்களுடன் சேர்ந்து அந்த உப்பரிகையில் கண்ட காட்சியுடன் கலந்து விட்டது.

(தொடர்ந்து வரும்)



**இராமாயணப் போட்டி இல—07**
**பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்**

**சரியான விடை** பிரஹலாதன்

1. சந்தனம் பாத்திமா
தென்மதுரை கீ/பி, நோர்வுட்.
2. திருமதி. செல்வி யோகானந்தன்
3ம் வீதி, ரஜகஹவத்த, புத்தளம் வீதி, சிலாபம்.
3. தில்ஷா-ஏ.வாஹிட்
62/W முஸ்லிம் கொலனி, கதுறுவெல, பொலனறுவ.
4. செல்வி. சி. கனகரஜனி
C/O ரன்ஜித் குனவர்தன, மல்லாந்த, நாவலப்பிட்டி.
5. வினிபிறீடா இராசேந்திரம்,
மின்சாரநிலைய வீதி, மூதூர்-07..

**இராமாயணப் போட்டி 09**

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:- அகலிகைக்கு சாபமிட்டவர் யார்?**

டிசம்பர் 09ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:09.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல- 1772
கொழும்பு.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (PRO/7/95)
www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
பெணகளின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
4 3 6 3 3 1
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு



அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
3 3 2 0 3 3
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

## இரு வல்லவர்கள்

இருவரும் சர்வதேசமெங்கும் பலகோடி ரசிக மகாஜனங்களை வளைத்துப் போட்டிருக்கும் பிரபலங்கள். ஒருவர் மைக்கேல் ஜாக்சன் மற்றவர் ஹொலிவூட் சூப்பர் ஸ்டார் சில்வஸ்ரர் ஸ்ரலோன்.

மைக்கேல் ஜாக்சனுக்கு வளைந்து நெளியும் அவரது உடலும், முகத்தில் சற்றே தெரியும் பெண் தன்மையும் பலகோடி ரசிகைகளை கவர்கிறது. சில்வஸ்ரருக்கு அவரது வைரமான உடலும், ஆண்மைத் தனமான நடிப்பும் பலகோடி ரசிகைகளை வளைத்துப் போட்டிருக்கிறது. இரு பிரபலங்களும் இத்தாலியின் தலைநகரான ரோமில் சந்தித்துக் கொண்டபோது 'கிளிக்' செய்யப்பட்ட அபூர்வ படம். இரு வல்லவர்கள் ஒரே இடத்தில் சந்திப்பது அபூர்வமான விஷயம்தானே!

## மிரட்டும் சுவை

படத்தில் இருப்பது 'கேக்' என்பது பட்டென்று புரியும் சமாச்சாரம்தான். பார்த்தவுடன் நமக்கே வாயூறும் கேக்கை பதம் பார்க்கத் துடிக்கும் அரக்கப் பெண்மீது பொறாமை வருகிறதா? பொறாமையை விடுங்கள். கேக்கும் போலி. அரக்கப் பெண்ணும் போலி. போலியானாலும் அளவு பெரிசு. தினமும் பல நூறு பேரின் விழிகளுக்கு விருந்தாகும் 'கேக்' இது. ஃபிரான்சிலுள்ள டிஸ்னி லான்டில் பார்வையாளர்களையும், சிறுவர்களையும் கவர இந்தப் பிரமாண்டமான கேக்கை நிர்மாணித்திருப்பவர் மிஸ்டர் பிலிப்பி. (படத்தில் இருப்பவர்) அமெரிக்காவில் உள்ள சிறுவர் உல்லாசபுரியான 'டிஸ்னிலான்ட்' போல தறபோது ஜப்பானிலும், ஃபிரான்சிலும் உருவாக்கியிருக்கிறார்கள்.



## கைகொடுக்கும் கை



கம்போடியாவில் உள்நாட்டுப் போர் தலைவிரித்தாடியபோது இலட்சோப இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்தனர். அகதிகள் வெள்ளம், எங்கும அவதி. ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டது. படை அனுப்பியது. படைவீரர்கள் என்றால் பயந்து போயிருந்த மக்களுக்கு ஐ.நா. படைவீரர்கள் பயம் போக்கினார்கள். தேம்பியழும் குழந்தையும் அவர்கள் தோளில் தொற்றிக் கொண்டது.

நேற்று கம்போடியா. இன்று வடக்கிலும் அகதி வெள்ளம். ஆனால் ஐ.நா. வராது. தாங்கள் தலையிடுமளவுக்கு இழப்புக்கள் போதாது, அகதிகள் எண்ணிக்கை போதாது என்று நினைக்கிறார்களோ தெரியவில்லை.

வெளியுலகில் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு உள்ள செல்வாக்கும் ஐ.நா. இங்கு நேரடியாகத் தலையிடாமல் இருப்பதற்கு ஒரு காரணம்.

தற்போதைக்கு நம் மாங்காய்த்தீவில் ஐ.நா. தலையிடும் வாய்ப்பேயில்லை. கை கொடுக்கும் கையையும் நீளவைக்க ஒரு உந்துதல் தேவையல்லவா. அந்த உந்துதலைத் தடுக்கும் சக்தி தற்போதைக்கு அரசிடம் இருக்கிறது.



## எங்கள் தங்கம்

மனிதர்களுக்கு தங்கப் பதக்கம் மீது ஆசை. அந்த மனிதர்கள் வளர்க்கும் நாய்களுக்கும் பதக்கம் வெல்ல ஆசையிருக்காதா? அமெரிக்காவில் நடந்த நாய்ப் போட்டியில் அழகாலும், கம்பீரத்தாலும் தங்கப் பதக்கங்களை கௌவிக் கொண்ட நாய்கள் தான் படத்தில். (இடமிருந்து வலமாக, அன்தோசா, சுமிக்கஸ், காஷா-அதாவது வெற்றி நாய்களின் பெயர்கள்)



## 5000

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் ரமீஸ்ராஜா. ஷார்ஜாவிலும், பாகிஸ்தான் மண்ணிலும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தோல்வி காண்பது அபூர்வம். ரமீஸ்ராஜா கப்டனான பின்னர் இரண்டு மண்ணிலும் பயங்கர அடி வாங்கியது பாகிஸ்தான் அணி.

இத்தனைக்கும் ரமீஸ்ராஜா ஒன்றும் திறமை குறைந்தவரல்ல. சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் 5 ஆயிரம் ரன்கள் குவித்த பாகிஸ்தான் வீரர்களில் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். ஜாவித் மியண்டாட், சலீம் மாலிக் ஆகியோரையடுத்து ரமீஸ்ராஜாவின் பெயர் இடம் பெற்றுவிட்டது. 163 சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் 162 இன்னிங்ஸ் விளையாடி 5 ஆயிரம் ரன்களை குவித்துள்ளார் ரமீஸ்ராஜா.

கப்டன் சுமையும், தொடர்ந்து அணிக்கு ஏற்படும் தோல்வியும் ரமீஸ்ராஜாவின் திறமைகளை மறைக்குமளவுக்கு மிரட்டிக் கொண்டிருக்கின்றன.

ரமீஸ்ராஜாவை கப்டன் பதவியில் இருந்து தூக்க வேண்டும் என்ற குரலும் எழத் தொடங்கிவிட்டது.





படிப்பகம்